
JL
M211, N34TP
N35.1-11
199432

72 972 A

இதழ் 11.

# தமிழ்ப் பெருமாட்டி

OFFICE OF THE REG...
9-FEB 1957
MADRAS



ஜனவரி, 1935

வடுவூர் கே. துரைஸாமி ஐயங்கார், பி.ஏ.

ஈ211, N3475
N35.1.11
199432

# தமிழ்ப் பெருமாட்டி

இது 1934௵ மார்ச் மாதத்திலிருந்து தொடங்கி, ஒவ்வொரு மாதத்திலும் வெளியாகும் மாதாந்தப் பத்திரிகை. தமிழ் வளர்ச்சியின் பொருட்டு ஸ்ரீமான் வடுவூர்-கே. துரைஸாமி ஐயங்கார் அவர்கள் பி.ஏ.யால் திருவல்லிக்கேணியில் நிறுவப்பட்டுள்ள ஓரியன்டல் ஹோம் யூனிவர்ஸிட்டி என்னும் தமிழ் ஸ்தாபனத்தின் ஆதரவில் இப்பத்திரிகை நடத்தப்படுகிறது. இது ஒவ்வொரு மாதமும் 25உயன்று வெளியிடப்படும்.

வடுவூர் கே. துரைஸாமி ஐயங்காரே இதன் ஆசிரியரா யிருந்து சகல பொறுப்புகளையும் நேரில் வகித்து இதைப் பெரிதும் சிறப்பாக நடத்துகிறார்.

இதில் சாதாரண நாவலின் பக்க அளவில், அதாவது, டபில் கிரௌன் பதினாறாய் மடிக்கப்பட்ட அளவில், 112 பக்கங்கள் ஒவ்வொரு மாத சஞ்சிகையிலும் அடங்கியிருக்கும். இப்பக்கங்கள் பெரும் பாகத்திலும், திடும்பிரவேச மகாஜாலப் பரதேசியார் என்னும் மிக விநோதமான ஒரு தோடர் நாவல் எழுதப்பட்டு, பன்னிரண்டு மாதங்களில் முடிவுறும். இவ்வாறு முடிவுறும் நாவலின் விலை மாத்திரம் ரூ. 3-க்குமேல் பெறக் கூடியதாயிருக்கும்.

199432

## முக்கிய அறிவிப்பு

அடுத்த சஞ்சிகையோடு நமது தமிழ்ப் பெருமாட்டிக்கு ஓர் ஆண்டு நிறைந்த தென்பதை எமது சந்தா நண்பர்களும், அபிமானிகளும் அறிவார்கள். சென்ற பத்து மாதங்களாய் நாம் எழுதி வரும் திடும்பிரவேச மகா ஜாலப் பரதேசியார் என்னும் தொடர் கதையை அடுத்த சஞ்சிகையோடு முடித்துவிட வேண்டுமென்று சிலநண்பர்கள் கேட்டுக் கொண்வதைக் கருதி, அதை அப்படியே முடித்துவிடத் தீர்மானித்துவிட்டோம்.

ஆனல் நாவலுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 64 பக்கங்களில் கதையை முடிப்பது கூடாத காரியமாதலால், இம் மாதத்திலிருந்தே சமய ஆராய்ச்சி முதலிய இதர பகுதிகளை நிறுத்தி, சஞ்சிகை முழுதையும் நாவலாகவே எழுதியிருக்கிறோம். இதே போல அடுத்த சஞ்சிகையிலும் முற்றிலும் நாவலையே வெளியிட்டு கதையை ஒருவாறு முடிக்கக் கருதியிருக்கிறோம்.

வருகிற மார்ச் மாதத்திலிருந்து தொடங்கும் இரண்டாவது ஆண்டிலும் இதேபோல ஒரு புதிய தொடர் நாவலும், இதர விஷயங்களும் வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம்; அடுத்த ஆண்டில் வெளிவரப்போகும் நாவலின் பெயர் இன்னதென்பதை நாம் அடுத்த இதழில் வெளியிட உத்தேசிக்கிறோம்.

ஒவ்வாண்டில் நாம் சஞ்சிகையின் அளவைப் பெரிதாக்கி ஏராளமான படங்களுடன் மாதமிருமுறை வெளியிட வேண்டுமென்ற எண்ணத்துடன் பலவகையான முயற்சிகள் செய்து பார்த்தோமாயினும், நாம் எதிர்பார்த்த அளவிற்குக் காற்பங்குகூட நம் தமிழ்ப் பெருமாட்டிக்கு ஆதரவு ஏற்படவில்லையாதலால், இப்போது வெளியாகும் சஞ்சிகையை அச்சியற்றி வெளியிடத் தேவையான வசதிகள் நமக்குக் கிடைக்காமல் போகவே, எடுத்த காரியத்தை இடையில் நிறுத்திவிடா திருக்கும் பொருட்டு, நாம் ஒவ்வொரு மாதமும்

வேறு பல புஸ்தகங்களைப் பிறருக்கு எழுதிக் கொடுத்து, இந்த மெலிந்த குழந்தையை போஷிக்க வேண்டிய நிலைமையை மேற்கொண்டு, இடையில் நேரிட்ட பல இன்னல்களையும் அபாயங்களையும் மேற்கொண்டு இந்தத் தேரை இழுத்து அதன் நிலைக்குக் கொணர்ந்து விட்டோம்.

நாம் எழுதும் நூல்கள் முற்றிலும் கற்பனையாகவும், புதுமையாகவும் எழுதப்பட வேண்டுமாதலால், ஒவ்வொரு மாதமும் இதை எழுதித் தயாரிக்க ஏராளமான காலமும், ஒருமுகப் பட்ட மனச் சிந்தனையும் அவசியமென்பதைப் பலரும் அறிவர். மற்ற எந்தப் பத்திரிகையையோ, சஞ்சிகையையோ எடுத்துப்பார்த்தால், சொற்பசொற்பமாகப் பலரால் எழுதப்படும் விஷயங்களின் தொகுதியே வெளியாவது தெரியும். நமது சஞ்சிகை அவ்விதமாய் எழுதப்படுவதல்ல. எல்லாவற்றையும் பூர்த்தியாக ஒருவரே எழுதித் தயாரிக்கவேண்டும் இந்த சஞ்சிகையன்றி, ஒவ்வொரு மாதத்திலும் ஒருமுழு புஸ்தகத்தையும், இன்னும்பல விஷயதானங்களையும் தயாரிக்கவேண்டும். இவ்வளவு அதீதமான அளவுடைய மூளை வேலையை எப்போதும் செய்துகொண்டிருக்கும் அரிய பேற்றைக் கடவுள் நமக்கே ஏகபோகமாக அளித்திருக்கிறாரானாலும், அதைச் செய்து முடிக்கையில் ஒரு மனிதருக்கு எத்தனை இடையூறுகளும், துன்பங்களும் ஏற்படக் கூடுமோ, அல்லது, ஏற்படல் கூடாதோ, அவ்வளவும் குறைவில்லாமல் நமக்கு ஏற்படும் பெரிய அதிர்ஷ்டத்தையும் கூடவே கடவுள் நமக்களித்துக் கொண்டு வருகிறார். நமது நூல்கள் நிரந்தரமா யிருப்பவை; மற்ற சஞ்சிகைகளில் வருபவை அதோடு காலாவதியாகிவிடுபவை. எனவே, நாம் அவசரமின்றி நூல்களை சரியா யமைக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

ஆதலால் சஞ்சிகையின் வெளியீடு சில சந்தர்ப்பங்களில் சில தினங்கள் தாமதிக்கப் பட்டுப்போகிறது. பிறரால் வெளியிடப்படும் சஞ்சிகைகள் குறித்த காலத்தில் வெளிவந்து விடுகிறதென்றும், நம்முடையதே தாமதித்து வருகிறதென்றும் சில நண்பர்கள் குறைகூறி நமக்கு எழுதுகின்றனர்.

நம் சஞ்சிகைகளில்வெளியாகும் தொடர்கதை முதலியவைகளைப் போல்வேறு எவராலும் தயாரித்து வெளியிட இயலாதென்பது எல்

199432



லோருக்கும் தெரிந்த விஷயம். அத்தகைய அறிய பெரிய கற்பனைக் கோட்டையைக் கட்டி அலங்கரிப்பதில் அடங்கிய பிரயாசையும், எமக்கென்றே ஏகபோகமா யிருந்து வரும் வசதிக்குறைவுகளுமே சொற்ப தாமதத்திற்குக் காரணங்களா யிருக்கின்றன.

ஆதலால், நண்பர்கள் இவ்விஷயத்தில் எம்மை மன்னிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

மற்ற பத்திரிகைகளுக்கு சந்தாத்தொகையோடு வர்த்தக விளம்பரங்களில் ஏராளமான பொருளாதாயம் ஏற்படுகிறது. சிலர் சொந்த சரக்குகளை விற்பனை செய்வதற்கு கியாட்லாக் போல பத்திரிகையை நடத்துகிறார்கள். சிலர் போட்டிப் பந்தயங்கள் முதலிய சூதாட்டங்களையும் பத்திரிகையோடு கலந்து, அதனால் ஏராளமாகப் பொருள் பெறுகிறார்கள். இவ்வாறு பலவகைகளில் பணம் முட்டின்றி வருவதால், அவர்கள் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொண்டு பத்திரிகைகளை காலத்தில் வெளியிடுகிறார்கள். நம்மை ஆதரிக்கும் சொற்ப தொகையினரான அறிவாளிகளுடைய சந்தாப்பணமொன்றே நம் வருமானம். அது அந்தந்த மாதத்திற்குத் தேவையான காகிதம், அச்சுக் கூலி முதலியவற்றிற்கும் போதாததாகிவிடுகிறது. ஒரு நாட்டில் சூதாட்டத்தை நாடுவோர் ஐம்பதாயிரம் ஜனங்கள், அறிவை [illegible]ந்நூறு ஜனங்கள் என்றால், அங்கு இதைவிட வேறு நிலைமையை எதிர்பார்ப்பது தவறல்லவா.

ஆதலால், நாம் விவரிக்க வொண்ணாத பலவித இன்னல்களினிடையிலிருந்து மற்றப் பத்திராதிபர்கள் செய்வதை விடப் பன்மடங்கு அதிகமான வேலையைச் செய்து, சஞ்சிகைகளை வெளியிட்டு வருகிறோமென்பதை நாம் நமது சந்தா நண்பர்களுக்கு இதன் மூலம் விக்ஞாபனம் செய்து கொள்ளுகிறோம்.

இனி தொடங்கும் இரண்டாவது ஆண்டிலாகிலும் நமக்கு அதிகமான ஆதரிப்பு ஏற்படுமானால், சஞ்சிகையைப் பல வகைகளில் அபிவிருத்தி செய்து, மாதமிருமுறை வெளியிடக்கருதி யிருக்கிறோம். நம் சந்தா நண்பர்கள் தம் தம் மித்திரர்கள், உறவினர் முதலியோருக்கு இதைப்பற்றி சிபார்சு செய்து, தம் தம்மாலேன்ற வரையில் சிலரை சந்தாதாரர்களாய்ச் சேர்த்துவிடுவார் களானால் நமது உத்தேசம் மிக

விரைவில் நிறைவேறிவிடும். இந்த விஷயத்தில் அவர்களுடைய அன்பார்ந்த உதவியை நாம் நாடுகின்றனம்.

சந்தா நண்பர்கள் முதலாவது ஆண்டிற்கு உதவிய சந்தாத் தொகை அடுத்த சஞ்சிகையோடு முடிவடைகிறது. ஆதலால் எல்லோரும் இரண்டாவது ஆண்டின் சந்தாத் தொகையை இந்த பிப்ரவரி மாத முடிவிற்குள் நமக்கு வரும்படி அனுப்பி, நமது புது வருஷ முயற்சிக்குக் கை கொடுத்து உதவுவார்களென்று நம்புகிறோம்.

அவ்வாறு சந்தாத் தொகையை பிப்ரவரி மாதக் கடைசிக்குள் அனுப்புவோருக்கு ரூ. 1—8—0 விலையுள்ளதும், காலிகோ பைண்டு செய்யப் பெற்றதுமான தமிழ் இங்கிலாந்து தேச சரித்திர மொன்றை இனாமாய் அனுப்பத் தீர்மானித்திருக்கிறோம். இது எம்மால் எழுதப் பெற்று, மேல்நாட்டாரைப் பற்றி பல ஆச்சரியகரமான ஆராய்ச்சி உண்மைகளைக் கொண்டிருக்கும் நூல். இப் புத்தகத்தை அனுப்ப தபாற் செலவு 8-அணா பிடிக்குமாதலால், அதை மாத்திரம் சந்தாப் பணத்தோடு சேர்த்தனுப்ப வேண்டும். அதாவது இந்தியா, சிலோன், பர்மா ஆகிய உள் நாட்டு சந்தாதாரர்கள் ரூ. 2—8—0 வீதமும், வெளி நாட்டு சந்தாதாரர்கள் ரூ. 4. வீதமும் பிப்ரவரியின் முடிவிற்குள் அனுப்பினால், அவர்களுக்கு மேற்படி புஸ்தகம் ஒன்று இனாமாய் அனுப்பப்படும். இந்தத் தேதி வரம்பிற்குப் பிறகு அனுப்புவோருக்கு இந்த இனாம் புஸ்தகம் அனுப்பப்படமாட்டாது. அவர்கள் பழைய சந்தா விகிதப்படியே பணம் அனுப்பலாம்.

சில நண்பர்கள் ஒவ்வொருமாதமும் தனித்தனியாக விலைகொடுத்துப் பிரதிகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். அவர்களும் வருஷ சந்தா செலுத்தினால், அவர்களுக்கு 4 அணா சகாயம் ஏற்படுவதோடு, சஞ்சிகையின் அபிவிருத்திக்கும் அவர்களுடைய உதவி அநுகூலமானதாயிருக்கும். தமிழ் நாட்டு மக்கள்தம் எதிர்காலத்துக் காண்முளைகளுக்கு நிரந்தரமான இலக்கிய பொக்கிஷங்களை உற்பத்தி செய்யும் இந்தத் தமிழ்ப் பெருமாட்டிக் குழந்தைக்குப் போதிய ஆதரவை அளிப்பார்களென்று எதிர்பார்க்கும்

நூலாசிரியன்.

9-FEB 1935
MADRAS

## அத்தியாயம்—9

## கட்டழகியைத் தேடிய கலியுக மாருதி

தஞ்சை ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர் சந்திரசேகர் சுடப்பட்டது, கோபாலசாமிபிள்ளை கைதியாக்கப்பட்டது ஆகிய சம்பவங்கள் சம்பந்தமான தகவல்கள் மறுநாளைய பகலில் மன்னூர்க் குடிக்கு எட்டினவாதலால், அங்கிருந்த நான்கு குடும்பத்தினர் அபாரமான திகிலும், மனக் கலவரமும், பெருந்துயரமும் அடைந்து தத்தளிக்கலாயினர். கந்தசாமியின் தந்தையும், கோடீசுவரருமான வேலாயுதம்பிள்ளையவர்களும், அவருடைய பத்நியாரும், அவருடைய மூத்த குமாரரான கண்ணப்பாவும், கண்ணப்பாவின் மனையாட்டியும், புனிதவதியும், மானா வடிவாம்பாளும், இன்னும் அவர்களது மாளிகையிலிருந்த பணிமக்களும் திடுக்கிட்டு மலைத்து அவமானத்தினால் குன்றி அப்படி யப்படியே உட்கார்ந்துபோயினர்.

வடிவாம்பாளின் தந்தையும் தாயுமான இன்னொரு குடும்பத்தினரும் அதே நிலைமையை அடைந்தனர். அவர்களுடைய மாளிகைக்கு அடுத்த கட்டிடத்திலிருந்த கோபாலசாமிபிள்ளையின் தந்தையான வேணுகோபால பிள்ளையும், அவரது மனையாளும் தங்களது புதல்வனை உயி

ரோடு இழந்துவிட்டவர்கள் போல வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு ஐய்யோ முறையோவென்று அலறிப் புலம்பலாயினர்.

இன்னொரு பங்களாவிலிருந்த திகம்பரசாமியார், அவரது மனையாட்டியான சிவகாமியம்மாள், அவரது மைத்துனரான குமாரசாமிபிள்ளை ஆகியோர் மற்றவர்களைப் போலவே வேதனை யடையலாயினர்.

இக்கனை குடும்பத்தினருக்கும் துணையாக, நூற்றுக் கணக்கான அவர்களது உறவினர்களும் உற்றாரும் அந்த விபரீதச் செய்தியைக் கேட்டு பெரிதும் ஆற்றலாதமும் மனசஞ்சலமு மடைந்து, அதைப்பற்றி விசாரிக்கும் பொருட்டு வந்து வந்து சம்பாஷித்துத் தங்களது அநுதாபத்தைத் தெரிவித்துவிட்டுப் போயினர்.

அவ்வாறு கோபாலசாமிபிள்ளை உண்மையில் கெட்ட நடவடிக்கைகளில் இறங்கியிருக்கமாட்டார் என்ற உறுதியான நம்பிக்கை எல்லோரது மனதிலும் தோன்றியபடியே இருந்தாலும், அந்த ஊருக்கே ஒரு மகாராஜன் போன்ற நிலைமையில் இருந்து, எல்லா ஜனங்களாலும் மிக உன்னத பதவியில் வைத்து கௌரவிக்கப்படுபவர்களான வேலாயுதம் பிள்ளை முதலியோருக்கு அத்தகைய தலைகுனிவும், இழுக்கும் ஏற்பட்டுப் போனதையே முக்கியமாய் ஒவ்வொருவரும் குறிப்பிட்டு பெரிதும் தவித்தனர்.

அதுவன்றி, கந்தசாமிக்கும் கோபாலசாமிக்கும் அடுத்த வாரத்தில் தமது மாளிகையிலேயே ஒன்றாக விவாகம் நடத்த வேண்டுமென்ற கருத்துடன் வேலாயுதம்பிள்ளை சுமார் லக்ஷம் ரூபாய்வரையில் செலவிட்டு, பெரிய பெரிய அலங்காரக் கொட்டகைப் பந்தல்களமைத்து, குன்று குன்றாகப் பொருள்களைச் சேகரித்து, இரண்டு இராஜகுமாரர்களு



டைய விவாகத்திற்கு எத்தனை ஏற்பாடுகள் செய்யப்படுமோ அத்தனையையும் செய்து வைத்துவிட்டாராதலால், அதுபற்றி ஒருவரோடொருவர் ஓயாமல் சம்பாஷித்து அளவளாவியிருந்த நிலைமையில் திடீரென்று முகூர்த்த தினத்தை ஒத்தி வைக்கும்படி கந்தசாமியிடத்திலிருந்து தந்திச்செய்தி கிடைத்ததே எல்லோருடைய மனத்திலும் பெரிய இடிபோலத் தாக்கி, அபாரமான வேதனையையும், ஏமாற்ற வுணர்ச்சியையும் உண்டாக்கியிருந்த தாகையால், அதற்கு மூன்றாவது நாளைய பகலில் அவ்வித விபரீதச் செய்தி கிடைக்கவே, எல்லோரும் திடுக்கிட்டு பிரமித்துக் கலகலத்து நிலைகலங்கிப் போயினர்.

கோபாலசாமி பிள்ளையின் தாய்தந்தைய ரிருவரும் அவ்வளவாக செல்வாக் கில்லாதவர்க ளாதலாலும், அவர்களது குமாரருக்கு டிஸ்டிரிக்ட் முன்சீப் உத்தியோகம் கிடைத்ததும், திருநடன வைபவம்பிள்ளையின் சம்பந்தம் கிடைப்பதும் வேலாயுதம்பிள்ளை வீட்டாரின் செல்வாக்கினாலேயே யாதலாலும், தந்தையும், தாயும், ஓடோடியும் சென்று முறையே வேலாயுதம்பிள்ளை, அவரது மனையாள் ஆகியோரின் கால்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீரை ஆறாய் ஓடவிட்டு, அந்தப் பெரிய அபாயத்திலிருந்து தங்களுடைய குமாரரைத் தப்பவைக்க வேண்டுமென்று மன்றாட, இருவரும் அவர்களுக்கு தைரியமொழிகள் கூறித் தம்மாலேன்ற முயற்சிகளைத் தாம் உடனே செய்கிறோமென்று வாக்களித்து, அவர்களைத் தேற்றித் தமது மாளிகையிலேயே வைத்துக் கொண்டதன்றி, உடனே கண்ணப்பாவை திகம்பரசாமியாரிடம் துரத்தினர்.

கண்ணப்பா அந்தக் குடும்பத்தின் சகல பொறுப்புகளையும், நிர்வாகங்களையும் ஏற்று அபார சாமர்த்தியத்

தோடு பண்ணைகள், குடும்பம் ஆகியவற்றின் காரியங்களை நடத்திவந்தவராதலால், அவர் எத்தகைய அரிய பெரிய காரியத்தையும் ஒரு பொருட்டாய் மதிப்பவ ரல்லவர். அவருக்குக் கீழ் ஆயிரக்கணக்கான பண்ணையாட்களும், குமாஸ்தாக்கள் முதலிய இதர சிப்பந்திகளும் இருந்தனராதலால், ஒரு மலையைத் தூளாக்கி ஏரியாக்கவேண்டுமென்று அவர் கருதுவாராயின், அவர் மனதால் நினைக்கு முன் அத்தகைய காரியம் முடிந்துபோயிருக்கும். அவ்வளவு அபாரமான செல்வாக்கும் ஆள்கட்டும் அவருக்கு இருந்தனவானாலும், பழைய காலத்தைய சில துஷ்டர்களைப்போல், கண்ணப்பா அவைகளை எவ்வித கெட்ட காரியத்திலும் பயன் படுத்தாமல் பரோபகாரமான புண்ணிய கருமங்களிலும், பண்ணைகளின் அபிவிருத்தியிலும், சத்திரம், சாவடி, குளங்கள், கோவில்கள், பாடசாலைகள், கைத்தொழில்சாலைகள் முதலியவற்றை ஏற்படுத்துவதிலும் பயன்படுத்தி, மிக அரிய உத்தமகுண சற்புத்திரர் என்ற பெயரையும் புகழையும் சம்பாதித்துக் கொண்டிருந்தார்.

அப்போது அவருக்கு சுமார் முப்பத்தைந்து வயது நிறைந்துபோயிருந்ததானாலும், தந்தைக்கு முன் வரவோ, அவரிடம் உரத்த குரலில் பேசவோ, அவருடைய கருத்திற்கு முரணாக நடக்கவோ அவர் துணியமாட்டார். தந்தை அவரை, "பெரிய தம்பி" என்று அன்பொழுக அழைப்பாரானாலும், கண்ணப்பா போஜன மத்தியிலிருந்தால் கூட திடுக்கிட்டு அப்படியே எழுந்து, கை கால்களை யலம்பிக்கொண்டு, மேல் வஸ்திரத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு, ஓடோடியும் வந்து, ஒரு கம்பத்தின் மறைவில் பயபக்தி விநயத்தோடு நின்று, "ஏன்?" என்று மிகத் தணிவான குரலில் வினவுவார். அப்போது அவருடைய கைகள் மார்பின் மேல்



போய்ச் சேர்ந்து நிற்கும். இவ்வாறு அவர் தமது தந்தையிடம் நடப்பது பிறவிக் குணம்போல் அவரிடம் வேரூன்றிப்போயிருந்தது.

ஆனால், சிலர் தந்தைக்கு எதிரில் அவ்வாறு வெளிவேஷம் காட்டிவிட்டு, அவரை விட்டு அப்பால் போனபிறகு தமது தாய், மனைவி முதலியோரிடம், "அப்பாவுக்கு வயதாய்விட்டது; அவருடைய கர்னாடக புத்தி போகவில்லை; பைத்தியக்காரத்தனமாகப் பேசுகிறார்" என்று இளக்காரமாக மொழிவதுபோலின்றி, கண்ணப்பா உள்ளும் புறமும் ஒத்தபடியே எப்போதும், எவ்விடத்திலும் நடந்துகொண்டார்.

அதுவன்றி, 'தாய்' என்றால் அவருடைய மனதில் ஏற்படும் வாத்சல்ய உணர்ச்சியும், மதிப்பும், மரியாதையும், உருக்கமான பயபக்தி விநயப்பணிவும் அளவிட இயலாதவை. தமது தாய்க்கு ஏதேனும் மனக்குறை ஏற்பட்டு, அது ஹிமாலயமலைமீதுள்ள புலியின் பாலினால் நிவர்த்தியாகக் கூடியதாயிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். எத்தனை துன்பங்களோ, இடர்களோ, பட்டினி பசிகளோ இடையில் ஏற்படினும் அவ்வளவையும் பொருட்படுத்தாமல், அவர் அதைக் கொணர்ந்து கொடுத்துவிட்டே தலைசாய்த்துப் படுப்பார்.

அவருக்கும் அவருடைய மனையாட்டியான வடிவாம்பாளுக்கும் இருந்துவந்த மனோலய ஐக்கியத்தன்மையை நாம் கும்பகோணம் வக்கீல், மாயாவிநோதப்பரதேசி முதலிய நாவல்களில் விளக்கியிருக்கிறோமாதலால், அதைப்பற்றி மறுபடி நாம் அதிகமாய்த் தெரிவிப்பது மிகையாகும்.

இவ்வளவையும்விட, அவர் தமது தம்பி கந்தசாமியிடம் வைத்திருந்த பிரியத்திற்கும், மதிப்பிற்கும் இராம

னுக்கும், பரதனுக்கும் இருந்த அன்னியோன்னியத் தன்மையை நாம் ஒப்பிடலாமாயினும், அதில் அண்ணனுடைய இராஜ்யத்தைத் தம்பி பரிபாலித்தது, இளைய மனையாளின் சொற்படி தந்தை மூத்த மனையாளின் புதல்வனைக் காட்டிற்கு அனுப்பியது என்பனபோன்ற பரமசங்கடமான அம்சங்கள் இவர்களது குடும்ப வாழ்க்கையில் இல்லையாதலால், இவ்விரண்டு சகோதரர்களது தொடர்பும், நிஷ்களங்கமானதும், நிஷ்காம்யமானதுமான இணையற்ற மேலான வாத்சல்யமாயிருந்தது. இளைய தாய், தந்தை முதலியோர் உத்தரவு கொடாமல், கந்தசாமியே தனது மூத்த சகோதரரை நோக்கி, "அண்ணா, எனக்கு எல்லா சொத்துகளும் வேண்டும்; உனக்கு எதுவும் இல்லை. நீயும் உன் சம்சாரமும் இடுப்பு ஆடைகளோடு எங்கேயாகிலும் போய்விட வேண்டும்" என்று சொல்வதாக நாம் வைத்துக்கொள்ளுவோம். கண்ணப்பா நிச்சயமாய் அதேபோல நடந்து கொள்ளத் தக்க மனப் போக்குடைய உத்தமமான சகோதரர்; அதைவிடப் பன்மடங்கு சிலாக்கியமான முறையில் கந்தசாமி கண்ணப்பாவிடம் நடந்துகொண்டார்.

அப்போது கண்ணப்பாவிற்கு ஐந்து வயதடைந்த ஒரு பெண் குழந்தையும், இரண்டு வயதடைந்த ஓர் ஆண் குழந்தையும் ஏற்பட்டிருந்தனவாதலால், கந்தசாமி விடுமுறை தினங்களில் மோட்டார் வண்டியில் மன்னார்குடிக்கு வந்து விட்டால், இரண்டு குழந்தைகளையும் ஓயாமல் தூக்கி மடிமீது வைத்துக் கொஞ்சி, தாமும் அவர்களுடைய நிலைமைக்கு இறங்கி, மழலைமொழி பேசிப் பொழுதைப் போக்குவார். குழந்தைகளிரண்டையும் இரண்டு பிரத்தியக்ஷ சொர்க்கமாக பாவித்து, பசி, தாகம் முதலிய எவ்வித தேகாவஸ்தையையும் உணராமல் அந்த நிகரற்ற இன்பத்தி



லேயே லயித்துப்போயிருப்பார். அவர் சிறந்த படிப்பாளியாதலால், எந்தக் காலத்திலும் மேலான தத்துவங்களைப் பற்றி சிந்திப்பதிலும், பேசுவதிலுமே அவருடைய மனம் நிகரற்ற இன்பமடைந்ததானாலும், அவர் தம் தமயனாரது குழந்தைகள் சம்பந்தப்பட்ட வரையில், அப்போதும் குழந்தைப் பிராயத்தினராகவே இருந்துவந்தார்.

அத்தகைய அபூர்வமான குணம் வாய்ந்த திருத்தம்பியாரைக் கண்ணப்பா தம் உயிருக்குயிராக எண்ணுவது ஒரு பெரிய காரியமா? கண்ணப்பா கந்தசாமியோடு மாத்திரம் நிற்காமல், அவருடைய ஆப்த நண்பர்களான கோபாலசாமி, துரைஸாமி ஆகியோரையும் தம் சகோதரர்கள் போலவே மதித்து சிறிதும் வேற்றுமையின்றி நடந்துவந்தார்.

இவையன்றி, கந்தசாமியும் தம்மைப்போல மனைவி மக்களுடன் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிராமல், மனைவியை இழந்து ஏகாங்கியாயிருந்துவருகிறாரே என்ற மனக்குறை கண்ணப்பாவின் மனதில் அபாரமாக உறைத்துக் கொண்டே இருந்ததாகையால், முக்கியமாக அவருடைய விடாமுயற்சியின் பயனாகவே திருநடன வைபவம் பிள்ளையின் குமாரத்திகளை முறையே கந்தசாமிக்கும், கோபாலசாமிக்கும் வாழ்க்கைப்படுத்திக் கொள்வதென்னும் முடிவு ஏற்பட்டதாகையால், அவர் அந்த வைபவத்தை தேவேந்திரனுடைய விவாகம்போல் கொண்டாட வேண்டுமென்ற உரமான ஆவேசமும் வேட்கையும் கொண்டு தம்மை மறந்து அரிய பெரிய ஏற்பாடுகளையும் முஸ்தீப்புகளையும் செய்து கொண்டிருந்தாராதலால், அந்த நிலைமையில், கந்தசாமி, எவ்வித முகாந்திரமுமின்றி, முகூர்த்தத்தை ஒத்திவைத்தது அவரால் சகிக்கவொண்ணாத பலவித உணர்ச்சிகளை

உண்டாக்கவே, அவற்றால் கண்ணப்பா தத்தளித்திருந்த சமயத்தில் கோபாலசாமியைப்பற்றிய விபரீதச் செய்தி அவருடைய மனதில் பேரிடியின் அதிர்ச்சியை உண்டாக்கிப் பித்தர்போலாக்கிவிடவே, அவர் நிலைகலங்கித் தவித்து, தாம் செய்வதின்னதென்பதை நிச்சயிக்கமாட்டாமல், தமது மோட்டார் வண்டியில் உட்கார்ந்துகொண்டு, அடுத்த வீதியில் இருந்த திகம்பரசாமியாருடைய பங்களாவிற்குப் போய்ச் சேர்ந்தார்.

அப்போது திகம்பரசாமியார், தமது மைத்துனரோடு கோபாலசாமியின் விஷயத்தைப்பற்றி நிரம்பவும் ஆவலோடும், மனவேதனையோடும் சம்பாஷித்திருந்தாராதலால், கண்ணப்பா இன்ன காரியமாய்த்தான் வந்திருக்கவேண்டுமென்பதை உடனே யூகித்துக்கொண்டாரானாலும், அதை வெளியிடாமல் வழக்கப்படி கண்ணப்பாவை உவப்போடு வரவேற்று, உட்கார்ந்துகொள்ளும்படி கூறி உபசரித்தார்.

கண்ணப்பா திகம்பரசாமியாரிடம் வந்த ஒவ்வொரு தடவையிலும், உட்கார்ந்துகொள்ளும்படி சாமியார் அன்போடு வற்புறுத்திக் கூறினாரானாலும், கண்ணப்பா 'உட்காருகிறேன்' என்று வணக்கமாக மறுமொழி கொடுப்பாரானாலும், அடக்கவொடுக்கமாக நின்றுகொண்டே மிக விநயமாக அவருடன் சம்பாஷிப்பார்; எத்தனை நாழிகை காலம் பேசிக்கொண்டிருந்தாலும், கண்ணப்பா அதே நிலைமையில் இருப்பாரேயன்றி, உட்காரவும் மாட்டார்; தமது பயபக்தி விநயவொழுக்கத்தில் எள்ளளவும் தளர்வடையவும் மாட்டார்.

அதேபோல கண்ணப்பா இந்த சந்தர்ப்பத்திலும் நின்று, சாமியார் முதலியோருடைய தேக நிலைமையைப்பற்றி



உருக்கமாகக் குசலம் விசாரித்தபின்னர், "தஞ்சாவூர்ச் செய்தி ஸ்வாமிகளுக்குத் தெரியுமா?" என்றார்.

சாமியார்:—தெரியும் தம்பி; போலீஸ் அதிகாரியொருவர் என்னிடம் நிரம்பவும் மதிப்புடையவர்; இன்றைய விடியற்காலையில், அவர் எனக்கு டெலிபோன் மூலம் அந்தச் செய்தியைத் தெரிவித்தார். உடனே நானும், குமாரசாமியும் மோட்டார் வண்டியில் போய் விஷயங்களைத் தெரிந்துகொண்டு கால் நாழிகை காலத்திற்கு முன்னர் தான் இங்கே வந்தோம்—என்றார்.

அதைக் கேட்ட கண்ணப்பா திடுக்கிட்டு வியப்படைந்தார்; அவருடைய மனதில் நன்றியறிதலுணர்ச்சி பொங்கி வழியத் தொடங்கியது. தாங்கள் மனதால் நினைக்கு முன் சாமியார் அவ்வளவு அக்கரையாகவும், பொறுப்பாகவும் தங்களது விஷயத்தை அவருடையதாக மதித்து முன்னெச்சரிப்பாக நடந்து, உடனே தஞ்சைக்கு ஓடி விஷயங்களைத் தெரிந்துகொண்டு வந்திருக்கிறாரே என்னும் நினைவு அவருடைய மனதை அபாரமாக இளக்கிவிட்டது.

அவர் சாமியாரை நோக்கி வணக்கமாகக் கைகுவித்தபடி, "அப்படியா! ஜனங்கள் பேசிக்கொள்ளும் விஷயம் உண்மைதானா? தம்பி கந்தசாமி தங்களைப் பார்த்தானா? அவன் என்ன சொன்னான்?" என்று நிரம்பவும் ஆவலோடு வினவினார்.

சாமியார்:—ஜில்லா ஜட்ஜ் சுடப்பட்டது உண்மையே. கோபாலசாமி சுடவில்லையென்று நான் திருப்தி செய்துகொண்டேன். ஆனால் போலீஸார், வேறே குற்றவாளி அகப்படுகிறவரையில், கோபாலசாமியை விடுவார்களென்று நான் நினைக்கவில்லை. தம்பி கந்தசாமி தஞ்சாவூரில் இல்லை. இங்கே உனக்குத் தந்தி யனுப்பிய தினத்தன்றே அவன்

சென்னைப்பட்டணத்திற்குப் போய்விட்டானும். எல்லாவிஷயங்களையும் நான் கோபாலசாமியிடத்திலிருந்து தெரிந்துகொண்டேன்.

கண்ணப்பா:—நாம் ஒரு வக்கீலை அமர்த்தி கோபாலசாமியை ஜாமீனில் விடும்படி மனுச்செய்து கொள்ளலாமல்லவா?

சாமியார்:—நம்முடைய வக்கீல் கோதண்டமையங்காரிடம் போய், விஷயத்தை அவரிடம் சொல்லி, உடனே ஜாமீன் மனுக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு வந்திருக்கிறேன். ரொக்க ஜாமீன் எவ்வளவு கேட்டாலும் தொகையை அவரே உடனே கட்டிவிட்டு, நமக்கு அவசரத்தந்தி யனுப்பும்படி திட்டப்படுத்தி யிருக்கிறேன். அவர் இந்நேரம் மனுக்கொடுத்திருப்பார். ஆனால் நான் போலீஸாரோடு பேசிப் பார்த்ததில், அவர்கள் ஜாமீனில் விடக்கூடாதென்று தடுக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. அநேகமாய் மாஜிஸ்டிரேட் மனுவைத் தள்ளிவிடுவார் என்றே நினைக்கிறேன்.

கண்ணப்பா:—(கவலையும் விசனமும் காட்டிய முகத்தோடு) கோபாலசாமி பொறுப்பு வாய்ந்த ஒரு முன்சீப் பதவியை வகிப்பவன்; ஏதோ தவறுதலாக அவன் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்பதுகூட போலீஸாருக்குத் தெரியவில்லையா. அவனை ஜாமீனில் விட்டால், தன் உத்தியோகத்தை விட்டு ஓடிப்போய் விடுவானா? அவனுக்கு விவாகத்திற்கு முகூர்த்தம் நிச்சயமாயிருக்கிறதென்னும் விஷயத்தைக்கூட வக்கீல் மாஜிஸ்டிரேட்டிற்குச் சொல்லலாமே.

சாமியார்:—அதையும் தெரிவிக்கும்படி வக்கீலிடம் சொல்லியிருக்கிறேன்.



கண்ணப்பா:—மாஜிஸ்டிரேட் அநேகமாய்ப் போலீஸாருடைய அபிப்பிராயத்தை அநுசரித்துத்தானே நடந்துகொள்வது வழக்கம்?

சாமியார்:—கீழே இருக்கும் மாஜிஸ்டிரேட்டுகள் அநேகமாய் அப்படித்தான் செய்கிறார்கள்.

கண்ணப்பா:—அதற்கு மேல் அப்பீல் இல்லையோ?

சாமியார்:— இல்லாமல் என்ன. அதற்கு மேல் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் மனுப்போடலாம்; பிறகு சென்னையில் உள்ள ஹைகோர்ட் நீதிஸ்தலத்தில் முயற்சித்துப் பார்க்கலாம்.

கண்ணப்பா:—அவர்களும் போலீஸாருடைய அபிப்பிராயத்தைத் தழுவியேதான் நடந்துகொள்வார்களோ என்னவோ?

சாமியார்:—அவர்கள் சில சமயங்களில் போலீஸாருடைய சிபார்சைப் புறக்கணித்தும் உத்தரவு செய்வதுண்டு. கீழ் மாஜிஸ்டிரேட் ஜாமீன் மனுவைத் தள்ளுபடி செய்தால், ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கும் அப்பீல் மனு தாக்கல் செய்யும்படி நான் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அங்கேயும் நமக்குப் பிரதிகூலமே ஏற்படுமானால், உடனே நாம் சென்னைக்கு யாரையாவது அனுப்பி, அங்கே முயற்சிக்க வேண்டும்.

கண்ணப்பா:—அதுவரையில் கோபாலசாமியின் சாப்பாடு முதலியவைகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டாமா?

சாமியார்:—கந்தசாமியின் ஜாகையில் அவனுடைய சமயல்காரர் ஒருவர் இருக்கிறார்; வேளை தவறாமல் கோபாலசாமியின் தேவைகளை கவனிக்கும்படி அவரிடம் சொல்லி விட்டு, நான் செய்திருக்கும் ஏற்பாடுகளையெல்லாம்

கோபாலசாமியிடத்திலும் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறேன். எல்லாவற்றிற்கும் நாம் யாராவது மாறி மாறி அடிக்கடி போய் கோபாலசாமியையும் வக்கீலையும் பார்த்து நிலைமையைத் தெரிந்துகொண்டு வரவேண்டும்.

கண்ணப்பா:—அதை நானே கவனிக்கிறேன். கோபாலசாமி ஏதேதோ தகவல்களைத் தெரிவித்தானென்றீர்களே! என்ன தெரிவித்தான்?—என்றார்.

திகம்பரசாமியார் தம்மிடம் கோபாலசாமி கூறிய முக்கியமான தகவல்களை வெளியிட்டார். புஷ்பாங்கி என்று கையெழுத்திட்டுக் கடிதம் வந்தது முதல், தாம் ஜில்லா ஜட்ஜியின் பங்களாவில் கொண்டுபோய் விடப்பட்டது வரையில் நிகழ்ந்த விஷயங்களையெல்லாம் கோபாலசாமி திகம்பரசாமியாரிடம் கூறி, தாம் அவைகளைப் போலீசாருக்குத் தெரிவிக்கலாமாவென்று அவருடைய ஆலோசனையைக் கேட்க, சாமியார் அது பற்றி வக்கீலிடம் கலந்து யோசனை செய்து, அவைகளை கோபாலசாமி போலீசாரிடம் தெரிவிக்கலாமென்று அவரிடம் கூறினாராதலால், அத் தகவல்களை அவர் கண்ணப்பாவிடம் தெரிவித்தார்.

அதுவன்றி, சென்னை தேனாம்பேட்டையிலிருந்து மோகனாம்பாள் என்ற கையெழுத்தோடு வந்த கடிதத்தின் விஷயத்தையும், அதன் உண்மையைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு கந்தசாமி துரைசாமியுடன் சென்னைக்குப் போனதையும் கோபாலசாமி திகம்பரசாமியாரிடம் கூறியதன்றி, அதை வேலாயுதம்பிள்ளை முதலியோரிடம் தெரிவிக்க கந்தசாமி விரும்பவில்லையென்றும் கூறினாராதலால், அந்தச் செய்தியையும் சாமியார் கண்ணப்பாவிடம் கூறி எச்சரித்து வைத்தார்.



கந்தசாமியின் தந்தை தாய் முதலியோருக்கு தேனாம்பேட்டைக் கடித விஷயம் தெரியுமானால், அவர்களுடைய மனதில் அதிருப்தியும் வெறுப்பும் உண்டாகிவிடுமென்று எல்லோரும் அபிப்பிராயப் பட்டனராதலால், கண்ணப்பாவும் தாம் அவ்விஷயத்தில் எச்சரிப்பாக நடந்து கொள்வதாய்க் கூறினார்.

அவ்வாறு விஷயங்களைத் தெரிந்துகொண்ட கண்ணப்பா அபாரமான ஆச்சரியமும், மலைப்பும் கொண்டு அப்படியே சிறிது நேரம் ஓய்ந்திருந்த பின், "கோபாலசாமியை மோசக்கருத்தோடு புஷ்பாங்கியின் ஆள்கள் ஜட்ஜியின் பங்களாவில் கொண்டுபோய் விட்டார்கள் என்பதே உண்மையில் நடந்த விஷயமானால், ஜட்ஜியை சுட்டது வேறே மனிதனாயிருக்கவேண்டும். அப்படி அழைத்துக்கொண்டு போய் விட்ட ஆள்களில் ஒருவனே மேலே ஏறி ஜட்ஜியை சுட்டு விட்டு ஓடி வந்திருக்கலாமல்லவா?" என்றார்.

அப்போது அருகிலிருந்த திகம்பரசாமியாருடைய மைத்துனரான குமாரசாமிபிள்ளை, "ஜட்ஜியினுடைய மனைவியின் நடத்தையைப்பற்றி அவரே சம்சயப்பட்டுக் கொண்டிருந்ததாக சேவகர்கள் சொல்வதைப் பார்த்தால், அந்த மனைவியோ, அல்லது, அவளுடைய கள்ளப்புருஷனோ தற்செயலாக அந்த சமயத்தில் சுட்டிருக்கலாமென்று நினைக்க இடமுண்டாகிறதல்லவா?" என்றார்.

கண்ணப்பா:—அவள் அதிகமாய்க் குடித்து மயங்கிக் கிடந்ததாகவும், காலையில் எழுந்து ஒன்றையுமறியாதவள் போல் நடந்துகொண்டதாகவும் சொல்வதைக்கொண்டு அதை நாம் எந்த விதமாகவும் வியாக்கியானம் செய்யலாம். உண்மையிலேயே அவள் நிரபராதியாயிருக்கலாம்; அல்லது,

அவள் உண்மையைத் தெரிந்துகொண்டே, மயங்கிக் கிடந்தவள்போல் பொய்யாக நடித்திருக்கலாம்.

திகம்பரசாமியார் :—கோபாலசாமியின் கையெழுத்துடைய கடிதம் ஜட்ஜியின் சட்டைப்பைக்குள் எப்படி வந்திருக்கும்?

குமாரசாமிபிள்ளை :—உண்மையில் அந்த அம்மாளுக்கு வேறு எவனாகிலும் கள்ளப்புருஷன் இருந்து, அவனுடைய விலாசம் தற்செயலாய் ம. வே. கோ. என்றிருக்கலாமல்லவா.

கண்ணப்பா :—இருக்கலாம். அவன் அந்தப் புஷ்பாங்கிக்கும் வேண்டியவனா யிருக்கவேண்டும். புஷ்பாங்கி கோபாலசாமியை ஒன்பது மணிக்கு வரவழைத்திருக்கிறாள்; கள்ளப்புருஷன் தன்னுடைய கடிதத்தில் 9½-மணிக்கு தான் வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறான். கோபாலசாமியை அழைத்துக்கொண்டு போய், உபசரித்து, ஜட்ஜியின் பங்களாவில் கொண்டுபோய் விடுவதற்கு சுமார் அரைமணியாகலா மாதலால், அதற்காக 9½ என்று குறிக்கப்பட்டிருக்கலாம். ஆகையால் இந்த மணிக்கணக்கு விஷயத்திலும் ஒற்றுமை யிருக்கிறது. இதுவும் தற்செயலாய் ஏற்பட்ட ஒற்றுமையா யிருக்க முடியுமா? ஆகையால், அந்தக் கள்ளப்புருஷனும் புஷ்பாங்கியும் கலந்தே இதை நடத்தியிருந்தாலன்றி, மற்றப்படி, இது இப்படி யெல்லாம் நடப்பது சாத்தியமானதல்லவென்று என் புத்திக்குப் படுகிறது.

குமாரசாமிபிள்ளை :—அப்படி அந்தக் கள்ளப்புருஷன் புஷ்பாங்கிக்கு வேண்டிய மனிதன் என்று நாம் வைத்துக் கொள்வதிலும் ஓர் ஆட்சேபனை இருக்கிறது. புஷ்பாங்கி கடிதம் எழுதியது கந்தசாமிக்கு; அவள் எதிர்பார்த்ததும் கந்தசாமியின் வருகையையே. கந்தசாமி ஊரில் இல்லையென்பதும், அவனுடைய கையெழுத்தைப் போட்டு கோபால



சாமி கடிதம் எழுதினானென்பதும், கோபாலசாமியே இரவில் வரப்போகிறான் என்பதும் புஷ்பாங்கிக்கு முன்னாகவே எப்படித் தெரிந்திருக்கும்?

கண்ணப்பா :—அது முக்கியமான கேள்விதான்.

திகம்பரசாமியார் :—இவ்வளவு சாமர்த்தியமாக வேலை செய்யும் புஷ்பாங்கிக்கு கந்தசாமியின் வீட்டில் நடக்கும் காரியங்களை யெல்லாம் உடனுக்குடன் தெரிவிக்க ஒரு மனிதன் இல்லாமலா போய்விடுவான். கந்தசாமிக்கு இரண்டு சமயல்காரர்களும், பல சேவகர்களும் இருந்தனர். அவர்களுக்குள் எவனாவது ஒருவன் புஷ்பாங்கியின் உள்ளாளா யிருக்கலாம்; அவன் உடனுக்குடன் விஷயங்களை அவளுக்குத் தெரிவித்திருக்கலாம். ஆனால், இது வெறும் யூகமேயன்றி, இதுதான் உண்மை யென்று நாம் இப்போது வைத்துக்கொள்வது சரியல்ல.

குமாரசாமிபிள்ளை :—அப்படியானால் இந்தப் புஷ்பாங்கி கந்தசாமிக்கு என்ன கருத்தோடு கடிதம் எழுதியிருப்பாள்? அவள் இப்படிப்பட்ட பெரிய சதியாலோசனைகளில் சம்பந்தப்பட்டவளா யிருந்தால், அவள் கந்தசாமியை விவாகம் செய்துகொள்ள உத்தேசித்தே இருக்கமாட்டாள்.

கண்ணப்பா :—அப்படியானால், கந்தசாமி போயிருந்தால், அவன் இப்போது கோபாலசாமியின் நிலைமையில் சிறைச்சாலையில் இருப்பான்.

திகம்பரசாமியார் :—கந்தசாமியே போயிருந்தால், ம. வே. கோ. என்ற கையெழுத்துக்கும், அவனுடைய பெயருக்கும் ஒற்றுமை யிராதே.

குமாரசாமிபிள்ளை :—அப்போது ம. வே. க. என்று அந்தக் கடிதத்தில் எழுதி யிருந்தாலும் இருப்பார்கள்.

திகம்பரசாமியார் :—அப்படியானால், எவன் போகிறானோ, அவனுடைய பெயரைப் போட்டு, பொய்யாக அவர்களே கடிதம் எழுதுகிறார்கள் என்று அர்த்தமாகிறது. ம. வே. கோ. என்ற பெயருடைய ஒரு கள்ளப்புருஷன் ஜட்ஜியின் மனைவிக்கு இருக்கவேண்டுமென்பதென்ன? அவனுடைய பெயர் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்; அல்லது, அந்த அம்மாளுக்குக் கள்ளப்புருஷனே இல்லாமலும் இருக்கலாம்.

குமாரசாமிபிள்ளை:—அந்த அம்மாளுக்குக் கள்ளப்புருஷன் இல்லாமலுமிருக்கலாமென்றால், அவள் சுத்த நிரபராதியா? தனக்கு ஒன்றும் தெரியாதென்று அவள் சொல்வது நிஜமா? அப்படியானால் ஜட்ஜியை சுட்ட மனிதர், அவருடைய மனைவிக்குத் தெரியாதபடி வந்து ஒளிந்திருந்து சுட்டாரா?

கண்ணப்பா :—கோபாலசாமியை மோட்டார் வண்டியில் வைத்து அழைத்துக்கொண்டுபோய் விட்ட ஆள்களில் ஒருவனே மேலே ஏறிப்போய் மறைவிலிருந்து ஜட்ஜியை சுட்டுவிட்டுக் கீழே இறங்கி வந்து மற்றவர்களோடு மோட்டார் வண்டியில் ஏறி ஓடியிருக்கலாமல்லவா?

திகம்பரசாமியார்:—அப்படி நடந்ததாக நாம் வைத்துக்கொண்டாலும், ஜட்ஜியின் மனைவி இதில் சம்பந்தப்படவே இல்லையென்று கருதினாலும், நாம் இன்னொரு விஷயத்தை அநுமானித்துக்கொள்ள வேண்டியதாகிறது. ஜட்ஜியின் மனைவி எவனோ ஒருவனைக் கள்ளக்காதலனாய் வைத்துக் கொண்டிருக்கிறாள், அல்லது, ஜட்ஜி அவளுடைய கற்பைப்பற்றி சந்தேகப்பட்டு அடிக்கடி அவளைக் கண்டிக்கிறார் என்னும் விஷயம் அந்தப் புஷ்பாங்கியின் கோஷ்டி



யாருக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். ஜட்ஜியின் பங்களாவிற்குள் நடக்கும் இரகசிய காரியங்கள் அவர்களுக்குத் தெரியவேண்டுமானால், அந்த பங்களாவில் இருந்து பழகுகிற மனிதர்களில் ஒருவன் புஷ்பாங்கியின் கோஷ்டியாருக்கு உள்ளாளா யிருக்கவேண்டும். அவன் அங்கே நடக்கும் விஷயங்களை அவர்களுக்குச் சொல்லியிருக்கவேண்டும். அவைகளை வைத்துக்கொண்டே, அவர்கள் கடிதம் எழுதி அனுப்பிவிட்டு, கோபாலசாமியை அங்கே கொண்டுபோய் விட்டிருக்கவேண்டும்.

குமாரசாமிபிள்ளை :—அப்படியானால், அவர்கள் ம. வே. கோ. என்று கையெழுத்துப் போட்டதிலிருந்து, அதே பெயருள்ள கள்ளக்காதலன் அந்த அம்மாளுக்கு இருக்கலாமென்ற அநுமானத்திற்கும் இடமிருக்கிறதல்லவா?

திகம்பரசாமியார் :—கோபாலசாமியின் பெயரும், அதுவும் ஒன்றாயிருப்பதால், அந்த மாதிரி அநுமானிப்பது அவ்வளவு உசிதமானதாய்த் தோன்றவில்லை.

குமாரசாமிபிள்ளை :—அந்த அம்மாளுக்குப் பரிச்சயமில்லாத ஒருவன் அவளிடம் அன்னியோன்னியம் பாராட்டி காதலனுடைய நிலைமையை வகித்துத் தன் கையெழுத்தைச் செய்து 9½-மணிக்கு வருவதாக எழுதி அனுப்புவது அசம்பாவிதமல்லவா!

திகம்பரசாமியார் :—ஆதலால், அது பார்வைக்கு அந்த அம்மாளுக்கு எழுதப்பட்டதுபோ லிருந்தாலும், உண்மையில் அது ஜட்ஜிக்கே அனுப்பப்பட் டிருக்கவேண்டும். இன்று காலையில் விழித்தெழுந்த அந்த அம்மாள் தனக்கு அவ்வித கடிதம் எதுவும் வரவில்லை என்று சொன்னாளாம்; அதுவுமன்றி, அது ஜட்ஜியினுடைய சட்டைப் பையி

லிருந்தே எடுக்கப்பட்டது. ஆகையால், அந்தக் கடிதம் ஜட்ஜி துரையிடம் போய்ச்சேரும்படி அனுப்பப்பட்டிருக்க வேண்டும்; அந்த அம்மாளுக்குக் கள்ளப்புருஷன் ஒருவன் இருக்கிறான் என்பது பொய்யாகவே இருக்கவேண்டும்; துரை ஒளிந்திருந்து ம. வே. கோ வின் வருகையை எதிர்பார்த்திருக்க வேண்டும். அதுவரையில் ஒருவாறு தெளிவுபடுகிறது. அதற்கு மேல் ரிவால்வரால் சுட்டது யார் என்பதுதான் அவ்வளவாகத் தெளிவுபடவில்லை. அந்த விஷயத்தில் என் மனதில் ஒருவித சம்சயம் ஏற்பட்டிருக்கிறது. அநேகமாய் அந்த விதத்தில்தான் ரிவால்வரால் அவர் சுடப்பட்டிருக்கவேண்டும். அதை நான் எவ்வித ஆதாரமுமின்றி வெறும் யூகத்தினால் இப்போது சொல்வது பரிகாசத்திற்கிடமாகும். எல்லாவற்றிற்கும் ஜட்ஜி துரைக்கு பிரக்ஞை திரும்பியவுடன், அவருடன் பேசி, அந்தக் கடிதம் அவரிடம் எப்படி வந்தது, அவர் சுடப்பட்டபோது அவர் அந்த இடத்திற்கு எதற்காகப்போனார் என்னும் தகவல்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டால், அதற்குமேல் விஷயத்தை முடிவு கட்டுவது சுலபமானது. தெய்வத்தினருளால் ஜட்ஜ் பிழைத்துக்கொள்வாரானால் கோபாலசாமி எவ்வித இழுக்குமின்றி பழைய கண்ணியத்தோடு விடுதலையடையலாம்; அவர் இறந்துபோகும் பட்சத்தில், முக்கியமான விஷயத்தை விளக்குவதற்குத் தக்க சாட்சியம் இல்லாமல் போகுமாதலால், அப்போது கோபாலசாமியினுடைய நிலைமை கடினமானதாகிவிடும்.

கண்ணப்பா:—ஜட்ஜியினுடைய மனைவியின் வாக்கு மூலத்தினால் கோபாலசாமிக்கு நன்மை ஏற்படாதோ? ம. வே. கோ. என்று தனக்குக் கடிதம் எழுதக்கூடியவர் எவருமில்லை யென்றும், கோபாலசாமி இன்னாரென்பது தனக்குத்



தெரியாதென்றும் அந்த அம்மாள் சொல்வதிலிருந்தே, கோபாலசாமி குற்ற மற்றவனென்று நீதிபதி அபிப்பிராயப்படமாட்டாரா?

குமாரசாமிபிள்ளை:—சாதாரண நிலைமையிலுள்ள ஸ்திரீகூட ஒருவனைத் தன் கள்ளப்புருஷன் என்று பகிரங்கமாய் ஒப்புக்கொள்ளமாட்டாள். அப்படி இருக்க, ஜட்ஜியின் மனைவி உண்மையிலேயே அவளுக்கு ஒரு கள்ளப்புருஷன் ஏற்பட்டிருந்தால் கூட, அவன் தன் சொந்தக் கணவரைச் சுட்டிருக்கும் நிலைமையில், அவன் தன் ஆசை நாயகன் என்று பகிரங்கமாய் ஒப்புக்கொள்வாளா? ஆகையால், கோபாலசாமியின் விஷயத்தில் இவள் உண்மையையே பேசுகிறாளானாலும், இவளுடைய சொல்லுக்கு அவ்வளவாக மதிப்பு ஏற்படாது.

கண்ணப்பா:—அப்படியானால் ஜட்ஜ் இறந்துபோகும் பட்சத்தில் ஸ்வாமிகள் சொல்லுகிறபடி கோபாலசாமியின் பாடு திண்டாட்டந்தான். ஜட்ஜ் இப்போது என்ன நிலைமையிலிருக்கிறார்? அவர் பிழைத்துக்கொள்வாரா, அல்லது, போய்விடுவாரா? டாக்டர்களுடைய அபிப்பிராயம் எப்படி இருக்கிறது?

குமாரசாமிபிள்ளை:—அவர் அபாயகரமான நிலைமையில் இருப்பதாகத்தான் டாக்டர்கள் சொல்லுகிறார்களாம்.

கண்ணப்பா:—நீங்கள் ஜட்ஜியைப் பார்க்க, சௌகரியப் படவில்லையோ?

குமாரசாமிபிள்ளை:—அதுதானே முதன்மையான காரியம். நாங்கள் இருவரும் ஆஸ்பத்திரிக்குப் போய், அவரைப் பார்த்துவிட்டுத்தான் வந்தோம்.

கண்ணப்பா:—(அதிக கவலையோடு) அப்படியானால் இப்போதைய நிலைமை நிரம்பவும் கவலைக்கிடமானதாய்த்தா

விருக்கிறது! இரண்டு கலியாணங்கள் ஜதையாக நடக்கப்போகின்றனவே யென்று நினைத்து, அவைகளை நிரம்பவும் விமரிசையாக நடத்தவேண்டுமென்று கருதி மனக்கோட்டை கட்டி, ஏராளமாகப் பணத்தைச் செலவிட்டு நான் எத்தனையோ ஏற்பாடுகளை யெல்லாம் செய்திருக்கிறேன். நாமொன்றை நினைக்க, தெய்வமொன்றைச் செய்விக்கிறது போலிருக்கிறது. இந்த அபாயகரமான நிலைமை எப்படித்தான் முடியுமோ? நாம் கோரியபடி விவாகங்கள் நிறைவேறுமோ நிறைவேறாமல் தடைப்பட்டுப் போகுமோ?

குமாரசாமிபிள்ளை:—இதைப்பற்றி நீங்கள் ஏன் இப்படி மனத்தளர்வடைகிறீர்கள்? கோபாலசாமியின்மீது இந்தப் பழி அபாண்டமாக வந்து சுமந்திருக்கிறது. அக்கிரமம் அதிககாலம் நிலைத்து நிற்காது. எப்படியும் கோபாலசாமி கௌரதையாகவே வெளியில் வரப்போகிறார். உங்கள் கோரிக்கைப்படி விவாகங்கள் நடக்கவே போகின்றன. நம் ஸ்வாமிகள் இருக்கும் வரையில் நமக்கு எதைப் பற்றியும் பயமே இல்லை.

கண்ணப்பா:—அது தெரிந்த விஷயந்தானே. எனக்கும் என் தம்பிக்கும் விவாகம் நடந்ததற்கு முன்னும் எங்கள் குடும்பத்துக்கு எவ்வளவோ பயங்கரமான அபாயங்கள் நேரவிருந்தன. ஸ்வாமிகளுடைய அபார வல்லமையாலும், மனப்பூர்வமான பிரியத்தினாலும், நாங்கள் எல்லோரும் தப்பி இது வரையில் சுபிக்ஷமா யிருந்துவருகிறோம். அப்போதும், இப்போதும், எப்போதும் ஸ்வாமிகள்தான் எங்கள் குடும்பங்களுக்கெல்லாம் பிரத்தியக்ஷ தெய்வம். இவர்களைத்தான் நாங்கள் எல்லோரும் மலைபோல நம்பியிருக்கிறோம். எல்லாவற்றிற்கும் அந்த ஜட்ஜ் இறந்துபோகாமல் இருக்க வேண்டும். அப்படியின்றி, காலகதியினால், அவர் இறந்து



போய் விட்டால் கூட, ஸ்வாமிகள்தான் ஏதாவது யுக்தி செய்து உண்மையை மெய்ப்பிக்க வேண்டும்.

குமாரசாமிபிள்ளை:—ஜட்ஜ் இறந்து போய்விட்டார் என்று நாம் அதோடு சோர்ந்து இருந்துவிடலாமா? எப்பாடு பட்டாவது அந்தப் புஷ்பாங்கி யார் என்பதையும், அவளுடைய இருப்பிடத்தையும், அவளுடைய கருத்தையும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் மூலமாக உண்மையை வெளிப்படுத்தியே தீரவேண்டும். அதைப் பற்றித்தான் நாங்கள் கொஞ்சநேரத்திற்கு முன் பேசிக்கொண்டிருந்தோம். நீங்களும் வந்தீர்கள்.

கண்ணப்பா:—இந்த சமயத்தில் இங்கே கந்தசாமி இல்லாமல் பட்டணத்திற்குப் போய்விட்டானே! கோபாலசாமிக்கு இவ்வித அபாயம் நேர்ந்திருக்கிறதென்பது அவனுக்கு எப்படித் தெரியப்போகிறது!

குமாரசாமிபிள்ளை:-இந்த விஷயத்தை பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டாமென்று நாங்கள் பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் சொல்லிவிட்டு வந்தோம். வெளியிடுவதில்லையென்று அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இது பத்திரிகைகளில் வருமானால், தேனாம்பேட்டையார் இதைப் படித்து அவமானத்தினால் குன்றிப் போவார்கள்; கோபாலசாமிக்கு என்றைக்கும் மாறாத இழிவு ஏற்பட்டுவிடும். அதையெல்லாம் கருதி நாங்கள் முன் யோசனையாக அந்தக் காரியத்தைச் செய்துவிட்டு வந்தோம். அது இன்னொரு விதத்தில் கெடுதலாய் இருக்கிறது. பத்திரிகையில் வந்தால் அது கந்தசாமிக்குத்தெரியும். இப்போது அதற்கு வகையில்லாமல் போயிற்று.

திகம்பரசாமியார்:—கந்தசாமி பத்திரிகைகளை அவ்வளவாகப் படிக்கிறதே இல்லையாமே. ஆகையால், இந்தச் செய்தி

பத்திரிகையில் வெளியானால் கூட, அவன் அதைப் படிப்பானென்ற நிச்சயமில்லை.

கண்ணப்பா:— (கண்கலக்க மடைந்தவராய்) நீங்கள் அதிகாலையில் புறப்பட்டுப்போய் முன்னெச்சரிக்கையாக எத்தனை காரியங்களைச் செய்துவிட்டு வந்திருக்கிறீர்கள்! இந்தச் செய்தி பத்திரிகைகளில் வந்தால், நாங்கள் எல்லோரும் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு பிராணனை விடவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. கந்தசாமி பத்திரிகை மூலமாய்த் தெரிந்து கொள்ளாவிட்டால், பாவாயில்லை. அவன் எங்கே இறங்கியிருக்கிறான் என்பதை நாம் வேறு வகையில் தெரிந்துகொண்டு அவனுக்கு எழுதிவிடலாம்.

குமாரசாமிபிள்ளை :—அதைப்பற்றி கோபாலசாமியிடம் கேட்டோம். கந்தசாமி முதலியோர் எங்கே தங்கப்போகிறார்கள் என்று சொல்லிவிட்டுப் போகவில்லை என்று அவர் சொல்லிவிட்டார்; கந்தசாமியின் வீட்டிலிருந்த சமயல்காரர், சேவகன் ஆகியோரிடம் கேட்டோம். அவர்களும் தங்களுக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டார்கள். அவருடைய இருப்பிடத்தை நாம் தெரிந்துகொண்டு, அவருக்கு எழுதினாலன்றி, இந்தவிஷயம் அவருக்குத் தெரியவேறு மார்க்கமில்லை.

கண்ணப்பா :—திருநடன வைபவம்பிள்ளையினுடைய மகளிடத்திலிருந்து கடிதம் வந்தால், அதை எடுத்துக்கொண்டு அவன் எதற்காக ஓடினான் என்பது தெரியவில்லையே!

குமாரசாமிபிள்ளை :—உண்மையில் அந்தக் கடிதம் அவருடைய மகளால் எழுதப்பட்டதுதானா என்பதை திருப்திகரமாய் நிச்சயப்படுத்திக்கொண்டு வரவேண்டுமென்ற கருத்துடன் போனாராம். அவர் ஆழ்ந்த யோசனையின்மேல்தான்



அப்படிச் செய்திருக்கிறார் என்பதை நாங்கள் கோபாலசாமியிடம் தெரிந்துகொண்டோம்.

கண்ணப்பா:—அப்படியானால், அந்தக் கடிதம்கூட கற்பனையாக வேறொருவரால் எழுதப்பட் டிருக்கலாமென்ற சந்தேகம் உண்டாகிறதா?

குமாரசாமிபிள்ளை:—அவ்விதமாக நாம் சந்தேகித்துத்தான் உண்மையை அறியவேண்டும். இங்கு கோபாலசாமியைப் படுகுழியில் வீழ்த்த புஷ்பாங்கி ஏற்பட்டது போல, அங்கேயும் கலகத் தீ மூட்ட யாராவது ஏற்பட்டிருக்கலாமல்லவா? அதை உடனே உண்மையென்று நம்பிவிடுவது நல்லதாகுமா?

சாமியார்:—கோபாலசாமியை அபாயத்தில் மாட்ட வைத்தவர்களே, அதையும் செய்திருக்கலாம். ஆகையால், எனக்கு கந்தசாமியைப் பற்றியும் கவலையாகத்தா னிருக்கிறது. இங்கே இவ்வளவு பெரிய சூழ்ச்சியில் கோபாலசாமியை சிக்கவைத்தவர்கள் அங்கே கந்தசாமியை என்ன செய்கிறார்களோ என்ற அச்சமும் ஏற்படுகிறது. ஆகையால் நாம் அவரையும் தேடிப்பார்க்க வேண்டும்—என்றார்.

அப்போது, "ஸார், தந்தி வந்திருக்கிறது" என்று ஒருவன் அவர்களிருந்த அறைக்கு வெளியில் நின்று கூறியதைக் கேட்ட குமாரசாமிபிள்ளை உடனே வெளியில் சென்று தந்தியைப் பெற்றுக்கொண்டு உள்ளே வந்து சேர்ந்தார்.

"கோதண்ட மையங்காரிடத்திலிருந்து வந்திருக்கலாம்; பிரித்துப்பார்" என்றார் திகம்பரசாமியார்.

உடனே கண்ணப்பா, "கோபாலசாமியை ஜாமீனில் விட உத்தரவா யிருக்கலாம்" என்றார்.

அப்போது குமாரசாமிபிள்ளை உறையைக் கிழித்து தந்திக் காகிதத்தை வெளியில் எடுத்து, அதிலிருந்து அடியில் வருமாறு படிக்கலானார்:—

ஜாமீன் மனு இரண்டு நீதிஸ்தலங்களிலும் தள்ளுபடி ஆய்விட்டது. இனி சென்னை ஹைகோர்ட்டில்தான் நாம் முயற்சிக்கவேண்டும். சொந்த போஜனம் கொடுக்க அநுமதி கிடைத்திருக்கிறது. சமையல்காரர் ஜாக்கிரதையாக கவனிக்கிறார். உங்கள் மனிதர் எவராகிலும் வரும் பட்சத்தில், நானும் அவருடன் கூட சென்னைக்குப் போய் ஆகவேண்டியதைச் செய்யத் தயாராயிருக்கிறேன். உங்கள் மனிதரை, அல்லது, மறுமொழியை துரிதத்தில் எதிர்பார்த் திருக்கிறேன். எனக்கு வேறு கச்சேரிகளில் விசாரணைகள் இருக்கின்றனவானாலும், அவைகளை ஒத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

கோதண்டமையங்கார்

என்று குமாரசாமி பிள்ளை படிக்கவே, எல்லோருடைய முகங்களும் வாட்டமடைந்து விசனத்தைக் காட்டின.

கண்ணப்பா:—(வியப்பும் விரக்தியும் த்வனித்த குரலில்) பெரிய அநியாய ராஜ்யமா யிருக்கிறதே! கோபாலசாமி தங்களைப்போல் ஒரு மேலான நீதிபதியென்ற உணர்ச்சி கூட இந்த மாஜிஸ்டிரேட்டுகளுக்கு இல்லாமல் போய் விட்டதே! பெரிய படிப்பாளியும், தக்க பதவியிலிருப்பவனுமான கோபாலசாமி கேவலம் கொலை செய்ய மாட்டான் என்னும் எண்ணம் பாமர ஜனங்களுக்குக் கூட உண்டாகிறதே. இவர்களுக்கு உண்டாக வில்லையே!

குமாரசாமிபிள்ளை:—இது வெறும் கொலையோடு மாத்திர மிருந்தால், அந்த மாதிரியான அநுமானம் மாஜிஸ்



டிரேட்டுகளுக்கும் உண்டாகும். இதில், ஒரு ஸ்திரீயின்
திருட்டு நட்பு வந்து சம்பந்தப்படுகிறது. கோபாலசாமி
விவாக மில்லாத யௌவனப்புருஷர். ஆகையால், மோகாந்த
காரத்தில் எப்பேர்ப்பட்ட மனிதரும் தமது நிதா
னத்தை இழந்து, தமது துர்மோகத்திற்கு இடையூறா
யிருப்பவரைக் கொன்றுவிட நினைப்பது 'உலகத்தில் சாதா
ரணமாக நடக்கக்கூடிய விஷயமல்லவா. ஆகையால் இவர்
ஒரு வேளை சுட்டிருக்கலாமென்ற சம்சயம் எவருக்கும் உண்
டாவது சகஜமே; அதுவுமன்றி, இவருடைய கையெழுத்
துள்ள காதற் கடிதம் ஒன்று ஜட்ஜியிடத்திலிருந்து அகப்
பட்டிருக்கிறது; அதில் குறிப்பிடப்பட்டிருந்த நேரத்தில்
இவர் அங்கே போயிருக்கிறார். அந்த அம்மாளுடைய
நடத்தையைப்பற்றி ஜட்ஜ சம்சயப்பட்டு அடிக்கடி சண்டை
யிட்டதாக சேவகர்கள் சொல்லுகிறார்கள். அந்த அம்மா
ளுக்கு விரோதமாக இத்தனை சாட்சியங்கள் ஏற்பட்டிருக்
கையில், பொழுது விடிகிறவரையில் படுத்திருந்து விட்டு,
தனக்கு ஒன்றும் தெரியாதென்று அந்த அம்மாள் சொல்
வது சம்சயத்திற்கு இடம் கொடுக்கிறது. போலீஸார் சுல
பத்தில் தானாகக் கிடைக்கும் சாட்சியத்தை வைத்துக்
கொண்டே வழக்கை நடத்தப் பார்க்கிறது அவர்களுடைய
இயல்பாகி விட்டது; பகுத்தறிவை உபயோகப்படுத்தி,
பாடு பட்டு உழைத்து உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டு
மென்னும் மனப்பான்மை போலீசாரில் சிலருக்கே இருக்
கிறதன்றி, பெரும்பாலோருக்கு இருப்பதில்லை. ஆகையால்
அவர்கள், யார் ஜாமீன் மனுப் போட்டாலும் அதை எதிர்ப்
பதே தோரணையாக வைத்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்
களுடைய சிபார்சை அசட்டை செய்ய மாஜிஸ்டிரேட்டு
களுக்குத் துணிபுண்டாகிறதில்லை. முதலில் சொற்ப

மாகத் தோன்றும் சாட்சியம் பின்னால் வலுத்துப் போனால், தாம் ஜாமீனில் விட்டது தவறாகிவிடுமோ வென்று அவர்கள் அஞ்சுகிறார்கள். இருவருக்கும் மத்தியில் நிரபராதிகள் மாட்டிக்கொண்டு தவிக்கிறார்கள்.

கண்ணப்பா :—பட்டணத்திலிருக்கும் அண்ணாத்தேக்கள் என்ன சொல்வார்களோ. அதையும் பார்த்துவிடுவோம். அதனால் எவ்வளவு பணச்செலவானாலும் அக்கறையில்லை.

குமாரசாமிபிள்ளை :—வக்கீலோடு நீங்களும் சென்னைப் பட்டணத்துக்குப் போய் அந்தக் காரியத்தை கவனிக்கிறீர்களா? நாங்கள் மற்ற முக்கிய காரியங்களைப் பார்க்கிறோம்.

கண்ணப்பா :—சரி; நான் அதை கவனிக்கிறேன். வீட்டிற்குப் போய் சங்கதிகளைச் சொல்லிவிட்டு, உடனே மோட்டாரிலேயே தஞ்சாவூருக்குப் போகிறேன்.

சாமியார் :—பட்டணத்தில் கந்தசாமியின் இருப்பிடம் தெரிந்தால், கோபாலசாமியின் விஷயத்தை அவனிடம் சொல். கந்தசாமியின் விலாசத்தை எனக்கும் உடனே எழுது—என்றார்.

கண்ணப்பா அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு, செலவு பெற்று அவ்விடம் விட்டு வெளியில் சென்றார்.

உடனே திகம்பரசாமியார், "சென்னையில்கூட நமக்கு அநுகூலமான முடிவு ஏற்படுமென்ற நம்பிக்கை எனக்கு உண்டாகவில்லை. நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய சட்டநட வடிக்கைகளை முடிவு வரையில் எடுத்துக் கொண்டோம் என்னும் திருப்தியொன்றுதான் நமக்கு ஏற்படும்போலிருக்கிறது" என்றார்.

குமாரசாமிபிள்ளை :—ஆற்று வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டால், சாணுயரம் போனாலென்ன, முழ உயரம்



போனாலென்ன என்று பழமொழி சொல்லுவார்கள். இந்த மாதிரியான இழிவை யடைய கொஞ்சமும் தகுதியற்றவர் இதற்கு ஆளாகிவிட்டார்; இனி அவர் ஒரே நாளில் வெளியேறினாலும், விசாரணையின் முடிவு வரையில் இருந்து வெளியேறினாலும், இரண்டும் ஒன்றுதான். ஆனால், அவர் உண்மையில் இந்தக் குற்றத்தைச் செய்தவர் என்ற முடிவு மாத்திரம் ஏற்படாமல் போகவேண்டும்.

சாமியார் :—அந்த மாதிரி ஏற்படாமல் போகவேண்டுமென்று நாம் மனதால் நினைப்பதோடு மாத்திரம் இருந்துவிட்டால், அவசியம் நம் விருப்பம் நிறைவேறிப்போகும். அது, மனதால் நினைப்பது போல, அவ்வளவு சுலபமான காரியமாய்த் தோன்றவில்லை.

குமாரசாமிபிள்ளை :—அது சுலபமான காரியமாயிருந்தால், போலீஸாரே செய்திருப்பார்களே! அது உங்கள் வரையில் வரப்போகிறதில்லையே. இப்படி மற்றவரால் செய்ய முடியாத அசாத்தியமான காரியங்களை யெல்லாம் செய்து முடிப்பதால்தான், உங்களை எல்லோரும் கொண்டாடுகிறார்கள். "செயற்கரிய செய்வார் பெரியர்; செயற்கரிய செய்கலாதார் சிறியர்" என்பது பிரசித்தமான விஷயந்தானே.

சாமியார் :—அந்தப் பெருமை யெல்லாம் இருக்கட்டும். அந்தப் பெருமையை நாடியா நாம் வேலை செய்கிறோம். துஷ்ட நிக்கிரஹ சிஷ்ட பரிபாலனம் என்பது கடவுளுக்கும் அரசருக்கும் மாத்திரமன்றி, நியாய புத்தியுடைய ஒவ்வொரு மனிதருக்கும் ஏற்பட்டது. அதைக் கூடிய வரையில் ஒவ்வொருவரும் நிறைவேற்றினால், உலகத்தில் அதர்மம் ஒழியும்; கிறிஸ்தவர்கள் சொல்லுவதுபோல, கடவுளுடைய

ராஜ்யபாரமே பிரத்தியக்ஷமாய் பூமியில் நடப்பதுபோலாகும். இதைக் கருதியே நம் முன்னோர்கள் இந்த விஷயத்தில் அரும் பாடு பட்டு துஷ்டத்தனத்தையும் அக்கிரமத்தையும் வேரறுத்து, நீதிநெறிகளையும் சிஷ்டாசாரங்களையும் நிலைநாட்டி யிருக்கிறார்கள். அப்படி யிருந்தும், முன்னவை சப்பாத்துப் புதர்கள் போலவும், அசுர பரம்பரை போலவும், எறும்பு, கொசு, மூட்டை முதலிய அதம சிருஷ்டிகள் போலவும் உலகத்தில் எப்போதும் இருந்து அக்ஷயமாய்ப் பெருகிக் கொண்டே இருக்கின்றன. அவைகளை அடியோடு வேரறுப்பதென்பது இந்த சிருஷ்டியை ஏற்படுத்திய கடவுளே விரும்பாத விஷயம் போலத் தோன்றுகிறது. ஆயினும் கடவுள் கவனிக்காத விஷயத்தை மனிதரேதான் கவனிக்க வேண்டும். ஆதலால், நம்மால் இயன்ற வரையில் இந்தக் கடமையை நடத்தியே தீர்க்கவேண்டும் என்ற ஓர் எண்ணத்தைத் தவிர, இதனால் பெருமையை, அல்லது, பொருளை சம்பாதிக்க வேண்டுமென்பது நம்முடைய கருத்தல்ல. நம்முடைய கருத்தை சிலர் தவறாக அர்த்தம் செய்து கொள்ளுகிறார்கள். நீயும் அவர்கள் சொல்வதற்கு அநுசரணையாகப் பேசுகிறாய்.

குமாரசாமிபிள்ளை:—நீங்கள் எந்தப் பெருமையும் தேவையில்லையென்று, "உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்" என்பதோடு திருப்தியடைந்து ஜீவியம் நடத்தினாலும், பொது ஜனங்களுடைய வாயை அடக்க முடியுமா? நீங்கள் "வேண்டாம் வேண்டாம்" என்று தடுத்தாலும், அவர்கள் உங்களைப் புகழ்ந்து பெருமைப் படுத்திக் கொண்டுதா னிருப்பார்கள். அது இருக்கட்டும். இப்போது நான் செய்யவேண்டிய காரியமென்ன வென்பதைச் சொன்னால், நான் உடனே அதை கவனிக்கிறேன்.



சாமியார்:—புஷ்பாங்கி என்பவள் எங்கே இருக்கிறாள் என்பது தெரியவேண்டும். அவளுக்கும் கந்தசாமியின் குடும்பத்தாருக்கும் பழைய சம்பந்தம் ஏதாவது உண்டா என்பது தெரியவேண்டும். அவள் என்ன கருத்தோடு கந்தசாமிக்குக் கடிதம் எழுதினாள் என்பது தெரியவேண்டும். கோபாலசாமியை எதற்காக அவள் இப்படி அபாயத்தில் மாட்டி வைத்தாள் என்பது தெரியவேண்டும். இத்தனை விஷயங்களும் நமக்குத் தெரிவது மாத்திரம் போதாது. அவளுடைய வஞ்சகச் சூழ்ச்சியினால் கோபாலசாமி ஜட்ஜியின் வீட்டில் கொண்டு போய் விடப்பட்டான் என்பதற்கு நாம் திருப்திகரமான சாட்சியங்களை சேகரிக்கவேண்டும். அவற்றின் மூலமாகவே தான் நாம் கோபாலசாமியைத் தப்ப வைக்கலாம். இல்லாவிட்டால், ஜட்ஜ் இறந்து போய் விடும் பட்சத்தில், அவனுடைய நிலைமை அபாயகரமானதாகி விடும்.

குமாரசாமிபிள்ளை:—அவளுடைய படத்தைப் பார்க்காமல் நாம் அவளுடைய இருப்பிடத்தை எப்படிக் கண்டுபிடிக்கிறது. அவளுடைய படம் ஒன்று நம்மிடம் இருந்தால் கூட, அவள் எங்கே இருக்கிறாள் என்பதை நாம் கண்டுபிடிப்பது துர்லப மாயிற்றே. அவளிடமிருந்து வந்த இரண்டு கடிதங்களையும், படத்தையும் கந்தசாமியின் மேஜைக்குள் வைத்ததாக கோபாலசாமி சொல்லுகிறார். அவை போன இடம் தெரியவில்லை. போலீஸாரே போய்ப் பார்த்தார்களே. அவர்கள் ஒரு வேளை அவைகளை அமுக்கி இருப்பார்களா?

சாமியார்:—அப்படி நடந்திருக்குமென்று நான் நினைக்கவில்லை. போலீஸார் அவ்வளவு படுமோசத்தில் இறங்கு

வார்களா? கந்தசாமியின் ஜாகையில் உள்ள ஆள்களில் யாரோ ஒருவன் புஷ்பாங்கிக்கு உடந்தையானவன்; அவன் தான் அவைகளை அபகரித்திருக்க வேண்டும். அந்த ஆசாமி சுலபத்தில் உண்மையை வெளியிடுகிறவனா யிருப்பானென்று நான் நினைக்கவில்லை.

குமாரசாமிபிள்ளை:—இந்த மாதிரி புஷ்பாங்கி இடத்திலிருந்து கடிதம் வந்ததென்றும், அந்த விஷயத்தில் உண்மையைக் கண்டுபிடிக்கும்படி தாம் கோபாலசாமிபிள்ளையிடம் சொல்லிவிட்டுப் போனதாகவும் கந்தசாமிபிள்ளை வாக்குமூலம் கொடுத்தால், அது கோபாலசாமி பிள்ளைக்கு எவ்வளவு தூரம் அநுகூலப்படும்? கந்தசாமி தக்க பெரிய பதவியி லிருப்பவ ரல்லவா.

சாமியார்:—போலீஸார் கந்தசாமியின் வீட்டை சோதனை போட்டுப் பார்த்த போது அவனுடைய கடிதங்களும் படங்களும் கிடைத்திருந்தால், கந்தசாமியின் சாட்சியத்திற்கு தக்க மதிப்பு ஏற்படும். அவைகள் அகப்படாமல் போனதல்லவா பெரிய கெடுதலாய் முடிந்துவிட்டது. கந்தசாமியும், கோபாலசாமியும் ஆப்த மித்திரர்கள்; இருவரும் உறவினர்கள்; சகோதரிகளை விவாகம் செய்து கொள்ளப் போகிறவர்கள்; ஆகையால், அவருடைய சாட்சியம் ஒன்றையே நீதிபதி அவ்வளவு முடிவானதாகக் கருதுவார் என்பது சந்தேகம். ஆகவே, நாம் அதை மாத்திரம் நம்பி இருப்பது போதாது. நாம் எப்பாடு பட்டாவது, அவளைக் கண்டுபிடித்தே தீரவேண்டும். கோபாலசாமிதான், அவளுடைய தோற்றமும், அவளைச் சேர்ந்தவர்களுடைய தோற்றமும் இன்னவிதமா யிருந்தனவென்று நம்மிடம் சொல்லியிருக்கிறான். அதை வைத்துக்கொண்டு நாம் வேலை செய்ய வேண்டும். இராமாயணத்தில் சீதாதேவி எப்படி



இருப்பாள் என்று சொன்னதை வைத்துக் கொண்டு அநுமார் கண்டுபிடிக்க வில்லையா. அவரோ தென்னிந்தியா, இலங்கை ஆகிய இடங்கள் முழுதிலும்தேடிப்பார்க்க வேண்டியவரானார். நாம் தஞ்சாவூரிலும், அதைச் சுற்றி சுமார் ஐந்து மைல் தூரத்திற்குள்ளும் தானே தேடிப் பார்க்க வேண்டும். நீ ஏதாவது யுக்தி கண்டு பிடியேன். இந்த விஷயத்தில்தான் உன்னுடைய சாமர்த்தியத்தை நான் பார்க்கப் போகிறேன். நான் எதையும் செய்யப் போகிறதில்லை. நீதான் போய்த் தந்திரம் செய்து கண்டுபிடிக்க வேண்டும்.

குமாரசாமிபிள்ளை:—ஆழ்ந்து யோசிக்க யோசிக்க, இதை நாம் சுலபத்தில் கண்டுபிடித்துவிடலா மென்றுதான் தோன்றுகிறது. தஞ்சாவூரிலும், அதைச் சுற்றிலும் சுமார் நூறு பங்களாக்கள் இருக்கலாம். அவைகளை நான்கு தினங்களில் சுற்றிப் பார்த்துவிடலாம். இன்னின்ன இடங்களில் பங்களாக்கள் இருக்கின்றன வென்பதை நான் முதலில் தெரிந்துகொண்டு, கூடுமானால், ஒவ்வொன்றும் யாருடையது என்னும் தகவலைக் குறித்துக்கொண்டு வருகிறேன். அதுவன்றி, கோபாலசாமி தாம் ஏறிக்கொண்டு போன மோட்டார் வண்டி, பெட்டிவண்டிபோல இருந்ததென்றும், அதன் நிறம் மினுமினுப்பான கருப்பு நிறம் என்றும் சொன்னா ரல்லவா. அந்த மாதிரி மோட்டார் வண்டி எந்த பங்களாவில் இருக்கிறதென்றும் கவனித்துக் கொண்டு வருகிறேன். அதற்குமேல் மற்ற விவரங்களைப் பற்றி யோசித்துக் கொள்ளலாம்.

சாமியார்:—இப்படிக் கண்டுபிடிப்பதிலும் ஒரு விதமாக நமக்கு ஏமாற்றம் ஏற்படக் கூடுமானாலும், சும்மா இருப்பதை விட எந்த வகையிலாவது முயற்சி செய்வது உசிதமானதுதான்.

குமாரசாமிபிள்ளை:—எந்த விதத்தில் ஏமாற்றம் ஏற்படும்?

சாமியார்:—புஷ்பாங்கி என்பது பொய்யான பெயர் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. அவளே இதில் பிரதானமானவளா, அல்லது, வேறு ஆண்பிள்ளைகள் பிரதானமாக இருந்துகொண்டு அழகான ஒரு பெண்ணைக் காட்டி, கந்தசாமியை வலையில் வீழ்த்தப் பார்த்தார்களா என்பதும் தெரியவில்லை. அப்படி சூழ்ச்சி செய்தவர்கள் வெளியூர் மனிதர்களாயிருந்து, தங்களுடைய பந்துக்களின் பங்களாவில் இருந்திருக்கலாம்; அல்லது, சில தினங்களுக்கு வாடகைக்கு அமர்த்திக்கொண்டு இருந்திருக்கலாம். அவர்கள் மறைவாக இருந்து இந்த சதியாலோசனையைச் செய்துவிட்டு, தங்கள் சொந்த ஊருக்குப் போயிருக்கலாம். அது போலவே, அவர்கள் மோட்டார் வண்டியை வேறே ஊரிலிருந்து இரவல் வாங்கி வந்திருந்து உடனே கொண்டு போய் அங்கே விட்டிருக்கலாம். ஆகையால் அந்த விதத்திலும் நமக்கு ஏமாற்றம் உண்டாகலாம். அல்லது, வெற்றி கிடைத்தாலும் கிடைக்கலாம். அப்படியானால், நீ நான்கு தினங்களுக்குப் பிறகுதான் இங்கே வருவாய்போலிருக்கிறது?

குமாரசாமிபிள்ளை:—அதற்கு முன்பாகவே வேலை முடிந்து போனால் உடனே வந்துவிடுகிறேன். நீங்கள் சொல்லும்படி ஏமாற்றம் ஏற்படலாமென்பது என் மனதிற்கும் பட்டது. நாம் ஏமாற்றங்களுக்கும், அபாயங்களுக்கும் மத்தியிலிருந்துதான் முயற்சிக்க வேண்டும்—என்றார்.

அவ்வாறு அவர்கள் சம்பாஷித்திருந்த சமயத்தில், திகம்பரசாமியாருடைய இன்னொரு சிஷ்யரான மீனாட்சி சுந்தரம் பிள்ளை பக்கத்து அறையில் இருந்து வேறு ஏதோ



விஷயத்தைக் கவனித்திருந்தவர் அங்கே வந்து சேர்ந்தார். இவர் இன்னார் என்பது சிலருக்குத் தெரியாமலிருக்கலாம். கும்பகோணம் வக்கீல் என்னும் நாவலில் குறிக்கப்பட்டுள்ள தகட்டூர் அலங்காரத் தாச்சியின் மருமகப் பிள்ளையும், அவள் பிரஸவித்த காலத்தில் பைத்தியங் கொண்டவர் போல் நடித்து அவளை மானபங்கப் படுத்திய நற்குணப் புருஷரும் இந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளையே. இவர் சில வருஷகாலம் துரைத்தனத்தில் டிப்டி கலெக்டர் உத்தியோகம் வகித்திருந்து, அதை விட்டு விட்டு, துறவியாய் காஷாய மணிந்து திகம்பரசாமியாருக்கு சீடராயிருந்து, பரோபகார கைங்கரியத்திற்காகத் தமது உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் அர்ப்பணம் செய்திருந்தவர். இவர் நல்ல படிப்பாளி; சிறந்த அறிவு படைத்த மேதாவி. சாமர்த்தியமாகவும் சுனாயாசமாகவும் விஷயங்களை சாதிப்பதில் இவர் காலக் கிரமத்தில் சற்றேறக் குறைய திகம்பர சாமியாருக்கு நிகராய்க் கருதத்தக்கவர். சில சந்தர்ப்பங்களில் இவர் திகம்பர சாமியாருக்குப் படாத யுக்திகளைச் சொல்லிக் கொடுப்பாராதலால், சாமியாருக்கு குமாரசாமியை விட மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையிடத்திலேயே அதிக மதிப்பும், மரியாதையும் ஏற்பட்டிருந்தன.

குமாரசாமிபிள்ளை இங்கிலீஷ் படிப்பு அதிகம் பெறாதவர்; அநுபவத்தின் பயனாய் புது நாகரிகம் முதலியவற்றில் ஓரளவு தேர்ச்சி பெற்றவர்; அவரும் கூடிய வரையில் நல்ல விவேகம் வாய்ந்தவர்; மேலான குண வொழுக்கம் உடையவர். தாமும், தமது உடன்பிறந்தாளின் கணவரான திகம்பர சாமியாருக்கு உதவியாயிருந்து, தமது ஆயுட்காலம் முழுதையும் பரோபகாரத்திற்கே பயன் படுத்த வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர். மீனாட்சிசுந்தரம்பிள்ளை

யைப் போலவே இவரும் நிலம் முதலிய பூர்விக சொத்துகள் உடையவராதலால், இவர் பொருள்தேட வேண்டுமென்ற சுயநல நாட்டமே சிறிது மில்லாதவர்.

துப்பறியும் விஷயத்தில் இவர் செய்யும் முயற்சிகள் பல சந்தர்ப்பங்களில் பயன் தராமல் வீணாய்ப்போயினவானாலும், இவர் அதைப்பற்றி அவமான உணர்ச்சியோ, மனத்தளர்ச்சியோ அடையாமல், "நாம் நமதுகடமையை மனதாரச் செய்தோம்; பலிக்காவிட்டால், அது நமது குற்றமல்ல. அதை நாம் ஓர் இழுக்காகக் கருதுவதும் கூடாது; மேன்மேலும் முயற்சிப்பதில் தளர்வடைவதும் கூடாது" என்று சொல்லிக்கொண்டு, எப்போதும் விடாமுயற்சியோடும், ஊக்கத்தோடும், ஒழுங்கான வழியில் ஏதேனும் முயற்சி செய்துகொண்டே இருப்பார். எவ்வளவு அதிகப் பிரயாசையான வேலையானாலும், மற்றவரால் ஆகாத எந்த வேலையானாலும், இவர் அதை மேற்கொண்டு நாணயமாகவும், மனப்பூர்வமான ஆர்வத்தோடும் உழைத்தே தீருவார். இவர் மற்ற இருவரையும்விட யூகத்தில் ஓரளவு பிற்படக் கூடியவராயிருந்தாலும், அவர்கள் இருவரையும்விடப் பன்மடங்கு அதிக உழைப்பினால் அந்த யூகக்குறைவை சரிப்படுத்திக்கொள்ளக் கூடியவர். ஆனாலும், இவர் சிறந்த தைரியசாலியாதலால், எந்த அபாயமானாலும், இடையூறானாலும் அஞ்சிப் பின்வாங்கமாட்டார். இவர் சரீரக்கட்டும் உடையவராதலால், ஒரே காலத்தில் ஐம்பது மனிதர்கள் இவரை வளைத்துக்கொண்டால் கூட, வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதுபோல, இவர் ஒரு சிறிய மூங்கில் குச்சியை வைத்துக்கொண்டு, அத்தனை பேர்களையும் சமாளித்துக்கொண்டு தப்பி வந்துவிடுவார்.



ஆகவே, திகம்பரசாமியார் துப்பறியும் விஷயத்தில் அவரைப் பெரும்பாலும் தனியாகவே அனுப்புவார்; சில சமயங்களில், அவரையும் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையையும் அனுப்புவார்; சில சமயங்களில் அவர்கள் இருவரையுமோ, அல்லது, எவரேனும் ஒருவரையோ தம்மோடு அழைத்துக் கொண்டு போவார்.

புஷ்பாங்கி மறைவி லிருந்தபடி நிரம்பவும் சாமர்த்தியமாக வேலை செய்தா ளாகையால், அவளுடைய செய்கைகளைக் கண்டு திகம்பரசாமியார் நிரம்பவும் திகைத்துப்போய், தான் எந்த விதமாக வேலை செய்வது என்பதை நிச்சயிக்க மாட்டாமல் அப்போதும் சிந்தித்தபடியே இருந்தாராதலால், குமாரசாமிபிள்ளை தமக்கு உசிதமாகத் தோன்றுகிறபடி எவ்வித மேனும் முயற்சி செய்யட்டுமென்று சாமியார் விட்டுவிட்டார்.

குமாரசாமிபிள்ளை மேலே குறித்தபடி தஞ்சையிலும் அதைச் சுற்றி சுமார் ஐந்து மயில்தூர வட்டத்திற்குள்ளும் எங்கெங்கு பங்களாக்கள் இருக்கின்றனவென்பதையும், அவற்றின் சொந்தக்காரர்களுடைய பெபரையும், கோபாலசாமியால் விவரிக்கப்பட்ட மோட்டார் வண்டி எந்த பங்களாவில் இருக்கிறதென்பதையும் தெரிந்துகொண்டு வருவதாக திகம்பரசாமியாரிடம் சொல்லிவிட்டு, அப்போதே புறப்பட்டு திகம்பரசாமியாருடைய மோட்டார் வண்டியில் ஏறித் தஞ்சைக்குப் பிரயாணமானார்.

திகம்பரசாமியார் கௌரவ இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தியோகம் வகித்தவராதலால், தேவையானால், தாமோ தம்மைச் சேர்ந்தவர்களோ, எந்தப் போலீஸ் உடுப்பையும் அணிந்துகொள்ளலா மென்று அவர் துரைத்தனத்தாரிடம்

உத்தரவு பெற்றிருந்தார். ஆகவே, குமாரசாமிபிள்ளை தாம் சாதாரண மனிதர் போல் சென்றால், தம்மை எவரும் அவ்வளவாக மதித்துத் தமது கேள்விகளுக்கு சரியான மறுமொழி கொடுக்கமாட்டார்கள் என்று நினைத்து, போலீஸ் தலைமை ஜெவானைப்போல உடைகள் அணிந்து கொண்டு தஞ்சைக்குச் சென்றார்.

கோபாலசாமி தாம் கண்களைக் கட்டிக்கொண்டு மோட்டார் வண்டியில் இருந்த காலத்தில், அது சுமார் ஐந்து மயில் தூரம் ஓடியிருக்கலாமென்று மதித்து அதை திகம்பரசாமியார், குமாரசாமிபிள்ளை ஆகியோருக்குத் தெரிவித்திருந்தாராதலால், குமாரசாமிபிள்ளை தாம் தஞ்சைப் பட்டணத்தில் உள்ள பங்களாக்களைப் பார்ப்பதைவிட சுமார் ஐந்து மயில் தூரத்திலிருந்து ஆரம்பித்து சுற்று வட்டத்தில் உள்ள ஒவ்வோர் ஊருக்கும் சென்றுபார்க்கவேண்டுமென்று கருதி, முதலில் தஞ்சைக்கு வடக்கு திக்கில் உள்ள திருவையாற்றிலிருந்து தேடத்தொடங்கினார்.

திருவையாறு என்பது தஞ்சைக்கு சுமார் ஐந்து மயில் தூரத்தில் வடக்கு திக்கில் காவிரியாற்றின் கரைமீதிருக்கும் ஒரு பிரபல சிவஸ்தலம். அது நடுத்தரமான ஒரு பட்டணமாதலால், அதைச் சுற்றிலும் பல பங்களாக்கள் இருக்கின்றன. புஷ்பாங்கியின் இருப்பிடம் அநேகமாய்த் திருவையாற்றிலேதான் இருக்குமென்ற ஒருவித நிர்மானத்துடன் குமாரசாமிபிள்ளை சென்றாராதலால், அவர் நிரம்பவும் பாடுபட்டு, அந்த ஊரில் எங்கெங்கு பங்களாக்கள் இருக்கின்றனவென்றும், அவை யார் யாருடையவை என்றும் விசாரித்துப் பார்த்து ஜாப்தா தயாரிக்கத் தொடங்கினார்; எந்தெந்த பங்களாவில் மோட்டார் வண்டியிருக்கிற



தென்பதையும் விசாரிக்கலானார். அவர் போலீஸ் ஏட் உடை தரித்து வந்ததால் அவருக்கு ஏற்பட்ட அநுகூலத்தைக் காட்டிலும் பிரதிகூலமே அதிகமாயிருந்ததென்று நாம் கூறலாம். ஏனென்றால், அவர் என்ன கருத்தோடு கேட்கிறாரோவென்றும், அதனால் தமக்கு ஏதேனும் தீங்கு நேரிடுமோவென்றும் அஞ்சி அநேகமாய் ஒவ்வொருவரும், “எனக்குத் தெரியாது; இன்னம் யாரையாவது கேளுங்கள்” என்று கூறியே தட்டிக்கழித்தனராதலால், குமாரசாமிபிள்ளையின்பாடு நிரம்பவும் பிரயாசையானதாகிவிட்டது. இரண்டொருவர் தங்களுக்குத் தெரிந்த சில பங்களாக்களையும், அவற்றின் சொந்தக்காரர்களையும் குறிப்பிட்டனர். ஆனால், ஷை பங்களாக்கள் ஒவ்வொன்றிலும், இன்னம் வேறு யார் யார் இருக்கின்றனர் என்பதையோ, அதில் மோட்டார் வண்டி இருக்கிறதோ இல்லையோ என்பதையோ சொல்ல அவர்களால் இயலவில்லையாதலால், அவர் ஒவ்வோர் இடத்திற்கும் போய், அதில் மோட்டார் வண்டி இருக்கிறதா, இல்லையா என்பதை விசாரித்துத் தெரிந்துகொண்டதன்றி, அங்கு இருந்த மோட்டார் வண்டியையும் பார்வையிட்டார். ஆனால் கோபாலசாமி விவரித்த மாதிரியான மோட்டார் வண்டி சில இடங்களில் இல்லை; சில இடங்களில், கிட்டத்தட்ட அதே தோற்றமுடைய வண்டி இருந்தது. அத்தகைய பங்களாக்களின் உள்புறத்தில் நுழைந்து பார்க்க அவர் முயற்சித்தாரானாலும், சில இடங்களில் உள்ளே நுழைய அநுமதி கிடைக்கவில்லை; சில இடங்களில் அநுமதி கிடைத்ததானாலும், உள் பக்கம் கோபாலசாமி விவரித்தபடி இல்லை.

மனம் தளர ஆரம்பித்துவிட்
ஆகவே, அவருடைய மனம் ... தல்லவாதலால், தமது
டது. அந்த ஆராய்ச்சி பூர்த்தியா

முயற்சிக்குத் தக்க பலன் ஏற்படுவது சந்தேகம் என்ற அவநம்பிக்கை தோன்றத் தொடங்கியது. அவ்வித மனநிலைமையில் அவர் தமக்குக் கிடைத்த ஜாப்தாவில் உள்ள பங்களாக்களுக்கெல்லாம் சென்று கூடியவரையில் விசாரணையைப் பூர்த்தி செய்துகொண்டு, அன்றைய இரவில் அந்த ஊரிலேயே இருந்து, மறுநாள் முழுதும், அந்த ஊரிலுள்ள ஒவ்வொரு வீதியையும் சுற்றிப் பார்த்து, இன்னம் வேறு பங்களாக்கள் இருக்கின்றனவோவென்று ஆராய்ந்தார்; அதேபோல அந்த ஊரிலிருந்து செல்லும் ஒவ்வொரு ரஸ்தாவோடும் நெடுந்தூரம் சென்று உற்றுப் பார்த்தார்.

அந்த வகையில் அவரால் கண்டுபிடிக்கப் பட்ட சில புதிய பங்களாக்களுக்கும் அவர் போய்த் தந்திரமாகத் தமது விசாரணையை முடித்துக்கொண்டார். அது இரண்டாவது நாள் மாலைவரையில் பிடித்தது. சில பங்களாக்களில் கோபால்சாமி குறிப்பிட்ட விதமான மோட்டார் வண்டிகள் இருந்தனவாதலால், மோட்டார் வண்டியைக் கொண்டே இடத்தை நிச்சயப்படுத்துவது சாத்தியமானதல்லவென்ற எண்ணம் அவருக்கு உண்டாகிவிட்டது. மோட்டார் வண்டி இருந்த சில பங்களாக்களில் உள்புறத்தில் நுழைய அவருக்கு அநுமதி கிடைக்கவில்லை; சில இடங்களில் இன்னின்னார் இருக்கிறார்கள் என்ற தகவலே கிடைக்கவில்லை.

அவர் தமக்குக் கிடைத்த தகவல்களையெல்லாம் ஒரு நோட்டுப் புஸ்தகத்தில் குறித்துக்கொண்டு, அதோடு அந்த ஊருக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, அதற்கும் தஞ்சைக்கும் இடையில் இரண்டு பக்கங்களிலும் என்னென்ன ஊர்கள் இருக்கின்றன என்பதை விசாரித்துத் தெரிந்துகொண்டு, அவைகளில் மோட்டார் வண்டி போகத்தக்க



ரஸ்தா எந்தெந்த கிராமங்களுக்கு ஏற்பட்டிருந்ததோ, அங்கங்கு சென்று தமது விசாரணையை முடித்துக்கொண்டு வரத் தொடங்கவே, அது ஒரு பெரிய கடலில் ஒரு சிறிய பாக்கைத் தேடுவதுபோல முடிந்தது. அவ்வாறு அவர் தஞ்சைக்கு வடக்கு திக்கில் ரஸ்தாவுக்கு இரண்டு பக்கங்களிலுமிருந்த ஊர்களையு மாராய்ந்து கொண்டு தஞ்சைக்கு வந்து சேருவதற்குள் நான்கு நாட்கள் கழிந்துவிட்டன. தஞ்சையைச் சுற்றிலும் இன்னம் மூன்று திக்குகள் மிச்சமிருந்தன. அதுவன்றி தஞ்சையிலேயே ஏராளமான பங்களாக்களிருந்தன. அதுவன்றி, தஞ்சையில் பல பங்களாக்களில், துரைமார்களும், பெரிய அதிகாரிகளும், ஜெமீந்தார்களும், இதர தனிகர்களும் இருந்தனராதலால், அவ்விடங்களில் அவர் உள்ளே நுழைவது அறதியாய் முடியாத காரியமாகிவிட்டது. கோபாலசாமி குறிப்பிட்டதுபோன்ற மோட்டார் வண்டிகள் பல இடங்களில் இருந்தன.

அத்தனை இடங்களிலும் உள்ள பங்களாக்கள் யாவற்றையும் ஒன்றுகூட விடாமல் ஆராய்ச்சி செய்து முடிக்க சுமார் ஒரு மாத காலமாவது பிடிக்கும் என்ற எண்ணமும், அதைச் செய்தாலும், பல இடங்களில் தாம் உள்ளே போய்ப் பார்க்க இயலாதாகையால் தமது ஆராய்ச்சி உபயோகமற்றது என்ற நினைவும் உண்டாகவே, குமாரசாமி பிள்ளை அவ்வளவோடு தமது ஆராய்ச்சியை நிறுத்திவிட்டு ஐந்தாவது நாட் காலையில் வாடிய முகத்தோடு மன்னார்குடிக்கு வந்து சேர்ந்தார்.

ஆனால் பங்களாவில் திகம்பரசாமியாருடைய மனையாள் மாத்திரம் இருந்தாள். சாமியாரும், மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் ஏதோ ஓர் அவசரத் தந்தியைப் பெற்று இரண்டு

தினங்களுக்கு முன்னர் எங்கேயோ சென்றதாக குமாரசாமிபிள்ளை தமது தங்கையிடம் தெரிந்துகொண்டார். ஆனால், அவர்கள் இன்ன இடத்திற்குப் போனார்கள் என்பது தனக்குத் தெரியாதென்று சிவகாமியம்மாள் கூறினாள்.

குமாரசாமிபிள்ளை, அவர்களுக்கு வந்த தந்தி எங்கேயாகிலும் இருக்கிறதோவென்று தேடிப்பார்த்தார். அது கிடைக்கவில்லை யாதலால், அநேகமாய் அவர்கள் சென்னைக்குத் தான் போயிருக்கவேண்டு மென்று அவர் அநுமானித்துக்கொண்டார். அவர்கள் எப்போது திரும்பி வருவார்களோ என்ற மலைப்பு அவருக்குத் தோன்றியதாகையால், அதுவரையில் தாம் சும்மா இருப்பதை விட தஞ்சைக்குச் சென்று, கோபாலசாமியைக் கண்டு தாம் பார்த்த பங்களாக்களின் அமைப்பை விளக்கிக் காட்டி, அவர் அழைத்துச் செல்லப்பட்ட பங்களா அவைகளில் ஒன்றா யிருக்குமோ என்று விசாரித்தறிந்து வரலாமென்ற நினைவுக்கொண்டவராய், அப்போதே மோட்டார் வண்டியில் ஏறித் தஞ்சைக்குப்போய் கோபாலசாமியைக் கண்டு, அவரிடம் விவரங்களைச் சொல்லி, தாம் பட்டபாடுகள் யாவும் வீணென்று தெரிந்துகொண்டு, ஏமாற்றமும், ஏக்கமும் அடைந்தவராய்த் திரும்பி வந்துசேர்ந்தார்.

அன்றைய தினம் முழுதும் குமாரசாமிபிள்ளை சிந்தனையி லாழ்ந்திருந்தபடியே பொழுதைப் போக்கினார். புஷ்பாங்கியின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க அதற்கு மேல் தாம் என்ன செய்யலா மென்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்தபடி இருக்க, மறுநாள் காலையில் கண்ணப்பா சென்னையிலிருந்து நிரம்பவும் விசனகரமான முகத்தோற்றத்தோடு வந்துசேர்ந்தார். அவர் மாத்திரம் தனிமையில் வந்



ததைக் கண்ட குமாரசாமிபிள்ளை இரண்டு வகைகளில் ஆவல் கொண்டவராய், "அவர்கள் எங்கே? பின்னால் வருவார்களா?" என்றார்.

கண்ணப்பா:—(திடுக்கிட்டு வியப்போடு) எவர்களைப் பற்றிக் கேட்கிறீர்கள்?

கு. பிள்ளை:-ஸ்வாமிகளும், மீனாட்சிசுந்தரம்பிள்ளையும்.

கண்ணப்பா:—நான் பட்டணத்தி லிருந்தல்லவா வருகிறேன். என்னிடம் கேட்கிறீர்களே? அவர்கள் இங்கே இல்லையோ?

கு. பிள்ளை:—நான் ஐந்து தினங்களாய் வெளியூருக்குப் போய் நேற்றுதான் திரும்பிவந்தேன். இரண்டு நாட்களுக்கு முன்னர் எங்கிருந்தோ தந்தி வந்ததாம். அவர்கள் இருவரும் புறப்பட்டுப் போனார்கள் என்று என் தங்கை சொல்லத் தெரிந்துகொண்டேன். ஒரு வேளை நீங்கள்தான் சென்னையிலிருந்து தந்தி யனுப்பி யிருப்பீர்களோ, அங்கே தான் வந்திருப்பார்களோ வென்று நான் சந்தேகங் கொண்டிருந்தேன். அதனால் கேட்டேன். அதிருக்கட்டும்; நீங்கள் செய்த முயற்சி எப்படி முடிந்தது?

கண்ணப்பா:—இவர்களுடைய மூத்தண்ணாதானே அங்கே யிருக்கிறார்; இவர்கள் சொன்னதே சரி என்று அவரும் சொல்லிவிட்டார்.

குமாரசாமிபிள்ளை:—(நிரம்பவும் சஞ்சல மடைந்தவராய்) அடாடா! அங்கேயும் அப்படியா முடிந்துவிட்டது! அது வழியில் நியாயஸ்தலமாதலால், டிஸ்டிரிக்ட் முன்ஸீப் உத்தியோகம் பார்க்கும் கோபாலசாமிபிள்ளையின் விஷயத்தில், அவர்கள் கொஞ்சம் அநுதாபமும் சலுகையும் காட்டி,

அவரை கண்ணியமாக நடத்துவார்களென்றல்லவா நினைத்தேன். அங்கேயும் இதே வக்கீல்தான் ஆஜாரானாரோ?

கண்ணப்பா:—அங்கே ஒரு வெள்ளைக்கார துரையை அமர்த்தினோம்; தஞ்சாவூர் வக்கீலும் கூட இருந்து விவரங்களையெல்லாம் சொல்லிக்கொடுத்தார். துரை தாம் கற்ற வித்தைகளை யெல்லாம் பூர்த்தியாகக் காட்டினார். ஆனால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. "கைதி கண்ணியமான ஒரு நீதிபதியின் பதவியை வகிப்பவர் என்பதை ஜட்ஜ் துரையவர்கள் கவனிக்கவேண்டும்" என்று நம் பாரிஸ்டர் வற்புறுத்தி வற்புறுத்திப் பேசினார். "மிக பயங்கரமாகவும், அக்கிரமமாகவும் சுடப்பெற்ற ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர் சந்திரசேகருடைய பதவிக்கு இவருடைய பதவி எம்மாத்திரம். இப்பேர்ப்பட்ட கொடிய அட்டூழியச் செய்கையை சட்ட நிர்வாகிகள் இரும்புபோன்ற உரமான கையால் அடக்கியே தீரவேண்டும். ஆகையால் சட்டம் அதன் கிரமப்படி நீதி வழங்கும் விஷயத்தில் ஹைகோர்ட் நீதிஸ்தலத்தார் தங்கள் மனப்பூர்வமான ஆதரவை அதற்கு அளிப்பது இன்றியமையாத விஷயம்" என்று ஜட்ஜ் துரை அதற்கு சரேலென்று மறுமொழி கொடுத்துவிட்டார். ஆகையால் வேறு வழியின்றி நாங்கள் உடனே திரும்பி வந்துவிட்டோம்.

குமாரசாமிபிள்ளை:—அப்படியானால் இனி கோபாலசாமிபிள்ளை இந்த விசாரணை முடிகிறவரையில் சிறைச்சாலையில் இருந்தே தீரவேண்டும். அதுவரையில் ஒழுங்காய் ஆகாரம் முதலியவைகளைக் கொண்டுபோய்க்கொடுத்து வரும்படி திட்டம் செய்தீர்களா?

கண்ணப்பா:—அதைச் செய்துவிட்டுத்தான் இப்போது நேரில் வருகிறேன்.



குமாரசாமிபிள்ளை:—நான் நேற்று கோபாலசாமிபிள்ளையைப் பார்த்து, நாம் எல்லோரும் அவருடைய விஷயத்தில் தக்க முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறோம் என்று சொல்லி தைரியப்படுத்திவிட்டு வந்தேன். பட்டணத்தில் நமக்கு அநுகூலம் ஏற்படும் என்ற எண்ணத்தோடுதான் நான் அவருக்கு தைரிய வார்த்தை சொல்லிவிட்டு வந்தேன். அது இப்படி ஏமாற்றமாய் முடிந்துவிட்டது. இனி இந்த ஜட்ஜ் பிழைத்தால்தான் கோபாலசாமிபிள்ளைக்கு விமோசனம் உண்டாகும்போலிருக்கிறது. அதுவரையில் அவர் சிறைச்சாலையில் இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதே! நேற்று வரையில், அவருடைய நிலைமையில் எவ்வித மாறுதலும் தெரியவில்லை. அவருக்கு பிரக்ஞை இருப்பதுபோலத் தெரிகிறதானாலும், அவர் கண்களைத் திறக்கவுமில்லை; வாயைத் திறந்து பேசவுமில்லை. ஆகாரம் குழாய் மூலம் உள்ளே செலுத்தப்படுகிறதாம். இந்த விசித்திர நிலைமை எத்தனை நாள்களுக்கு நீடித்திருக்குமோ தெரியவில்லையே.

கண்ணப்பா:—நான் இப்போது ஆஸ்பத்திரிக்குப் போய் விசாரித்துப் பார்த்ததில், அவருடைய நிலைமை கேவலமாகிவிட்டதென்றும், அவர் பிழைப்பது துர்லபமென்றும் சொன்னார்கள். அதைக் கேட்ட பின் எனக்குப் பைத்தியம் பிடிக்கும்போலாய்விட்டது. நீங்களும் நம்முடைய ஸ்வாமிகளும் தக்க முயற்சியெடுத்து, உண்மையை வெளிப்படுத்தாவிட்டால், கோபால்சாமி தப்புவது கூடாததாகிவிடும்போலிருக்கிறது. ஸ்வாமிகளும் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் எங்கே போனார்கள் என்பது தெரியவில்லையே! உங்கள் தங்கையாருக்கு அந்தக் தகவல் தெரியாதோ?

குமாரசாமிபிள்ளை:—தெரியாதாம். வேறே ஏதாவது சம்பவம் நிகழ்ந்திருக்கலாம்; இவர்கள் உடனே வரவேண்டுமென்று யாராவது தந்தி யனுப்பி இருக்கலாம். எங்கே போயிருந்தாலும் அவர்கள் சீக்கிரம் வந்துவிடுவார்கள்; மற்ற எந்த விஷயமா யிருந்தாலும், இதற்குப் பிறகுதான் மற்றவைகளைக் கவனிப்பார்கள். நான் போய் பங்களாக்களை யெல்லாம் பார்த்துத் தகவல்களைத் தெரிந்துகொண்டு வருவேனென்ற நம்பிக்கையினால், அவர்கள் இடையில் வேறு விஷயத்தைக் கவனிக்கிறார்கள்போ லிருக்கிறது. அவர்கள் வந்தவுடன், எப்படியும் இதை கவனிப்பார்கள். அதிருக்கட்டும். நீங்கள் பட்டணத்துக்குப் போனீர்களே, அங்கே கந்தசாமிபிள்ளை எங்கே இருக்கிறார் என்று தேடிப் பார்த்தீர்களோ?

கண்ணப்பா:—அவன் போய்த் தங்கக்கூடிய இடங்களிலெல்லாம் பார்த்துவிட்டேன். அவன் காணப்படவில்லை. பட்டணம் என்ன இலேசான இடமா? ஏற்கனவே அது 27 மயில் சுற்றளவு இருந்தது; இப்போது இன்னம் பக்கங்களிலெல்லாம் வெகு தூரம் வரையில் வீடுகள் ஏற்பட்டுவிட்டன. அவ்வளவு பெரிய விஸ்தீரணத்தில் கந்தசாமியைத் தேடுவதென்பது கடலில் ஒரு கடுகைத் தேடுவது போன்றது தான்—என்றார்.

அப்போது, "ஐயா, ஐயா," என்று மிக வணக்கமாகவும், பயந்த மாதிரியும் யாரோ அழைத்த குரலோசை அவர்கள் இருந்த அறைக்கு வெளியில் உண்டாயிற்று.

உடனே குமாரசாமிபிள்ளை, "யார் அது?" என்றார்.

வெளியில் இருந்த மனிதர், "சாமியார் ஐயா இருக்காவளா? அவுகளைக் கொஞ்சூண்டு பாக்கணும்" என்றான்.



குமாரசாமி பிள்ளை, "நீ யார்? இப்படி வா" என்றார்.

உடனே ஒரு மனிதன் தயங்கித் தயங்கி அந்த அறையின் வாசற்படிக்கெதிரில் வந்து நின்று, "சாமீ, கும்பிட்றேனுங்க" என்று கூறி விநயமாகக் கைகளைக் குவித்தபடி பிரஸவவேதனைப் படுகிறவன்போலத் தவித்தான்.

அவனுடைய தோற்றத்திலிருந்து, அவன் ரெவினியூ இலாகாவைச் சேர்ந்த சேவகன்போல், பெரிய தலைப்பாகை, நீண்ட சொக்காய், டவாலிப்பட்டை, வெள்ளி வில்லை முதலிய அலங்காரங்களுடன் காணப்பட்டான். அவனுடைய ஒரு கையில் நீல நிறமான சில பிளான்களும், இன்னொரு கையில் அளக்கும் டேப்பு ஒன்றும் காணப்பட்டன. அவனுடைய மார்பில் மின்னிய வெள்ளி வில்லையில், "மதராஸ் சர்வே டிபார்ட்மென்ட்" என்ற எழுத்துக்கள் காணப்பட்டன.

அவனைக் கண்ட குமாரசாமிபிள்ளை, அவன் எதையோ அளந்துகொண்டு போக வந்திருக்கிறான் என்று உடனே சுலபத்தில் யூகித்துக்கொண்டவராய், அவனை நோக்கி நிரம்பவும் அசட்டையாய்ப் பேசத்தொடங்கி, "என்னப்பா, பொழுது விடிந்தால், பொழுது போனால் உங்கள் தொல்லையே பெரிய தொல்லையாய்விட்டதே! அடிக்கடி யார் யாரோ வருகிறார்கள்; அளந்துகொண்டு போகிறார்கள். இன்னம் கணக்கு விளங்கவில்லையா? எங்கே வந்தாய்?" என்று நயமாகவும், புரளியாகவும் பேசினார்.

உடனே சேவகன், "சாமியார் எசமான் நீங்கதானா?" என்று மிக பயந்த குரலில் பணிவாக வினவினான்.

குமாரசாமிபிள்ளை, "அவர்கள் ஊரில் இல்லை. எதற்காக அவர்களைத் தேடுகிறாய்?" என்றார்.

சேவகன், “வெளியே சர்வே சூப்பிரன்டெசமான் நிக்கிறுவ. அவுக மேத்தணிக்கை பண்ட்றவுக. ரெண்டொரு அளவுங்களைப் பாக்கணுமாம். சாமியார் ஐயா இருந்தா, அவுக வந்து கேட்டுக்கறேன்றாங்க. கூப்ட்டாறட்டுங்களா?” என்றான்.

அதே காலத்தில், அவனுக்குப் பின்னால், ஓர் உத்தியோகஸ்தர் வந்து பிரஸன்னமானார். அவர் வெயிலுக்காக அணியப்படும், பச்சை மூக்குக்கண்ணாடி, டொப்பி, மீசை, சட்டை, நிஜார், பூட்ஸ் முதலிய அங்கங்கள் உடையவராய்க் காணப்பட்டார். அவருடைய தோற்றம் பாழ்நெற்றியோடு கூடிய ஒரு நாயுடுவின் தோற்றமாயுமிருந்தது; ஒரு சட்டைக்காரக் கிறிஸ்டியனுடைய தோற்றமாயுமிருந்தது. அவர் உயர்தரமான உடுப்புகள் அணிந்திருந்ததிலிருந்து, அவர் தக்க மேலதிகாரி என்ற அபிப்பிராயம் உண்டானதன்றி அவருக்கு சம்பளம் சுமார் 500 ரூபாய்க்குக் குறைவாயிராது என்ற ஓர் எண்ணமும் உண்டாயிற்று. அவருடைய கைகளில் ஒரு பிளானும், ஒரு நோட்டுப் புஸ்தகமும், பென்ஸிலும் காணப்பட்டன. அவரைத் தொடர்ந்து நான்கு கூலியாட்கள், கிராஸ் ஸ்டாப் (Cross-Staff) தடிகள், அளவைச் சங்கிலிகள், ஸர்கம்பெரன்டர் (Circumferentor) என்னும் கருவி, அதை நிற்கவைக்கும் முக்காலி, போட்டோ யந்திரம் போல் காணப்பட்ட இரண்டொரு உயர்தர சர்வே யந்திரங்கள் முதலியவற்றுடன் கும்பலாக வந்து மூலைக்கொருவராய் நின்றனர்.

அத்தகைய பரிவாரங்களோடு திடீரென்று வந்து தோன்றிய சர்வே ஆபீஸர் மிக கம்பீரமாகவும், அமர்த்தலாகவும் உள்ளே பார்த்து இங்கிலீஷில் பேசத்தொடங்கி, “நீங்



கள் தான் மிஸ்டர் திகம்பரசாமியாரா?” என்று மேல்நாட்டு மரியாதை மோஸ்தரில் வினவினார்.

குமாரசாமிபிள்ளை சேவகனிடம் காட்டிய கோப அவதாரத்தை உடனே மாற்றிக்கொண்டு, மிக விநயமாய் சம்பாஷிக்கத் தொடங்கி, “சுவாமிகள் ஊரில் இல்லை. உங்களுக்கு என்ன ஆகவேண்டும்?” என்றார்.

சர்வே ஆபீஸர்:—நீங்கள் யார் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமோ?

குமாரசாமிபிள்ளை:—அவசியம் தெரிந்து கொள்ளலாம். நான் சுவாமிகளுடைய மைத்துனன்.

சர்வே ஆபீஸர்:—இந்த ஜில்லாவில் சில வருஷங்களாக சர்வே வேலை நடந்து வருகிறதென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இதுவரையில் அநேகர் அளவெடுக்க வந்து வந்து தொந்தரவு கொடுத்திருப்பார்கள். நான் எல்லாவற்றிற்கும் முடிவாக சில இனங்களைத் தனிக்கை பார்க்கவேண்டிய பொறுப்பு வாய்ந்தவன். நான் செய்வது டோப்போகிராபிகல் சர்வே (Topographical Survey) என்று குறிக்கப்படும். அதாவது, வயல்கள், வீடுகள் முதலியவைகளைக் கீழ் உத்தியோகஸ்தர்கள் அளந்து, பிளான் தயாரிக்கிறார்களா; அதில், கிணறுகள், கோவில்கள், தோப்புகள், குளங்கள் முதலிய நிரந்தரமான அடையாளங்களைக் கீழ் அதிகாரிகள் சரியாகக் குறித்திருக்கிறார்களா வென்று நான் பார்க்கவேண்டும். அதுவுமன்றி, அளவுகள் சரியாய்க் குறிக்கப்பட்டிருக்கின்றனவா வென்பதையும் அங்கங்கு பார்க்கவேண்டும். அந்த சர்வே நடத்துவதில் இங்கே இருப்பவருக்கு எவ்வித இடைஞ்சலோ, அசௌகரியமோ ஏற்படாது.

குமாரசாமிபிள்ளை:—கீழ் அதிகாரிகள் ஒரு கிணற்றைக் குறிக்க மறந்துவிட்டால், அதை நீங்கள் அளந்து குறித்துக் கொள்வீர்களோ?

சர்வே ஆபீஸர் :—ஆம்; அதற்கு இப்போது புதிய இயந்திரம் ஒன்று வந்திருக்கிறது. அதை வைத்தால், உடனே அது அந்தக் கிணற்றையும், அதன் எல்லைகளையும், நீள அகல அளவுப்படி போட்டோப் பிடித்துவிடும்.

குமாரசாமிபிள்ளை :—கீழ் அதிகாரிகளுக்கு அந்த இயந்திரம் கொடுக்கப்படுவதில்லையோ?

சர்வே ஆபீஸர் :—அதன் விலை ஆயிரம் ரூபாய். அது எங்களைப்போன்ற தலைமை அதிகாரிக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஏனென்றால் நாங்கள் ஜில்லா முழுதிற்கும் போய் மேல் தனிக்கை செய்யவேண்டுமாதலால், எங்கள் வேலை சுலபமாயும், சீக்கிரத்திலும் நடக்கவேண்டுமென்று இது கொடுக்கப்படுகிறது.

குமாரசாமிபிள்ளை :—(புன்னகையாக) ஓகோ! இது சாதாரணமான போட்டோ இயந்திரம் போலவேதான் இருக்கிறது. அப்படியானால் நீங்கள் போகும் வீடுகளில் உள்ள மனிதர்களுக்கு அவர்களுடைய போட்டோப் படம் ஒன்று இனமாய் எடுத்துக் கொடுத்துவிட்டுப் போவீர்கள்போலிருக்கிறதே!

சர்வே ஆபீஸர் :—(விநயமாக நகைத்து) ஓ! அவசியம். இப்படியேதான் பல இடங்களில் கேட்கிறார்கள். அவரவர்களுக்குப் படம் எடுத்துக் கொடுத்துவிட்டுத்தான் வருகிறோம். ஆனால் இதில் ஓர் அநுகூலம். மற்ற சாதாரண இயந்திரம் போல், இதில் படம் பிடித்து சுத்தப்படுத்த அதிக நேரம் பிடிக்காது—என்றார்.

அவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருந்த காலத்தில், முதலில் வந்த சேவகன் படம் பிடிக்கும் இயந்திரத்தண்டை போய், அதைப் பலவகையாகத் திருப்பிவைத்து, ஏதோ



குறிப்புகள் பார்ப்பதும், விசைகளையும் முடுக்குவதுமாகச் செய்துகொண்டிருந்தான்.

அப்போது சர்வே ஆபீஸர் குமாரசாமிபிள்ளையைப் பார்த்து, "எங்களுக்கு இந்த பங்களாவில் அதிக வேலை இல்லை; கால்மணி நேர வேலைதான். நீங்களும் கூட வந்தால், சில முக்கியமான இடங்களின் அளவுகளைப் பார்த்துவிட்டுப் போகிறோம்" என்றார்.

குமாரசாமிபிள்ளை, "சரி; வாருங்கள். உங்களுக்கு எங்கெங்கே அளவுகள் எடுக்கவேண்டுமோ அங்கங்கு எடுக்கலாம்" என்றார்.

உடனே சர்வே ஆபீஸர் தமது ஆள்களுடன் கட்டடத்தின் உள்புறத்தில் புகுந்து, டேப்பைக்கொண்டு சில அளவுகளை எடுக்கும்படி ஆள்களை ஏவியபடி சுமார் 15 நிமிஷ காலத்திற்குள் அந்த பங்களா முழுவதையும் சுற்றிப் பார்த்து முடித்தார். அப்போது சேவகன் படம்பிடிக்கும் இயந்திரத்தை எடுத்துக்கொண்டு பல இடங்களுக்கும் அவர்களோடு தொடர்ந்து சென்று அடிக்கடி விசையைமுடுக்கி ஏதோ வேலை செய்தபடி சென்றான்.

முடிவாக சர்வே ஆபீஸர் குமாரசாமி பிள்ளையை நோக்கி, "சரி; எங்கள் வேலை முடிந்துவிட்டது. கீழ் அதிகாரிகள் சரியாகவே அளந்திருக்கிறார்கள். தவறு ஒன்றுமில்லை; உங்களுக்கு நான் நிரம்பவும் கடமைப்பட்டவனானேன். மிஸ்டர் திகம்பரசாமியார் வந்தால், சர்வே ஆபீஸர் வந்து தனிக்கை செய்துவிட்டுப் போனதாகச் சொல்லுங்கள்" என்று கூறி சலாம் வைத்துவிட்டுச் சென்றார்.

முதலில் வந்த சேவகன் குமாரசாமி பிள்ளையை நோக்கி, "சாமியார் ஐயா, எப்படி இருப்பாரோ, என்று சொல்லுவாரோன்னு, எங்க எசமான் பயந்துக்கிட்டே வந்தாரு. நல்ல வேளையா, சாமியார் ஐயா இல்லாமெ நீங்க இருந்தீங்க. அதுனாலெ எங்க வேலையும் சுருக்குனு முடிஞ்சுதுங்க, உத்தரவு வாங்கிக்கறேனுங்க" என்று மிகப் பணிவாகக் கூறிக் குனிந்து கும்பிடு போட்டுவிட்டு, சர்வே ஆபீஸரைத் தொடர்ந்து வெளியில் சென்றான்.

அவர்கள் எல்லோரும் போனவுடன் கண்ணப்பா குமாரசாமி பிள்ளையைப் பார்த்துப் புன்னகை செய்து, "சுவாமிகளைப் பார்க்காதவர்கள், அவர்கள் பேயோ, பூதமோ என்று அஞ்சி நடுங்குகிறார்கள். ஆனால், சுவாமிகள் சுத்த ஸாத்விக வடிவமாய் இருக்கிறார்கள். ஓர் எறும்பிற்குக்கூட அவர்கள் மனதாலும் கெடுதல் நினைப்பதுமில்லை; துன்ப மிழைப்பது மில்லை; யோக்கியர்களுக்குத் தம்மாலென்ற நன்மையைச் செய்கிறார்கள்" என்றார்.

குமாரசாமிபிள்ளை, "ஸாதுக்களின் மகத்துவம் எப்போதும் அப்படிப் பட்டதுதான். நம்முடைய மகாத்மா காந்தியின் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்களேன். அவர் அஹிம்சா தர்மத்தை அநுஷ்டிக்கிறார். வலது கன்னத்தில் ஒருவர் அடித்தால், இடது கன்னத்திலும் அடிக்கும்படி அதையும் காட்டவேண்டும் என்று ஏசுநாதர் உபதேசித்தாராம். உன்னுடைய வஸ்திரத்தை ஒருவன் களவாடினால், உன் சட்டையையும் கழற்றிக் கொடுத்துவிடு என்பதும் அவருடைய உபதேசம். இவைகளை யெல்லாம் மகாத்மா காந்தி கிரியாம்சையில் செய்து காட்டுவதையே சத்தியாக்கிரகம் என்று குறிக்கிறார்கள். மகா பயங்கரமான



புதிய புதிய யுத்தக்கருவிகளுடன் தொடர்ச்சியாக நான்கு வருஷகாலம் கொடிய யுத்தம் நடத்தி இந்த உலகத்தையே ஒரு கலக்குக் கலக்கிவிட்ட ஜெர்மன் சக்கரவர்த்தியான கெய்சரைக் கண்டுகூட இங்கிலீஷ்காரர்கள் அவ்வளவாக அஞ்சவில்லை; பரமஸாதுவும் அஹிம்ஸையையே ஒரு மதமாக போதித்து அதை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர முயற்சித்தவருமான மகாத்மா காந்தி சுயாதீனத்தோ டிருந்தால், தங்களுக்கு ஜெர்மன் யுத்தத்தைவிட பெரிய அபாயம் நேர்ந்து விடுமென்று அஞ்சுகிறவர்கள் போல், அவரை அடிக்கடி சிறையில் அடைத்து வைக்கவில்லையா! இவ்வளவு தூரம் ஸாத்விக தர்மத்தை உபதேசித்த ஏசுநாதரை அந்தக்காலத்து அதிகாரிகள் சிலுவை மரத்தில் வைத்து கைகள் கால்கள் முதலியவற்றில் ஆணியை வைத்து அடித்து ரைத் தொங்கவிட்டு. சித்திரவதை செய்ததாக கிறிஸ்தவ வேதம் சொல்லுகிறதே. இதெல்லாம் உலகத்தில் உள்ள மகத்தான ஆச்சரியங்களில் ஒன்று என்றுதான் நாம் கருத வேண்டும்" என்றார்.

கண்ணப்பா:—புண்ணியாத்மாவான நம் ஸ்வாமிகளை நேரில் தரிசித்திருந்தால், இந்த சர்வே ஆபீஸரைப் பிடித்துள்ள மும்மலங்களும் விலகிப்போயிருக்கும். அப்படியிருக்க, அவர்களைப் பார்க்காமல் போனதைப்பற்றி, இவன் சந்தோஷம் தெரிவிக்கிறான்.

குமாரசாமிபிள்ளை:—(திடீரென்று வேறு எதையோ நினைத்துக் கொண்டவர் போல், அந்த விஷயத்தை அவ்வளவோடு விட்டு) அவன் எப்படியாவது எண்ணிக்கொண்டு போகட்டும். இவர்களைப் பார்த்ததிலிருந்து எனக்கு இன்னொரு யுக்தி தோன்றுகிறது. நான் சில பங்களாக்களுக்குள் நுழைந்து பார்க்க முயன்றபோது, என்னை உள்ளே விட

மாட்டோமென்று தடுத்துவிட்டார்கள். இந்த சர்வே ஆபீஸரைப்போல் தஞ்சைக்கும் யாராவது நியமிக்கப்பட்டிருக்கலாம். அவர் அங்கிருக்கும் பங்களாக்களுக்குள் தாராளமாய்ப் போய்ப் பார்ப்பார். அவருடன் நானும் கூடப்போனால், என் கருத்து சுலபத்தில் நிறைவேறிவிடுமென்ற நம்பிக்கை உண்டாகிறது. ஸ்வாமிகள் வருவதற்குள் நான் ஏதாவது அநுகூலமான தகவலை சேகரித்து வைக்காமல் இப்படி ஏமாளியா யிருப்பது எனக்கு வெட்கமா யிருக்கிறது. நீங்களும் வருகிறீர்களா?

கண்ணப்பா:—சர்வே ஆபீஸர் வீடுகளைப் பார்க்கும் போது, நாம் அவருடன்கூட ஒரு வீட்டிற்குள் போகலாம்; இரண்டு வீட்டிற்குள் போகலாம். தொடர்ச்சியாக எல்லா வீட்டிற்குள்ளும் போனால் அவர்கள் சந்தேகங் கொண்டு கேட்க மாட்டார்களா? நாம், குழந்தைகளாயிருந்து அப்படிச் செய்தால், ஏதோ விளையாட்டுப் புத்தியால் வேடிக்கை பார்க்க அப்படி வருகிறோமென்று நினைத்துக்கொண்டு சும்மா இருப்பார்கள். நாம் பெரிய ஆள்கள்; பார்வைக்கு கண்ணியமான மனிதர்கள்போ லிருக்கிறோம். நாம் அவர்களைத் தொடர்ந்து சென்றால், அவர்கள் சம்சயம் கொள்வது நிச்சயம்.

குமாரசாமிபிள்ளை:—நீங்கள் சொல்வது மெய்தான். உங்களைப் போன்றவர்கள் அப்படிச்செய்வது உசிதமானதல்லதான். நான் இன்னொரு காரியம் செய்யலாமென்று நினைக்கிறேன். இப்போது வந்தவர்களில் ஒருவன்தான் சர்வே ஆபீஸருடைய சேவகன்; மற்றவர்கள் கூலியாட்கள். நான் ஒரு கூலியாள் வேலையில் அமருவதாகச் சொல்லி, மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் கூலியைவிட கொஞ்சம் குறைவாக வாங்கிக்கொள்ள ஒப்புக்கொண்டால், எனக்கு



அந்த உத்தியோகம் உடனே கிடைத்துவிடும்.—நான் பல பங்களாக்களுக்குள் போய்ப் பார்க்கும் சந்தர்ப்பம் வாய்க்கும்;—என்றார். அதைக் கேட்ட கண்ணப்பா தங்கள் பொருட்டு அவர் அவ்வளவு இழிவான பதவியை வகிக்க இணங்குகிறாரே என்ற எண்ணத்தினாலும், நன்றியறிதலின் பெருக்கினாலும் கண்கலக்கமும், அசட்டுப் புன்னகையும் தோற்றுவித்தவராய், "எங்களுக்காக நீங்கள் என்னென்ன இழிவிற்கெல்லாம் ஆளாக நினைக்கிறீர்கள்! ஸ்வாமிகளும் இப்படியேதான் பல தடவைகளில் எவ்வளவோ இளப்பமான நிலைமையை யெல்லாம் வகித்திருக்கிறார்கள். இவ்விதமான கடன்களை யெல்லாம் நாங்கள் எப்படித்தான் திருப்பிச் செலுத்தப் போகிறோமோ தெரியவில்லை" என்றார்.

உடனே குமாரசாமிபிள்ளை திடீரென்று ஏதோ ஒரு தீர்மானத்தைச் செய்து கொண்டவராய், "சரி; அது இருக்கட்டும். இன்னொரு சமயத்தில் அதைப் பற்றி யோசிப்போம். நீங்கள் இங்கேயே இருங்கள். நான் இந்த சேவகனிடம் பேசி சில தகவல்களைத் தெரிந்துகொண்டு இதோ ஐந்து நிமிஷத்தில் வருகிறேன்" என்று கூறிவிட்டு எழுந்து விரைவாக அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

சென்றவர், அடுத்த நிமிஷம், பங்களாவின் முன்புறத்தி லிருந்த வீதியை யடைந்து, இரண்டு பக்கங்களிலும் திரும்பி, சர்வே ஆபீஸரும் அவருடைய பரிவாரங்களும் எங்கே இருந்தனர் என்று பார்த்தார். சர்வே ஆபீஸர் தமது கையிலிருந்த நீலப்படத்தைப் பார்ப்பதும், மிக அமர்த்தலாய் நிமிர்ந்து இப்புறத்திலும் அப்புறத்திலும் இருந்த வீடுகளை கவனிப்பதுமாய் முன்னால் செல்ல, அவரைத் தொடர்ந்து கூலியாட்களும், கடைசியில் வில்லைச் சேவகனும்

பின்னால் சென்றுகொண் டிருந்தது தெரிந்தது. அவ்வாறு வில்லைச் சேவகன் கடைசியாகச் சென்றது தமக்கு நிரம்பவும் அநுகூலமான விஷயமென்றுகருதி அவர் அந்த மனிதனிடம் நெருங்க, அவன் உடனே திரும்பிப் பார்த்தான். குமாரசாமி பிள்ளை, நிற்கும்படி அவனை நோக்கி சைகை செய்ய, அவன் மிகப்பணிவாகவும், மரியாதையாகவும் கப்பென்று நின்று, "என்னையா கூப்டீங்க, எசமானே?" என்று தணிவான குரலில் நிரம்பவும் அடக்க வொடுக்கமாக வினவினான்.

குமாரசாமிபிள்ளை புன்னகையால் மலர்ந்த முகத்தோடு அவனைப் பார்த்து, "ஆமா உன்னைத்தான்" என்று கூறிய படி அவனிடம் நெருங்கி, "உன்னோடு ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும். இப்போது சர்வே ஆபீஸர் எங்கே போகிறார்? வேறே எந்த இடத்தையாவது பார்க்கப் போகிறாரா?" என்றார்.

சேவகன், "இந்தூருலெ பாக்க வேண்டியதெல்லாம் தீந்து போச்சுதுங்க. இப்ப தஞ்சாவூருக்குப் போவணுங்க" என்றான்.

குமாரசாமிபிள்ளை:—ரயில் வழியாய்ப் போகப் போகிறீர்களா?

சேவகன்:—இல்லீங்க. எங்க எசமானுக்கு மோட்டாக் காரு இருக்குதுங்க. அது இந்த வீதி மொடக்குலெ நிக்கிதுங்க; அதுலெ போயி எறிக்கிட்டு ஒடனே தஞ்சாவூருக்குப் போவப்போறோம். ஏஞ்சாமி நீங்க கேக்கிறீங்க? ஒங்கிளுக்கு எங்க எசமானாலெ என்னாச்சும் காரியம் ஆவணுமா? அப்பிடி இருந்தா, சொல்லுங்க. நானு சணநேரத்துலெ முடிச்சுத்தாறேனுங்க.

குமாரசாமிபிள்ளை:—உன் பெயரென்னப்பா?



சேவகன்:—எம்பேரு ராமராசு ஙங்க.

குமாரசாமிபிள்ளை:—உன் நெற்றி நாமத்திலிருந்தும், மீசையிலிருந்தும் நீ நாயுடு, அல்லது, ராஜு ஜாதியைச் சேர்ந்தவனா யிருக்கவேண்டு மென்று நினைத்தேன். என் யூகம் சரியாய்ப் போய்விட்டது. உங்கள் எஜமானுடைய பெயர் என்னவோ?

சேவகன்:—அவுரோடெ பேரு தேவாசீர்வாதம்பிள்ளைங்க; ஜாதிலெ கிறீஸ்தவரு. பாக்கறத்துக்கு மொறுக்கா யிருந்தாலும், நல்ல தங்கமான மனிசருங்க. லெஞ்சம் வாங்கறத்துலெ புலிங்க. ஆனா, கை நீட்டி என்னாச்சும் வாங்கிப் புட்டா, எப்பிடியாச்சும் சகாயம் பண்ணி வச்சுப்புட்டுத்தான் குந்துவாருங்க. ஒங்கிளுக்கு என்னாதான் ஆவணும் கறத்தைச் சொல்லுங்களேன்—என்றான்.

அதைக் கேட்டவுடன் குமாரசாமிபிள்ளையின் மனதில் அபாரமான சந்தோஷமும், நம்பிக்கையும் உண்டாயின. அந்த சர்வே ஆபீஸர் கண்டிப்பான மனிதரா யிருந்தால் தமது யுக்தியைத் தாம் நிறைவேற்றுவது கூடாததாகிவிடு மென்ற எண்ணம் அவருடைய மனதில் ஏற்பட்டிருந்த தாகையால், அவர் இலஞ்சம் வாங்கிக்கொண்டு நன்மை செய்கிறவர் என்னும் செய்தியைக் கேட்கவே, அவர் மிகுந்த உற்சாகமும், ஊக்கமும் கொண்டவராய், தாம் கூலியாளாய் அவர்களோடு இருக்கலாமா, அல்லது, அவருக்கு ஏதேனும் இலஞ்சம் கொடுத்து, அவருடன் கூடவே போய்க்காரியத்தை சாதித்துக் கொள்ளலாமா என்ற நினைவைக் கொண்டவராய் இரண்டொரு நிமிஷ காலம் சிந்தனை செய்த பின், அவனுடன் மிகவும் தந்திரமாகப் பேசத்தொடங்கினார்.

குமாரசாமிபிள்ளை:—இந்த சர்வே ஆபீஸர் நம்முடைய ஜில்லா முழுதிற்கும் கடைசியான தனிக்கை அதிகாரி என்று

சொன்னாரே. இவர் தஞ்சாவூரிலுள்ள வீடுகளை யெல்லாம் பார்த்துவிட்டாரா?

ராமராஜு:—இன்னும் பாக்கல்லீங்க. ஒவ்வொரு தாலூக்காவாப் பாத்துக்கிட்டே வர்ராரு. நாகப்பட்டணத்துலெ யிருந்து ஆரம்பிச்சாரு. நாகப்பட்டணம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி இந்த மூணும் முடிஞ்சுதுங்க. அடுத்தாப்புலெ தஞ்சாவூரைப் பாக்கப் போறாரு. ஏன், ஒங்களுக்குத் தஞ்சாவூருலெ என்னாச்சும் காரியம் ஆவணுங்களா?

குமாரசாமிபிள்ளை:—எனக்கு இந்த ஆபீஸரால் எதுவும் ஆகவேண்டியதில்லை. உன்னால்தான் ஒரு காரியம் ஆகவேண்டும். அதற்கு உனக்கு நான் தகுந்த சன்மானம் வழங்குகிறேன்.

ராமராஜு:—நானு எம்பிட்டு மனிசன் எசமானே. என்னாலெ என்ன ஆவப்போவுதுங்க. எல்லாத்துக்கும் சங்கதியைத் தொறந்து சொல்லுங்க எசமானே. என்னாலெ ஆவறதானா, அவசியம் செய்யறேனுங்க.

குமாரசாமிபிள்ளை:—இந்த ஆபீஸரோடு நீயும் மற்ற ஆள்களும் வந்திருக்கிறீர்களே; நீ மாத்திரம் சர்க்கார் உடுப்புப் போட்டிருக்கிறாய்; மற்றவர்கள் சாதாரணமாக துணி கட்டி யிருக்கிறார்களே! காரணமென்ன?

ராமராஜு:—நானு ஒருத்தந்தான் பர்மனென்ட் சேவகனுங்க. மத்தவிங்க அன்னாடக் கூலி யாளுங்க. அப்பப்ப இருக்கற வேலைக்கித் தக்கினாப்புலெ, நாங்க கூலியாளெ வச்சுக்கலாம்; வேலை இல்லாமெப்போனா நிறுத்திப்புடலாம்.

குமாரசாமிபிள்ளை:—ஒவ்வொருவனுக்கும் கூலி எவ்வளவு?

ராமராஜு:—நாளு ஒண்ணுக்கு எட்டணாங்க.



குமாரசாமிபிள்ளை:—எனக்கு இந்த சர்வே வேலை கற்றுக்கொள்ள வேண்டுமென்கிற ஆசை உண்டாகிறது. நான் சாதாரணமாக உங்களோடு நீங்கள் போகிற இடத்திற்கெல்லாம் வருவது சரியல்ல. அப்படி வந்தாலும், சங்கிலியையோ, டேப்பையோ பிடித்து வேலை செய்யும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்காது. ஆகையால் நான் ஒரு கூலியாளாக அமர்ந்து மற்றவர்களோடிருந்து வேலை செய்கிறேன். எனக்கு ஒவ்வொரு நாளைக்குச் சேரவேண்டிய பணத்தை நீயே எடுத்துக்கொள். நீங்கள் தஞ்சாவூரிலுள்ள வீடுகளைப் பார்க்கிறவரையில் நான் உங்களோடு இருக்கிறேன். நீங்கள் வேறு தாலுக்காவுக்குப் போகும்போது நான் விலகிக்கொள்ளுகிறேன். நான் விலகிக் கொள்ளும்போது, உனக்கு ரொக்கமாக ரூபாய் இனாம் கொடுக்கிறேன்—என்றார்.

அதைக் கேட்ட சேவக ராமராஜு வியப்படைந்து, அவர் கூறியதை நம்பாதவராய், "என்ன, எசமானே, நாங்க தான் சாக்கிரி வேலைக்கு வரன்வாங்கி வந்தவங்க. ஒங்களுக்கு ஏன் அந்த மாதிரி தலை யெழுத்து. நீங்க நல்ல பெரிய மனிசரு கணக்கா இருக்கறீங்க. இந்த சர்வே வேலை ஒங்களுக்கு என்னாத்துக்குத் தெரியணும்? அப்பிடித்தான் இதைத் தெரிஞ்சுக்கணும்னா, ஒரு பொய்ஸ்தகம் இருக்குதுங்க. அதைப் படிச்சா எல்லாம் தெரிஞ்சு போவுதுங்க. இதுக்காவ, நீங்க கூலி வேலை பாக்கணுங்களா! கொஞ்சநேரத்துக்கு மின்னாலே நீங்க சாமியாரய்யாவோடெ மச்சினாருன்னு சொன்னீங்களே! சாமியாரய்யா பேரைக் கேட்டா இந்த ஒலகமே நடுங்குதே! அப்பிடிப்பட்டவரோடெ மச்சுனரு கூலி வேலை பாக்கறதா! இதை நானு எங்க எசமாங்கிட்டச் சொன்னா, அவுரு என்னை பூட்ஸ் காலாலெதான் ஒதைப்பாரு. நீங்க என்னமோ தெசமாகத்

தான் என்னுச்சும் சங்கதி சொல்லப்போறீங்கன்னு நானும் நெனைச்சுட்டேன். நீங்க வேடிக்கை பண்ணுறீங்க. எனக்கு நேரமாவுதுங்க. எசமான் ரொம்ப தூரம் போயிட்டாருங்க. நானு உத்தரவு வாங்கிக்கறேனுங்க" என்று கூறியபடி போக ஆரம்பித்தான்.

உடனே குமாரசாமிபிள்ளை மனப்பூர்வமாக உண்மை பேசுகிறவர் போல வற்புறுத்தலாகப் பேசத்தொடங்கி, "இரப்பா, போகலாம். நான் சொன்னது முழுதும் நிஜமே. இல்லாவிட்டால் நான் பங்களாவை விட்டு இவ்வளவு தூரம் ஓடிவருவேனா? உன்னை நான் எதற்காகப் புரளி பண்ண வேண்டும். அந்த மாதிரி நீ நினைப்பது தப்பு. நான் உண்மையில் உங்களோடு கொஞ்ச காலம் இருக்க விரும்புகிறேன். என்னை நீங்கள் கூலியாளாக வைத்துக்கொண்டாலும் சரி; சிநேகப் பான்மையாக அழைத்துக்கொண்டு போனாலும் சரி; நீங்கள் தஞ்சாவூரில் உள்ள பங்களாக்களைப் பார்த்து முடிக்கும்வரையில் நான் கூட இருக்கவேண்டும். அதற்காக, உங்கள் எஜமானுக்கு ஏதாவது பணம் கொடுக்க வேண்டுமானாலும், கொடுக்கத் தடை இல்லை. நீ போய் இதை அவரிடம் சொல்லி எப்படியாவது சரிப்படுத்தப்பா. நான் சொல்வதைப்பற்றி நீ இன்னும் சந்தேகமடைகிறாய்போலிருக்கிறது. இதோ இந்தப் பணத்தை நீ எடுத்துக்கொள். இனியாவது நான் சொல்வதை நீ நம்புவாயென்று நினைக்கிறேன்" என்று கூறித் தமது மணிபர்ஸிலிருந்த 5 ரூபாய் நோட் ஒன்றை எடுத்து அவனுடைய வலது கையைப் பிடித்து அதில் வைத்து விரல்களை மடக்கிவிட்டார்.

அதைக் கண்டு, தனது சந்தோஷத்தை மறைக்கமாட்டாத சேவக ராமராஜு நோட்டைத் தனது சட்டைப்பைக்குள் வைத்து பத்திரப்படுத்திக் கொண்டவனாய், "எசமான்



தமாஷ் பண்ணுறீங்களாங் காட்டியும்னு நெனைச்சேனுங்க. இப்ப நம்பறேனுங்க. எல்லாத்துக்கும் நீங்க கொஞ்சுண்டு பின்தங்கி வாங்க; நானு முன்னாலெ போயி சர்வே ஆபீஸர் ஐயாக்கிட்டப் பக்குவமாச் சொல்லி சரிப்படுத்தறேனுங்க" என்று கூற, அதைக் குமாரசாமிபிள்ளை ஏற்றுக்கொண்டார்.

உடனே சேவக ராமராஜு விரைவாகச் சென்று, சுமார் கால் பர்லாங்கு தூரம் முன்னால் போயிருந்த தன் கோஷ்டியாருடன் போய்ச் சேர்ந்து, சர்வே ஆபீஸரிடம் நெருங்கி, மிக வணக்க வொடுக்கமாக ஏதோ வார்த்தைகள் கூறியது தெரிந்தது. சர்வே ஆபீஸர் உடனே பின்புறம் திரும்பிப் பார்த்துவிட்டு மறுபடி முன்புறம் திரும்பி நடந்தார்.

அதன் பிறகு இரண்டு நிமிஷகாலத்தில், அவர்கள் வீதியின் முடக்கில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் வண்டியண்டை போய்ச் சேர்ந்தனர். அதன் சாரதி தன் ஆசனத்திலேயே உட்கார்ந்துகொண்டிருந்தான். அது ஐந்து ஆசனங்களும், நடுநடுவில் விசாலமான இடங்களும் உடைய பெரிய மோட்டார்வண்டி. சர்வே ஆபீஸர் ஏறி முன்பக்கத்து ஆசனமொன்றில் உட்கார்ந்து கொண்டார். மற்றவர்கள் தங்கள் கருவிகளுடன் பின்புறத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டனர்.

அவ்வாறு அவர்கள் வண்டியில் ஏறியதைக் கண்ட குமாரசாமிபிள்ளை ஓடோடியும் சென்று அடுத்த நிமிஷம் மோட்டார் வண்டியண்டைபோய் நிற்க, அவரது வருகையை எதிர்பார்த்திருந்த சேவகன் சர்வே ஆபீஸரை நோக்கி, "சாமியார் ஐயாவோடெ மச்சுனரு இதோ வந்திருக்காக" என்றான். உடனே சர்வே ஆபீஸர் சரேலென்று திரும்பிப்

பார்த்து, "என்ன, தஞ்சாவூரில் நாங்கள் சர்வே நடத்துவதைப் பார்க்கவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களாமே! நாங்கள்தான் வயிற்றுப் பிழைப்பிற்காக இந்தத் தொல்லையைக் கட்டிக்கொண்டு அழுகிறோம். உங்களுக்கென்ன தலைவிதி. சரி; ஏறி உட்கார்ந்துகொள்ளுங்கள். பின்னால் இடம் கொடப்பா" என்றார்.

அந்த அநுகூலமான மறுமொழியைக் கேட்ட குமாரசாமிபிள்ளை நிரம்பவும் மகிழ்ச்சி யடைந்தவராய் உடனே வண்டியில் ஏறி ஓர் ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

உடனே வண்டி புறப்பட்டு ஓடத் தொடங்கியது. மன்னார்குடியிலிருந்து தஞ்சை சுமார் 25 மையில் தூரத்திலுள்ளது. இரண்டிற்கும் நடுவில் ஒரு ரஸ்தா விருக்கிறது. அதன் வழியாகவே சுமார் ஒருமணி காலத்தில் அவர்கள் தஞ்சைக்குப் போய்ச் சேர்ந்தனர். அவ்வாறு சென்ற காலத்தில், சர்வே ஆபீஸரோ, சேவகனோ பின்னால் திரும்பிப் பார்க்கவுமில்லை; குமாரசாமி பிள்ளை இருந்ததைப் பொருட் படுத்தவுமில்லை யாதலால், அவர் தங்களோடு வந்ததை மறந்து போனவர்கள் போல் அவர்கள் காணப் பட்டனர். சர்வே ஆபீஸர் தஞ்சையில் மானம்புச்சாவடியில் இருந்த சில பங்களாக்களையும் இரண்டொரு வீடுகளையும் தனிக்கை செய்யவேண்டுமென்று தீர்மானித்து, அவைகளுக்குத் தேவையான பிளான்களுடன் வந்திருந்தார். மோட்டார் வண்டி ஆலிவர் துரை பங்களாவிற் கெதிரில் ஒரு மூலையில் நிற்கவைக்கப் பட்டது.

சர்வே ஆபீஸரும், மற்றவர்களும் கீழே இறங்கினார்கள். சர்வே ஆபீஸர் சேவக ராமராஜுலுவைப் பார்த்து, "நாம் பார்க்க வேண்டிய இடங்களுக்கு முனிசிபல் ஆபீஸில்



இருந்து, வீட்டு பிளான்களை யெல்லாம் குமாஸ்தா கொடுத்திருக்கிறாரா?" என்றார்.

தனது எஜமானுக்குப் பின் ஓடும் நாய்போல, சர்வே ஆபீஸரைத் தொடர்ந்து விரைவாகச் சென்ற ராமராஜுலு, "குடுத்திருக்காக" என்று நிரம்பவும் பய பக்தி விநயத்தோடு கூறினான்.

இங்கு நாம் ஒரு முக்கியமான தகவலைத் தெரிவிப்பது இன்றியமையாத விஷயமா யிருக்கிற தாகையால் அதைக் கூறி விளக்குவோம். முனிஸிபாலிட்டி என்றபெயரால் குறிக்கப்படும் பட்டணங்களில் எவரேனும் புதிதாக வீடோ, பங்களாவோ கட்ட விரும்பினாலும், அல்லது, ஏற்கனவே உள்ள கட்டிடத்தில் முக்கியமான மாறுதல்களைச் செய்ய விரும்பினாலும், அவர் அதற்கு ஒரு பிளான் தயார்செய்து முனிஸிபாலிட்டித் தலைவருக்கு இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். தலைவர் கீழ் அதிகாரிகளைக் கொண்டு அந்த இடத்தைப் பார்வையிடச் செய்து அந்தப் பிளானில் சித்திரிக்கப்பட்டிருப்பது போன்ற கட்டிடத்தை அந்த இடத்தில் கட்டுவதைப்பற்றி எவ்வித ஆட்சேபனையும் இல்லையா என்பதை அவர்கள் மூலம் தெரிந்துகொண்டு, ஷை பிளானை அங்கீகரித்து, ஒரு பிரதியை மனுதாரருக்கு அனுப்புவார்; மற்ற பிரதி முனிஸிபல் கச்சேரியி லிருக்கும்.

எனவே, ஒவ்வொரு முனிஸிபல் பட்டணத்திலும் இருக்கும் வீடுகள், பங்களாக்கள் முதலிய சகலமான கட்டிடங்களுடைய தனித் தனியான பிளான்களும் அந்த ஆபீஸில் கதவிலக்க வரிசைக் கிரமமாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். ஷை பிளான்களில் கட்டிடங்களின் அமைப்பு முழுதும் அப்படியே காட்டப்பட் டிருப்பதோடு, அளவுகளும் குறிக்கப்பட்டிருக்கும்.

சர்வே இலாகாக்காரர்கள் ஒரு ஜில்லாவிலுள்ள நிலங்களை யெல்லாம் அளந்து, ஒவ்வொரு சர்வே நம்பர் உள்ள கழனிக்கும் தனித்தனி பிளான்கள் தயாரிப்பதோடு, அவைகளை யெல்லாம் சேர்த்து கிராம மொத்தத்திற்கும் ஒரு பெரிய பிளான் தயாரிப்பார்கள். அதேபோல, அவர்கள் பட்டணங்களை அளக்கும்போது, அதிலுள்ள ஒவ்வொரு கட்டிடத்திற்கும் தனித்தனி பிளானும், அவைகளையெல்லாம் சேர்த்து முழுப் பட்டணத்திற்கும் மொத்தமான ஒரு பிளானும் தயாரிப்பார்கள்; அவைகள் நீலமான ஒருவிதக் காகிதத்தில் வெள்ளைக் கோடுகளால் அச்சிடப் பெற்றிருக்கும். அவைகளை வைத்துக்கொண்டே மற்றவர் எல்லைகளை நிச்சயிக்க வேண்டும்.

சர்வே இலாகாவில் கீழ் அதிகாரிகள் கட்டிடங்களுக்கு பிளான் தயாரித்தனுப்புவது சரியாயிருக்கின்றதா என்பதை மேலதிகாரிகள் தனிக்கை செய்ய விரும்பினால், முனிஸிபல் ஆபீஸ்களில், கட்டிடத்தின் சொந்தக்காரர்களால் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள பிளான்களை வைத்துக் கொண்டு ஒத்திட்டுப் பார்ப்பார்கள். இரண்டிற்கும் ஏதேனும் வித்தியாசம் இருக்குமானால், அப்படிப்பட்ட கட்டிடங்களைத் தாங்கள் நேரில் பார்த்து, அவசியமானால், ஏதேனும் திருத்தங்கள் செய்வார்கள்.

அந்த முறைமைப்படி, நாம் மேலே குறித்த சர்வே ஆபீஸர் தஞ்சை முனிஸிபாலிட்டி ஆபீஸிலிருந்து சில கட்டிடங்களின் பழைய பிளான்களைப் பெற்று, அவைகளையும், சர்வே அதிகாரிகளுடைய பிளான்களையும் வைத்துக் கொண்டு தனிக்கை செய்யத்தொடங்கினார். அந்தத் தனிக்கையில் சர்வே ஆபீஸர் மிக அமர்த்தலாய் அதிகாரம்



செய்துகொண்டு கம்பீரமாக தூர நின்றாரே யானாலும், சேவக ராமராஜுவே மிக ஊக்கத்தோடு வேலைசெய்து, கட்டிடத்தின் சொந்தக்காரர்களுடன் நிரம்பவும் பக்குவமாகப் பேசி, நயபயங்களை சந்தர்ப்ப மறிந்து உபயோகித்து, கூலி யாட்களிடம் வேலைவாங்கி, தானே போட்டோ யந்திரத்தை உபயோகித்து, ஒவ்வொரு வீட்டின் தனிக்கையையும் மிகத் திறமையாக நடத்திக்கொண்டே சென்றான்.

அவர்கள் வீட்டிற்குள் நுழைந்து பார்ப்பதைப் பற்றியோ, அளப்பதைப் பற்றியோ, கட்டிடத்தின் சொந்தக்காரர்கள், எவ்வளவு மேலான பதவியி லிருப்பவரானாலும், எவ்வளவு கெட்ட போக்கிரிகளானாலும், எவ்வித ஆட்சேபனையும் சொல்லாதபடி சேவக ராமராஜு நிரம்பவும் சாமர்த்தியமாக சாமதான பேத உபாயங்களைக் கையாடி வேலையைக் கடத்திக் கொண்டே சென்றான். ஆனால் சர்வே ஆபீஸர் அடிக்கடி ஏதேனும் ஷராக்கூறி சேகவனை அதட்டிக் கண்டித்தபடி தூரவே கம்பீரமாக இருந்தார்.

அவர்களுடன் கூடவே நம் குமாரசாமி பிள்ளையும் சென்றாரானாலும், சாதாரணக் கட்டிடங்களானால், அவர் வெளியிலேயே நின்றுகொண் டிருந்தார்; பங்களாவானால், அவர் உள்ளேசென்று, அங்கு மோட்டார் வண்டி யிருந்தால் அதன் தோற்றத்தை கவனித்து, அது கோபாலசாமி வர்ணித்தபடி இருக்கிறதா என்று பார்த்ததன்றி கட்டிடத்தின் உட்புற அமைப்பையும், அங்கு காணப்பட்ட மனிதர்களின் வயது, தோற்றம் முதலியவற்றையும் கவனித்தார்.

அவ்வாறு அவர் மற்ற எவருடனும் பேசாமல் மௌனமாயிருந்தபடியே அவர்களைத் தொடர்ந்து சென்று மாருதி

யின் வேலையைச் செய்துகொண்டே போக, கடைசியாய் அவர்கள் ஒரு பங்களாவில் நுழைந்த காலத்தில் உட்புறத்தில் லாயத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு பெரிய மோட்டார் வண்டியைப் பார்த்து குமாரசாமிபிள்ளை திடுக்கிட்டு வியப்போடு அதை உற்று நோக்கினர். ஏனென்றால், கோபாலசாமி விவரித்தபடியே அந்த வண்டியின் தோற்றம் அமைந்திருந்த தென்று அவருடைய மனது உடனே உணர்ந்தது.

ஆகவே, அவர் அந்த பங்களாவின் கதவிலக்கத்தை உடனே கவனித்து, அதை மனதில் நன்றாகப் பதியவைத்துக் கொண்டதன்றி, தாம் அதற்குப் பிறகு தனிமையில் வந்தால் அடையாளம் கண்டுபிடிப்பதற்கு அநுகூலமாக அந்த பங்களாவின் பொதுவான தோற்றத்தையும், ரஸ்தாவிலிருந்து அதைக் கண்டு பிடிப்பதற்குரிய அடையாளங்களையும் கவனித்து மனதில் பதியவைத்துக் கொண்டார்.

அந்த மோட்டாரைப் பார்த்தது விலை மதிப்பற்ற ஒரு பெரிய புதையலைக் கண்டுபிடித்ததுபோ லிருந்ததாகையால் அவருடைய மனதில் அபாரமான ஆவலும் கொந்தளிப்பும் உண்டாயின. புஷ்பாங்கியின் பங்களா உண்மையில் அதுவாக இருந்தால், கோபாலசாமிக்கு அதனால் மகத்தான நன்மை உண்டாகுமென்ற எண்ணத்தினால் அவரது மனம் களிகொண்டு பொங்கியதை விட, தாம் அதைக் கண்டுபிடித்ததைப் பற்றி திகம்பரசாமியார் தம்மை மெச்சிக் கொள்ளும்படியான அதிர்ஷ்டம் தமக்கு வாய்க்குமென்ற நினைவினால் அவருடைய உள்ளம் ஆநந்தத் தாண்டவமாடியது. ஆனாலும், தாம் மோட்டார் வண்டியின் ஒற்றுமையோடு மாத்திரம் அதை முடிவுகட்டக் கூடாதென்றும், இன்னம் உட்புறத்தின் அமைப்பையும், உள்ளே இருந்த



மனிதர்களின் தோற்றத்தையும் பார்த்துத் திருப்தி செய்து கொண்டே, உண்மையில் ஆநந்த மடையவேண்டு மென்றும் கருதி அவர் தமது உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு, மிகுந்த ஆவலோடு மற்றவர்களைத் தொடர்ந்து உள்ளே சென்றார்.

மற்ற கட்டிடங்களிலும், பங்களாக்களிலும், சர்வே ஆபீஸரும், அவருடைய வானர சைநியங்களும் சிறிதும் ஆட்சேபனை இன்றி உள்ளே செல்லவும், அளவுகள் எடுக்கவும் அநுமதி பெற்றதுபோலின்றி, அந்த பங்களாவின் உள்ளே இருந்தவர்கள் அநுமதி கொடுக்க முதலில் மறுத்தனர். ஆயினும் சேவக ராமராஜு அந்த பங்களாவில் இருந்த குடும்பத் தலைவரோடு நேரில் பேசி, நிரம்பவும் மரியாதையாகவும் பணிவாகவும் சம்பாஷித்து தங்கள் சர்வே ஆபீஸர் எந்தக் கட்டிடத்திற்குள்ளும் நுழையலாமென்று துரைத்தனத்தார் அநுமதி கொடுத்திருப்பதாக மிக விநயமாய்க் கூறி, ஓர் உத்தரவைக் காட்டி அக்குடும்பத் தலைவரது அநுமதியைப் பெற்றார்.

அதன் பிறகு சர்வே ஆபீஸர் பங்களாவின் உள்புறத்தில் நுழைந்து, ஓர் இடம் மிச்சம் விடாமல் பார்த்து அளவுகள் எடுத்துக்கொண்டே செல்ல, ராமராஜு படம் பிடிக்கும் கருவியை வைத்து வைத்து ஏதோ வேலை செய்துகொண்டே சென்றான்.

மற்றவர்களோடு அந்த பங்களாவின் உள்புறத்தை அடைந்த குமாரசாமிபிள்ளையின் மனதில் பொங்கிய ஆநந்தமும் ஆச்சரியமும் இவ்வளவென்று நாம் அளவிட்டுச் சொல்வது கூடாத காரியம். அது கோபாலசாமியால் வர்ணிக்கப்பட்டது போலவே இருந்த தாகையால், அந்த

இடத்திற்கே கோபாலசாமி வந்திருக்க வேண்டுமென்ற நிச்சயம் குமாரசாமி பிள்ளைக்கு ஏற்பட்டு விட்டது. அதுவன்றி, அவர்கள் அளந்த காலத்தில், அந்தக் குடும்பத்தின் தலைவர் சற்று தூரத்தில் இருந்தபடியே அவர்களைத் தொடர்ந்து சென்றார். கோபாலசாமியால் விவரிக்கப் பெற்ற புஷ்பாங்கியின் தந்தையினது அடையாளங்கள் இந்த மனிதருடைய தோற்றத்தோடு அப்படியே பொருந்தின. அதுவன்றி, வேறு பலர் ஜன்னல்களுக்கப்பால் நின்று பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒரு ஸ்திரீயின் தோற்றம், கோபாலசாமியால் விவரிக்கப்பெற்ற புஷ்பாங்கியின் தாயினது வடிவமாயிருந்தது. ஆனால் புஷ்பாங்கி எங்கும் காணப்படவில்லை. அந்தக் குடும்பத்தின் தலைவர் அவர்களை உள்ளே விட ஆட்சேபித்ததற்கு தண்டனைபோல, சர்வே ஆபீஸர் மற்ற கட்டிடங்களில் இருந்ததைவிட அங்கு அதிக நேரமிருந்து ஒவ்வோர் அறையிலும், கூடத்திலும், மூலை முடக்குகளிலும் சென்று அளவுகளைத் தனிக்கை செய்துகொண்டே போனாராதலால், புஷ்பாங்கி அப்போது அந்த பங்களாவில் இல்லை என்று குமாரசாமிபிள்ளை தமக்குள் நிச்சயப் படுத்திக்கொண்டார்.

ஆயினும் அங்கு தமக்கு நேரிட்ட எதிர்பாராத மகத்தான அதிர்ஷ்டத்தைப் பற்றி குமாரசாமிபிள்ளை தமக்குள்ளாகவே பொங்கிப்பூரித்து, சீதாதேவியை அசோகவனத்தில் கண்ட மாருதி என்ன நிலைமையை அடைந்தாரோ அதைவிடப் பன்மடங்கு அதிகமான இன்ப நிலைமையை அடைந்தாரென்றே நாம் துணிந்து கூறலாம். கோபாலசாமி அந்த பங்களாவிற்கே கொண்டுவரப் பட்டிருக்க வேண்டுமென்பது அவருக்கு சந்தேகமற நிச்சயமாயிற்று. அந்த பங்களா கந்தசாமியின் மாளிகையிலிருந்து சுமார் ஒன்றரை



மயில் தூரத்திலேயே இருந்ததாகையால், கோபாலசாமியை மோட்டார் வண்டியில் வைத்துக் கொணர்ந்தவர்கள் வேண்டுமென்றே பல வீதிகளில் வண்டியை விடுத்து, தாம் நான்கைந்து மயில் தூரம் போனதாக ஒரு பொய்யான அபிப்பிராயத்தை உண்டாக்கியிருக்கவேண்டும், அல்லது, கோபாலசாமி நேரத்தை கவனித்தது தப்பாக இருக்கவேண்டும் என்று குமாரசாமிபிள்ளை தமக்குள் வியாக்கியானம் செய்துகொண்டார்.

ஆனாலும், அந்தக் குடும்பத்தின் தலைவரைப்பற்றிய வரலாற்றையெல்லாம் நன்றாகத் தெரிந்துகொள்ளவும், புஷ்பாங்கியைப் பார்க்கவும் வேண்டுமென்ற ஆவலாகிய பெரும்தீயினால் உலப்பப்பட்டவராய் குமாரசாமிபிள்ளை இன்பகரமான ஆவேசம் கொண்டு மெய்ம்மறந்து, பித்தர்போல் காணப்பட்டு மற்றவர்களோடு கூடவே சென்றார்.

அந்த பங்களாவின் தனிக்கை முடிய சுமார் ஒரு மணி காலம் பிடித்தது. அந்த அபாரமான சந்தோஷச் செய்தியைத் தாம் கோபாலசாமியிடத்திலும், திகம்பரசாமியார் கண்ணப்பா முதலியோரிடத்திலும் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணத்தினால் பம்பரம்போல் சுழன்றுகொண்டிருந்த மனநிலைமையுடன் குமாரசாமிபிள்ளை கடைசியாக அவர்களுடன் வெளியேறினார்.

சர்வே ஆபீசருடைய மோட்டார் வண்டி அந்த பங்களாவின் தெரு வாசலில் நிறுத்தப் பட்டிருந்தது. அந்தக் கட்டிடத்தனிக்கையோடு அவர்களது அன்றைய வேலை முடிந்து போய் விட்டதாகையால், சர்வே ஆபீஸர், தமது மோட்டார் வண்டியண்டை சென்றவுடன் ராமராஜுவை நோக்கி, "நீங்கள் ஆபீசுக்குப் போங்கள். நான் இன்று

ஆபீஸுக்கு வரமாட்டேன். அவசரமாக நான் கையெழுத்துச் செய்யவேண்டிய காகிதங்கள் இருந்தால், சைகில் பியூன்மூலம் என் ஜாகைக்கு அனுப்பும்படி குமாஸ்தாவிடம் சொல்" என்று கூறியபடி மோட்டார் வண்டியில் ஏறிக்கொள்ள, உடனே வண்டி புறப்பட்டுச் சென்று சிறிது காலத்தில் மறைந்து போய்விட்டது.

கூலியாட்களுடன் கூடவே வந்த குமாரசாமி பிள்ளையை சர்வே ஆபீஸர் சிறிதும் கவனிக்காதது, அவர் குமாரசாமிபிள்ளை தம்மோடு வந்தா ரென்பதை மறந்து விட்டார் என்றே எவரும் கருதும்படி யிருந்தது. ஆனால் தமக்கு ஏற்பட்ட அபாரவெற்றியில் குமாரசாமி பிள்ளையும் சர்வே ஆபீஸரை அவ்வளவாகப் பொருட்படுத்தியதாகத் தோன்றவில்லை.

மோட்டார் வண்டி தெருவுக் கோடியில் சென்று ஒரு பக்கத்தில் திரும்பி மறைந்து போனவுடன், சேவக ராமராஜு கூலியாள்களைப் பார்த்து, "டேய், ஆறுங்களா, நீங்க போயி, அந்த மரத்தடிலே இருங்க; நானு இந்த ஐயாவோடெ கொஞ்சூண்டு பேசி இவுகளை அனுப்பிச்சுட்டு வர்றேன்" என்று கூறி, சுமார் கால் பர்லாங்கிற்கு அப்பால் இருந்த ஓர் ஆல விருக்ஷத்தைச் சுட்டிக்காட்ட, அவர்கள் அப்படியே அங்கு சென்றுவிட்டனர்.

உடனே சேவக ராமராஜு, குமாரசாமி பிள்ளையின் பக்கம் திரும்பி, " என்ன எசமானே, சர்வே கத்துக் கிட்டீங்களா? நீங்க இப்ப ஊருக்குப் போறீங்களா, இல்லாமெப் போனா இந்தூருலெயே தங்கப் போறீங்களா? நாங்க கடியா ஆபீசுக்குப் போவணுங்க. நீங்க பெரிய மனிசரு இருக்கிறீங்களேன்னு அந்த சர்வே ஆபீஸரு லச்சியம் பண்ணாமெப் போயிட்டாரு பாத்தீங்களா? இருந்தாலும், அவுருக்கு ரொம்ப கருவமுங்க. சம்பளம் மாஷம் ஐந்நூறு, படி நூத்தம்பது. அம்பிட்டுப் பணத்தைக் கண்டா, மனிசருக்கு தலை காலு தெரியப்போவுதுங்களா! நீங்க நிக்கிறீங்க; கண்ணு மண்ணு தெரியாமெ அவுருபாட்டுலே வுட்டாரு சவாரி" என்றான்.



உடனே குமாரசாமி பிள்ளை அவனிடம் நிரம்பவும் பிரியமாகப் பேசத் தொடங்கி, "பெரிய சம்பளக்காரர்கள் இப்படித்தான் அமர்த்தலாக நடந்து கொள்ளுவார்கள். அவர்கள் எப்படி இருந்தால் நமக்கென்ன; அவர் என்னை கவனிக்காததைப் பற்றி எனக்குக் கொஞ்சமும் வருத்தமில்லை. நீ என்னை இவ்வளவு கௌரதையாக நடத்தினையே; அது ஒன்றே ஒரு லக்ஷம் பெறும். நீ, நிரம்பவும் கீழான பதவியான சேவகன் உத்தியோகம் பார்த்தாலும் உன்னுடைய குணத் தழகிற்கு உனக்கு எவ்வளவு சன்மானம் செய்தாலும் அது தகுமென்றே நான் நினைக்கிறேன். நீ என்னிடம் இவ்வளவு அந்தரங்கமான விசுவாசத்தோடு நடந்து கொள்ளுகையில் உன்னிடம் நான் கபடமாய் நடந்து கொள்வது சரியல்ல; நான் உண்மையில் சர்வே கற்றுக் கொள்ளும் எண்ணத்துடன் உங்களோடு வரவில்லை. ஒரு முக்கியமான காரணத்தைக் கருதி, நான் இந்த பங்களாவிற்குள் போய், இதன் உள் அமைப்பையும், இதற்குள் இருக்கும் மனிதர்களுடைய தோற்றத்தையும் பார்க்கவே நான் வந்தேன். உன் உதவியைக் கொண்டு, நான் இந்த பங்களாவைத்தேடிப் பிடிக்க எண்ணியிருந்தேன். தெய்வச் செயலாக நீங்களே இதைத் தனிக்கை செய்தீர்கள். இது கடவுளின் திருவருட் பயனென்றே கருதுகிறேன். என் வேலை மிக சுலபத்தில் முடிந்தது. எனக்கு இவ்வளவு பெரிய

உதவியைச் செய்த நீ இன்னோர் உதவிசெய்ய மறக்க மாட்டயென்று நினைக்கிறேன். அந்த உதவிக்கு உனக்கு இன்னம் 25 ரூபாய் சன்மானம் வழங்க உத்தேசிக்கிறேன்" என்றார்.

அதைக் கேட்ட சேவகன் பெரிய புதையலைக் கண்ட பரமதரித்திரன் எவ்விதமாகத் தன் சந்தோஷத்தை வெளிப்படுத்துவானோ அவ்விதமான தோற்றத்தோடு அவரைப் பார்த்து, "நானு எளியவனுங்க, எனக்கு எசமான் இம்பிட்டுப் பணம் குடுக்கறப்ப, நானும் ஒங்க இஷ்டபடி நடந்துக்கத்தான் வேணுங்க. எசமானுக்கு என்ன ஆவனும் சொல்லுங்க" என்றான்.

குமாரசாமி பிள்ளை, "வேறொன்றுமில்லை; இந்த பங்களாவின் விவரமான படம் உன்னிடத்திலிருக்கிறதே; அதை நீ என்னிடம் இரண்டொரு தினங்களுக்குக் கொடுக்க வேண்டும். அதை நான் சிலரிடம் காட்டிவிட்டுத் திரும்பவும் உன்னிடம் கொணர்ந்து கொடுத்து விடுகிறேன்" என்றார்.

சேவகன் தன்னிடத்திலிருந்த அந்த பங்களாவின் ஆதி பிளானைக் காட்டி, "இதையா கேக்கறீங்க? இது முனுவிபாலிட்டி ஆபீஸுலே எரவல் வாங்கினதுங்க. இதைத் தவிர நானு பங்களாவுலே இருந்த மனிசரையெல்லாம் படம் புடிச்சிருக்கறேனுங்க. அதையெல்லாம் பாருங்க" என்று கூறியபடி வேறு ஐந்தாறு காகிதங்களைக் காட்டினான். அவைகளைப் பார்த்த குமாரசாமிபிள்ளை முற்றிலும் பிரமித்துப் போனார். ஏனென்றால், ஷை படங்களில் அந்த பங்களாவின் உள்பக்கத்திலிருந்த ஒவ்வொரு பாகமும் அங்கங்கு இருந்த படங்கள், மேஜை நாற்காலிகள் முதலிய எல்லா வஸ்துக்களும் அப்படியே இருந்தன. அந்தக் குடும்



பத்தின் தலைவர், ஜன்னல்களின் வழியாக எட்டிப்பார்த்த மற்ற ஜனங்கள் ஆகியோருடைய வடிவங்களும் அவ்வவ்விடங்களில் காணப்பட்டன. முன் பக்கத்தில் இருந்த தோட்டம், மோட்டார் வண்டி முதலியன இன்னொரு படத்திலிருந்தன. அவைகளைப் பார்த்த குமாரசாமி பிள்ளை அப்படியே பிரமித்துப்போய் மூக்கின்மேல் விரலை வைத்து, "இவைகளையெல்லாம் நீயல்லவா எடுத்திருக்கிறாய்? இந்த ஒரு பங்களாவில்தான் இப்படிப் படம் பிடித்தாயா? மற்ற பங்களாக்களிலும் படம் பிடித்தாயா?" என்றார்.

சேவக ராமராஜு:—நாங்க எந்தக் கட்டடத்தைத் தனிக்கை பண்ணாலும் உள்ளுப் பக்கத்தையெல்லாம் படம் புடிக்கணுங்க. அப்ப அங்கிட்டு இருக்கற மனிசரும் அம்பிட்டுக்குவாங்க. மன்னொருகுடிலே ஒங்க வங்களாவைப் பாக்கறீங்களா?—என்று கூறி வேறு சில படங்களை எடுத்து அவரிடம் கொடுத்தான்.

குமாரசாமி பிள்ளை அவைகளை வாங்கிப் பார்த்தார். தம் பங்களாவின் உள்பாகங்களெல்லாம் காணப்பட்டதோடு, தமது வடிவமும், கண்ணப்பாவின் வடிவமும், வேலைக்காரர், வேலைக்காரிகளுடைய வடிவங்களும், ஓர் அறையில் கதவின் மறைவில் நின்று எட்டிப்பார்த்த திகம்பர சாமியாருடைய மனையாளான சிவகாமியம்மாளுடைய முகத்தின் ஒரு பாகமும் ஷை படங்களில் காணப்பட்டன; குமாரசாமி பிள்ளை தமது வியப்பை அடக்க மாட்டாமல், "இப்படி நீங்கள் எல்லோருடைய படங்களையும் பிடித்துக்கொண்டு போகிறீர்களே! இவைகளை வைத்துக்கொண்டு எப்படியாவது உபயோகப் படுத்த போகிறீர்களா?" என்றார்.

சேவக ராமராஜு:—நாங்க சரியாத் தனிக்கை பண்ணினத்துக்கு இதுங்க சாக்கியாகுதல்ல. சர்வே ஆபீஸரு

இதுங்களை வச்சுக்கிட்டு கீள் அதிகாரிங்களை மொரட்டுவாரு; அவுங்க பயந்து நூறு அம்பது லஞ்சம் குடுப்பாங்க. அதுக்காவத்தான் இதுங்களைப் புடிக்கறது.

குமாரசாமிபிள்ளை:—ஓ, அப்படியா சங்கதி! நீங்கள் செய்த வேலை எனக்கு நல்ல சமயத்திற்கு உபயோகப்படுகிறது. இந்த பங்களாவின் முனிவிபல் படத்தையும், நீங்கள் பிடித்த உள்பக்கத்துப் படங்களையும், எனக்கு இரண்டு தினங்களுக்கு இரவல் கொடு; நான் ஜாக்கிரதையாக இவைகளைக் கொணர்ந்து உன்னிடம் கொடுக்கிறேன். உன் வீடு எங்கே என்பதையும் சொல். நான் எவருக்கும் தெரியாதபடி அங்கேயே கொண்டுவந்து கொடுக்கிறேன்—என்று கூறியபடி தமது சட்டைப் பையிலிருந்த மணிபர்ஸை எடுத்து, இருபத்தைந்து ரூபாய் பெறுமானமுள்ள நோட்டுகளை எடுத்து அவனிடம் நீட்ட, அவன் நிரம்பவும் ஆசையோடும், சந்தோஷ முக மலர்ச்சியோடும், அவைகளை வாங்கித் தன் சட்டைப் பைக்குள் சொருகிக் கொண்டு, அந்த பங்களாவிற்கு சம்பந்தமான படங்களையெல்லாம் எடுத்து, ஒரு காகிதத்தில் சுற்றி அவரிடம் கொடுத்தபடி, "முனுவலிபாலிட்டி பிளான் முக்கியமானதுங்க. மத்தத்தைப் பத்தி அக்கரை யில்லீங்க. நீங்க ரெண்டுநாளோ நாலுநாளோ வச்சிருந்து, ஆருக்கும் தெரியாமெ ராவுலே எங்கூட்டுலெ கொண்டாந்து குடுத்துடுங்க. எங்கூடு ராணிவாய்க்கா சந்துலே அஞ்சாயிரத்தி மூணு நம்பர் வூடுங்க. எம்பேரு ராமராசுங்க; கவனத்துலே வச்சுக்குங்க" என்றான்.

குமாரசாமி பிள்ளை ஆவலோடு படங்களை வாங்கி வைத்துக்கொண்டு, ஒரு காகிதத்தில் அவனுடைய விலாசத்தைக் குறித்துக் கொண்டபின், "ராமராஜு, நீ இவ்வளவு தூரம் எனக்கு உதவி செய்தாய்; இன்னும் ஒரு சிறிய



ஒத்தாசையையும் செய்யவேண்டும்" என்று நயமாக வேண்டிக்கொண்டார்.

சேவக ராமராஜு:—சொல்லுங்க, எசமானே. நம்ப ரெண்டு பேரு மனசும் ஒத்துப் போச்சுதுங்க. ஒங்களுக்கு என்ன ஆவனுமானாலும் நானு முடிச்சுத் தாறேனுங்க.

குமாரசாமிபிள்ளை:—வேறொன்றுமில்லை. இந்த பங்களாவில் இருப்பவரே இதன் சொந்தக்காரரா, இவருடைய பெயரென்ன, இவருடைய நிலைமை என்ன என்னும் தகவல்கள் தெரியவேண்டும். உங்கள் கணக்குகளில் அந்த விவரமெல்லாம் இருந்தால், அறிந்து சொல்லலாமா?

சேவக ராமராஜு:—இதெல்லாம் எங்க ஆபீசுலெ இருக்குமோ இருக்காதோ! இப்பவே போயி, சர்வே எசமான் கேக்கறாருன்னு கேட்டுக்கிட்டு வாறேனுங்க. இப்பிடியே கொஞ்சுண்டு இரிங்க—என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு விரைவாக அந்த பங்களாவிற்குள் சென்று, சுமார் கால்நாழிகை காலத்திற்குப் பிறகு திரும்பி வந்து, "இவுரு சொந்தக்காரரு இல்லீங்களாம்; இந்த வங்களா போலவாநத்தம் சமீந்தாரோடெ வங்களாவாம். இவுரு பேரு துபாசி காத்துராய பிள்ளையாம்; இவுரு அக்கரைச்சீமைலெ கிள்ளான்னு ஒரு ஊரு இருக்குதுங்களாம். அங்கிட்டு இவுருக்கு அஞ்சு லச்சத்துக்கு சொத்து இருக்குதாம். இங்கனயே ஊருலெ நெலம் பலமெல்லாம் வாங்கிக்கிட்டு இருந்துடப்போறாராம். இவுரு இந்த வங்களாவை எடுத்து ஆறுமாஷகாலம் ஆவுதுங்களாம்—என்றான்.

அதைக் கேட்ட குமாரசாமிபிள்ளை, மிக முரட்டு மனிதராகத் தோன்றிய அந்தக் குடும்பத் தலைவரிடம் அந்த சேவகன் அவ்வளவு தூரம் செய்தியைத் தெரிந்துகொண்டு

வந்ததைப் பற்றி யிருந்த சந்தோஷமும், நன்றியறித லுணர்ச்சியும் கொண்டு, "சரி; நீ செய்த உதவிக்கு நான் உனக்கு எதைத்தான் சன்மானம் வழங்கப்போகிறேன். உனக்கு குறைந்தது 100 ரூபாயாவது கொடுக்கவேண்டுமென்று என் மனம் ஆசைப்படுகிறது. நான் வந்தபோது, அதிகமாய்ப் பணம் கொண்டுவரவில்லை. இருக்கட்டும். அதைப்பற்றி அக்கரையில்லை. நான் படங்களுடன் உன் ஜாகைக்கு வரும்போது, பாக்கித் தொகையையும் கொண்டு வந்து உன்னிடம் சேர்க்கிறேன்" என்றார்.

அதைக் கேட்ட ராமராஜுவின் முகம் அபாரமான சந்தோஷத்தினாலும், நன்றியறித லுணர்ச்சியினாலும் மலர்ந்து ஜ்வலித்தது. அவன் நிரம்பவும் பணிவாகக் குனிந்து குமாரசாமிபிள்ளைக்கு ஒரு கும்பிடு போட்டு அவரிடம் செலவு பெற்றுக்கொண்டு அவரை விட்டுப் பிரிந்துபோய், ஆலமரத்தடியில் காத்துக்கொண்டிருந்த கூலியாள்களை அழைத்துக்கொண்டு தெருவோடு போய்விட்டான்.

உடனே குமாரசாமிபிள்ளை மாஜிஸ்டிரேட்டினிடம் அனுமதி பெற்று, கோபாலசாமிபிள்ளையைப் பார்க்கவேண்டுமென்ற கருத்துடன், வக்கீல் கோதண்டமையங்காருடைய மாளிகையை நோக்கி விரைவாய்ச் செல்லலானார்.

அங்கு நிலைமை அப்படி இருக்க, திகம்பரசாமியாரது மாளிகையில் தனிமையில் விடப்பட்ட கண்ணப்பா, அவ்விடத்திலேயே சுமார் அரைமணி காலம் வரையில் இருந்து குமாரசாமிபிள்ளையின் வருகையை எதிர்பார்த்தார். அவர் வரவில்லையாதலால், ஏதோ முக்கியமான கருத்தோடு அவர் எங்கேயோ போயிருக்க வேண்டுமென்று அனுமானித்துக் கொண்டு, தாம் மறுபடி வரலாமென்ற எண்ணத்துடன் அவ்விடத்தை விட்டுத் தமது மாளிகைக்குப் போய்ச்சேர்ந்தார்.



அவர் சென்னையில் செய்த முயற்சியும் பலியாமல் போனதைக் கேட்டு அவருடைய தாய் தந்தையர், கோபாலசாமியின் பெற்றோர், இன்னம் மற்றவர்கள் ஆகிய எல்லோரும் முன்னிலும் பன்மடங்கு அதிகமான துயரத்தில் ஆழ்ந்து, ஒருவரோடொருவர் பேச அறியாமல் ஏக்கங்கொண்டு அப்படி யப்படியே உட்கார்ந்து போயினர்.

திகம்பரசாமியார் எங்கே போயிருக்கிறாரோ, எப்போது வருவாரோ, அவர் தக்க முயற்சி செய்யாவிடில் கோபாலசாமி தப்புவது அரிது என்று கண்ணப்பாவும் மற்றவர்களும் நினைத்து அபாரமான சஞ்சலத்தி லாழ்ந்திருக்க, அந்த தினம் நிரம்பவும் துன்பகரமாகக் கழிந்தது.

மறுநாள் காலையில் கண்ணப்பாவுக்கு தபால் மூலமாகச் சில கடிதங்கள் வந்தன. அவை எங்கிருந்து வந்திருக்குமோவென்ற ஆவலும் மனவெழுச்சியும் கொண்டு, அவற்றுள் பெரிய உறை யுடையதாயும், ரிஜிஸ்டர் செய்யப்பெற்று மிருந்த ஒரு கடிதத்தை எடுத்துப் பிரித்து உள்ளே இருந்த ஒரு காகிதக் கற்றையை வெளியில் எடுத்தார்.

எடுக்கவே, அதில் ஒரு புகைப்படமும், மூன்று கடிதங்களும் இருந்தன. அவைகளைக் காண, கண்ணப்பா பெரிதும் வியப்பும் பிரமிப்பும் அடைந்து, தமது கண்களை நம்பாமல், எதை முதலில் பார்ப்பது என்பதை யறியாமல் குழம்பிய மனத்துடன் ஒரு நிமிஷ காலம் ஸ்தம்பித்திருந்தபின் படத்தை எடுத்துப் பார்த்தார். அது அற்புதமான அழகும், அலங்காரமும், வசீகரமான ஜ்வலிப்பும் அமையப்பெற்ற ஒரு யௌவன மடந்தையின் புகைப்படமா யிருக்கவே, அதைப் பார்க்க, கண்ணப்பாவின் சர்வாங்கமும் கூசி திடுக்கிட்டு நடுங்கியது. அதன் அடியில் புஷ்பாங்கி என்னும்

பெயர் இருந்ததைக் காணவே, அவளே கந்தசாமிக்கு விவாக விஷயமாய்க் கடிதம் எழுதியவள் என்றும், அவளுடைய பங்களாவிலிருந்து கண்களைக் கட்டிக்கொண்டு வந்தபோதுதான் கோபாலசாமி ஜட்ஜ் துரையின் பங்களாவில் வஞ்சகமாய் விடப்பட்டாரென்றும் உடனே கண்ணப்பா யூகித்துக்கொண்டார். அந்தப் படம் தமக்கு எங்கிருந்து வந்திருக்குமென்ற நினைவோடு, அவர் கடிதங்களைப் புரட்டிப் பார்த்ததில், தேனாம்பேட்டை திருநடனவைபவம் பிள்ளையால் எழுதப்பட்டிருந்த ஒரு கடிதம் அவருடைய திருஷ்டியில் படவே, விபரீதமான ஒருவித அவமான உணர்ச்சி சரேலென்று அவருடைய உடம்பில் பாவி, அவருடைய மனதில், மிகுந்த வேதனையையும், கலவரத்தையும் உண்டாக்கியது. அவர் அரும்பாடுபட்டு அந்தக் கடிதத்தைப் படிக்கலானார். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

சென்னை, தேனாம்பேட்டை
193—௵—மீ—௨

பிரிய நண்பரான மகா-ள-ள-ஸ்ரீ கண்ணப்பா பிள்ளையவர்களுக்கு. அநேக நமஸ்காரங்கள்.

உபயக்ஷேமம்

விவாக முகூர்த்தத்தை சிறிது காலத்திற்கு நிறுத்தி வைக்கும்படி திருவாளர் கந்தசாமி பிள்ளை உங்களுக்குத் தந்தி யனுப்பியதாக, நீங்கள் சில தினங்களுக்கு முன்னர் எனக்கு அனுப்பிய கடிதம் வந்துசேர்ந்தது.

அவ்வாறு அவர்கள் முகூர்த்தத்தை ஒத்திவைக்க விரும்பியதன் முகாந்தரம் என்னவாக இருக்கலாமென்று நாங்கள் எங்களால் ஆனவரையில் யூகித்துப் பார்த்தோ



மானாலும், எங்கள் முயற்சி பயனற்றதாய் முடிந்தது. ஆனால் அதன் பிறகு, நாங்கள் கனவிலும் எதிர்பார்க்காத சில சம்பவங்கள் நிகழ்ந்து எங்களை திடுக்கிடச் செய்துவிட்டன.

தஞ்சை ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர் சந்திரசேகர் சுடப்பட்டது, திருவாளர் கோபாலசாமிபிள்ளை கைதியாக்கப்பட்டது ஆகிய நிகழ்ச்சிகள் சம்பந்தமான தகவல்கள் சில சென்னை துரைத்தனத்தாருக்கு வந்தன. அவைகளை நான் படித்து நடுநடுங்கிப்போனேன். ஆனால், திருவாளர் கோபாலசாமிபிள்ளை குற்றவாளியா யிருக்கமாட்டார் என்ற திடமான நம்பிக்கை எங்கள் மனதில் இருந்து வருகிறது. இவ்விஷயத்தில் நமக்குக் கடவுள் துணை இருப்பாரென்றே நம்புகிறோம்.

அதுவன்றி, என் பங்களாவிற்கு வந்த ஒரு படத்தையும், இரண்டு கடிதங்களையும் இதோடு வைத்து உங்கள் பார்வைக்கு நான் அனுப்பியிருக்கிறேன். இவைகளை நாங்கள் நிகம்பரசாமியார் அவர்களுக்கு அனுப்பலாமென்று முதலில் கருதினோம். ஒரு கால் அவர்கள் ஊரில் இல்லாமல் எங்கேயாகிலும் போயிருக்கலாமாதலாலும், இவ்விஷயங்கள் உங்களுக்கும் தெரிவ தவசியமாதலாலும் நான் இவைகளை உங்களுக்கே அனுப்பிக்கொண் டிருக்கிறேன். ‘கந்தசாமி’ என்று கையெழுத்திட்டு புஷ்பாங்கிக்கு வரையப்பட்டிருக்கும் கடிதத்தின் எழுத்து உண்மையில் திரு. கோபாலசாமி பிள்ளையினுடையதா, அல்லது, திரு. கந்தசாமிபிள்ளையினுடையதா என்பதை நீங்கள் சுலபத்தில் கண்டுபிடிப்பீர்களென்று நினைக்கிறேன். இது திரு. கோபாலசாமிபிள்ளையின் எழுத்தா யிருக்குமானால், இது

அவருடைய வாக்குமூலத்தை மெய்ப்பிக்க உபயோகப் படலாமென்று நான் கருதுகிறேன்.

நாரதருக்கு அண்ணனுக்குத் தம்பி என்று கையெழுத்துச் செய்யப்பெற்ற இன்னொரு கடிதம் நேற்று பிற்பகலில் என்னுடைய பங்களாவிற்கு வந்து சேர்ந்தது. இந்த மனிதர் எழுதியிருக்கும் தோரணையிலிருந்து, இவரே படத்தையும் இன்னொரு கடிதத்தையும் சில தினங்களுக்கு முன்னர் அனுப்பியவர் என்பது தெரிகிறது. நேற்று மாலையில் நாங்கள் பயாஸ்கோப்பிற்குச் சென்றிருந்தோம். நாற்காலிகளிருந்த வரிசையின் நடுவில் திரு. கந்தசாமிபிள்ளை உட்கார்ந்திருந்தார். பின் வரிசையில், அவருக்குப் பின்னால் ஒரு நாற்காலியில் இந்தப் புஷ்பாங்கி உட்கார்ந்துகொண்டு முகத்தை அவருக்கருகில் கொணர்ந்து வைத்து, அவருடன் ஏதோ பேசுகிறவள் போல் காணப்பட்டாள். அவர் உண்மையில் திரு. கந்தசாமி பிள்ளைதானா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் எனக்குண்டாயிற்று. ஆகையால் இடைவேளையில் நான் எழுந்துபோய் என் மோட்டார் ஓட்டியை ஏவினேன். அவன் போய் தந்திரமாக விசாரித்து, திரு. கந்தசாமிபிள்ளையே அங்கே வந்திருந்தவர் என்று நிச்சயப்படுத்திக் கொண்டுவந்து என்னிடம் சொன்னான். நாங்கள் அவ்வளவோடு திருப்தியடைந்து எழுந்து வந்துவிட்டோம்.

இவ்விஷயங்களை உங்களுக்குத் தெரிவிப்பது என் கடமை என்று நான் கருதி, இரண்டு கடிதங்களையும் படத்தையும் இதில் வைத்து அனுப்பிக்கொண்டிருக்கிறேன்.



தஞ்சையில் ஜில்லா ஜட்ஜ் சுடப்பட்டது சம்பந்தமாய் திரு. கோபாலசாமிபிள்ளை கைதியாக்கப் பட்டிருப்பது, சென்னையில் புஷ்பாங்கியும் உங்கள் தம்பியாரும் ஒன்றாக பயாஸ்கோப் பார்க்க வந்தது ஆகிய இரண்டு சம்பவங்களில் அடங்கிய உண்மையான தகவல்களைத் தெரிந்துகொள்ள மாட்டாமல் நாங்கள் பெரிதும் குழப்பமும் வேதனையும் அடைந்து கவலையிலாழ்ந்திருக்கிறோம்.

இந்த சமயத்தில் திகம்பரசுவாமிகளாலன்றி மற்ற எவராலும் இந்தக் குளறுபடியைத் தெளிவுபடுத்த இயலாதென்பது எங்களுடைய அபிப்பிராயமாதலால், நீங்கள் இவைகளை அவர்களிடம் சேர்ப்பித்து, ஆகவேண்டிய முயற்சிகளைச் செய்யும்படி கேட்டுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

இவற்றின் உண்மையை அறிந்தவுடன் எனக்கு நீங்கள் தயைசெய்து அதைக் தெரிவித்தால், எங்களுக்கு மன அமைதி ஏற்படும்.

இங்ஙனம் உங்கள் விதேயன்
திருநடன வைபவம் பிள்ளை

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த கண்ணப்பா அதோடு வந்திருந்த மற்ற இரண்டு கடிதங்களையும் படித்துப் பார்த்தார். பார்க்கவே அவருடைய ஆச்சரியம் அளவிட இயலாததாய்ப் பெருகியது. 'கந்தசாமி' என்று கையெழுத்திட்டு புஷ்பாங்கிக்கு எழுதப்பட்டிருந்த கடிதத்தின் எழுத்து உண்மையில் கந்தசாமியினுடையதல்லவென்பதும், அது கோபாலசாமியால் எழுதப்பட்டதென்பதும் அவருக்கு முதல் பார்வையிலேயே தெரிந்துபோயின. அவ்விருவருடைய எழுத்துகளும் கண்ணப்பாவுக்கு நன்றாகத்

தெரியுமாதலால், அவர் உடனே அந்த வேற்றுமையை உணர்ந்துகொண்டார். ஆனாலும் விஷயம் நிரம்பவும் சிக்கலா யிருந்தமையால் அவரால் எவ்வித யூகமும் செய்ய இயலவில்லை. அவைகளைத் தமது பெற்றோருக்குக் காட்டவேண்டுமென்ற எண்ணம் உடனே எழுந்ததானாலும், கந்தசாமி புஷ்பாங்கியுடன் சென்னையில் பயாஸ்கோப் வேடிக்கை பார்த்தாரென்னும் விஷயம் அவர்களுடைய மனதைப் பெரிதும் புண்படுத்துமாதலால், தாம் அவைகளை முதலில் திகம்பரசாமியாருக்குக் காண்பித்து, அவருடைய யோசனையைக் கேட்டு, அதன் பிறகு அப்படிச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. ஆகையால் அவர் சரேலென்று படத்தையும், மூன்று காகிதங்களையும் எடுத்து மறுபடி உறைக்குள் புகுத்தி ஒரு பக்கமாக வைத்துக்கொண்டார். அந்த கடிதத்தோடு வந்திருந்த இதர கடிதங்களையெல்லாம் அவர் மிக அவசரமாகப் படித்து முடித்து அவைகளை மேஜையின்மேல் வைத்துவிட்டு, தமது மோட்டார் வண்டியில் ஏறி திகம்பரசாமியாருடைய பங்களாவிற்கு வந்து சேர்ந்தார்.

அதே காலத்தில் குமாரசாமி பிள்ளை பங்களாவிற்குள் வந்து நுழைந்தார். கண்ணப்பாவின் முகம் முற்றிலும் வாட்டமடைந்திருந்ததற்கு மாறாக, குமாரசாமி பிள்ளையின் முகம் அபாரமான சந்தோஷப் பூரிப்பினால் மலர்ந்து தோன்றியது. அப்போது குமாரசாமி பிள்ளை, "மன்னிக்க வேண்டும்; ஐந்து நிமிஷத்தில் வருவதாகவும், இங்கேயே இருக்கும்படியும் உங்களிடம் சொல்லிவிட்டுப் போன நான் அப்படியே அந்த சர்வே ஆபீஸருடன் மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு தஞ்சாவூருக்குப் போக நேர்ந்து விட்டது. எனக்காக நீங்கள் எவ்வளவு நேரம் காத்திருந்தீர்களோ என்னவோ தெரியவில்லை. மன்னிக்க வேண்டும்" என்றார்.



அதைக் கேட்ட கண்ணப்பா பெருந்தன்மையாகப் புன்னகை செய்து, "ஏதோ அவசர காரியத்தை உத்தேசித்தே நீங்கள் போயிருப்பீர்கள் என்பது நிச்சயம். ஆகையால் அதைப்பற்றி நீங்கள் எனக்கு உபசார வார்த்தை கூடச் சொல்லவேண்டுமோ. நான் கொஞ்ச நேரம் இருந்து பார்த்துவிட்டு வீட்டுக்குப் போய்விட்டேன். ஆனால் நீங்கள் அப்போது போனவர்கள் இப்போதுதான் திரும்பி வருகிறீர்களா? நீங்கள் பிரஸ்தாபித்தபடியே அந்த ஆபீஸரிடம் கூலியாளாய் அமர்ந்தீர்களா?" என்றார்.

குமாரசாமி பிள்ளை, "இப்போதுதான் வருகிறேன்; ஆனால் கூலியாளாய் அமரவில்லை, ஸ்வாமிகள் வந்துவிட்டார்களோ?" என்று ஆவலோடு வினவினார்.

அவ்வாறு அவர்கள் இருவரும் பங்களாவின் தாழ்வாரத்தில் இருந்தபடி சம்பாஷித்தனராதலால் அப்போது உள்ளே இருந்த திகம்பர சாமியார், "என்ன, குமாரசாமீ, உன்னோடு பேசுகிறது கண்ணப்பாவா?" என்றார்.

அந்தக் குரலைக் கேட்கவே, இருவரும் வாயைத் திறவாமல் கப்பென்று ஓய்ந்துபோய அடக்க வொடுக்கமாக உள்ளே போய் திகம்பரசாமியாருக்கெதிரில் ஒரு பக்கமாக நின்றனர். மீனாட்சிசுந்தரம் பிள்ளையாகிய காஷாயத்துறவி அப்போது அடுத்த அறையில் தமது இயற்கைப்படி ஏதோ ஒரு வேதாந்த புஸ்தகத்தை வைத்துப் படித்துக்கொண்டிருந்தார். அவர் திகம்பர சாமியாரிடம் நிரம்பவும் பயபக்தி அடக்க வொடுக்கமாக நடக்கிறவராதலால், சாமியார் அழைத்தாலன்றி, அவர் அருகில் வருகிறதே இல்லை; அவர் எப்போதும் அடுத்த அறையிலேயே இருப்பார்.

ஆனால் அவ்விடத்தில் சாமியாரும் பிறரும் சம்பாஷிப்பதெல்லாம் அவருடைய செவிகளில் பட்டுக்கொண்டே

இருக்கும். அவ்வாறு சம்பாஷணை நடக்கும்போது, சாமியார் மீனாட்சிசுந்தரம் பிள்ளையை நோக்கி ஏதேனும் கேள்வி கேட்பாரானால், பின்னவர் அதற்குக் கொடுக்கும் மறுமொழியிலிருந்து, அவர் பக்கத்து அறையில் ஏதோ புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாலும், அந்த சம்பாஷணை முழுதையும் நிரம்பவும் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருக்கிறார் என்பது சந்தேகமற எவருக்கும் சுலபத்தில் தெரியும். அதே நிலைமையில் அந்தத் துறவி இந்த சந்தர்ப்பத்திலும் உட்கார்ந்திருந்தார்.

குமாரசாமி பிள்ளையும் கண்ணப்பாவும் உள்ளே வந்தவுடன் திகம்பரசாமியார், "என்ன பெரியதம்பீ, நீ எப்போது பட்டணத்திலிருந்து வந்தாய்? அங்கே நீங்கள் செய்த முயற்சி பிளாங்கிதானே?" என்றார்.

கண்ணப்பா, "நான் நேற்று காலையில் வந்தேன்; இங்கே வந்துவிட்டுத்தான் வீட்டுக்குப் போனேன். ஜாமீன் மனுவை அங்கேயும் தள்ளிவிட்டார்கள்" என்றார்.

திகம்பரசாமியார் விசனமான குரலில் பேசத்தொடங்கி, "அங்கேயும் காரியம் அப்படித்தான் நடக்குமென்று நான் குமாரசாமியிடம் சொல்லிக் கொண்டேதான் இருந்தேன். இதில் சுடப்பட்டவர் பெரிய ஜில்லா ஜட்ஜ் பதவியை வகிப்பவரல்லவா. அவருடைய விஷயத்தில் பெரிய ஜட்ஜுகளுக்கு அநுதாபம் ஏற்படுவது சகஜந்தானே. அதனால் இவர் டிஸ்டிரிக்ட் முன்ஸீப் என்பது அவர்களுக்கு ஒரு பொருட்டாய்ப் பட்டிராது" என்றார்.

கண்ணப்பா:—ஹைகோர்ட் ஜட்ஜ் அதேமாதிரி சொல்லித்தான் மனுவைத் தள்ளினார்.

திகம்பர சாமியார்:—சுடப்பட்டவர் வேறு சாதாரண மனிதரா யிருந்தால், அவர்களுக்கு தங்கள் டிஸ்டிரிக்ட்



முன்ஸீப்பினிடம் நிரம்பவும் அநுதாபம் ஏற்பட்டிருக்கும். அப்போது அவர்கள் கட்டாயம் சலுகை காட்டியே இருப்பார்கள்; ஜாமீனிலும் அவரை விட்டிருப்பார்கள். ஆளுக்காள் வித்தியாசம் உண்டல்லவா. நீதி செலுத்துவதில், மனிதருடைய நிலைமைக்குத் தகுந்தபடி சட்டத்தை வியாக்யானம் செய்யவும், அதை உபயோகிக்கவும் நீதிபதிகளுக்கு ஏராளமாக சட்டங்களில் இடைவெளி யிருக்கிறது. அப்படியேதான் நீதி நிர்வாகம் நடைபெறுகிறது. அதனால் நிரபராதியான கைதிகள் கிடந்து தவிக்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள். அப்படியானால் இந்த ஜில்லா ஜட்ஜியின் உடம்பு நிலைமை ஒரு விதமாக நிச்சயப் படுகிறவரையில் கோபாலசாமி சிறைச்சாலையிலேயே இருக்க வேண்டும் போலிருக்கிறது. இந்த மாதிரி ஒரு காலவரையறை யில்லாமல் ஒருவர் சிறைச்சாலையிலேயே இருப்பது பெரிய அக்கிரமம்; அந்த ஜட்ஜியினுடைய உடம்பின் நிலைமை இப்போது எப்படி இருக்கிறதென்பது தெரியவில்லை. நானும் மீனாட்சி சுந்தரமும் ஓர் அவசர காரியத்தை கவனிக்க வேண்டியதாகிவிட்டது. ஆகையால், அந்த ஜட்ஜியின் நிலைமையைப்பற்றி விசாரிக்க, எங்களால் கூடாமல் போய்விட்டது. கடைசியாக நான் சில தினங்களுக்குமுன் பார்த்ததில் அவர் அநேகமாய் சவாரி வைத்துவிடுவார் என்ற அபிப்பிராயந்தான் என் மனதில் உண்டாயிற்று. என் குமாரசாமீ, நீ இன்று, நேற்று ஆஸ்பத்திரிக்குப் போய் அந்த ஜட்ஜியைப் பற்றி விசாரித்தாயா?

குமாரசாமிபிள்ளை:—நான் நேரில் போய்ப் பார்க்கவில்லை. நம்முடைய வக்கீலிடம் நேற்று மாலையில் போனேன். இன்று காலைவரையில் அங்கேதான் இருந்தேன். ஜட்ஜ் அநேகமாய் சங்கூதி விடுவார் என்று போலீஸார் பேசிக்கொண்டதாக வக்கீல் சொன்னார்.

திகம்பரசாமியார் :—(விசனமான குரலில்) ஓகோ! அப்படியா சொன்னார்! அவர் இறந்துபோய் விட்டால், கோபாலசாமியின் நிலைமை நிரம்பவும் கடினமானதாகிவிடும். நாமோ ஒரு காரியத்தையும் செய்யமாட்டாமல் சும்மா இருக்கிறோம். அதிருக்கட்டும். குமாரசாமீ, நீ பங்களாக்களை ஆராய்ச்சி செய்யப்போனாயே! காயா, பழமா? புஷ்பாங்கி அகப்பட்டாளா? நீ நேற்றுமுதல் வக்கீல் வீட்டிற்குப் போயிருந்ததாகச் சொல்வதைப் பார்த்தால், ஏதோ அநுகூலமான செய்தியை அவரிடம் சொல்லத்தான் நீ அவரிடம் போயிருக்கலாமென்ற அநுமானம் உண்டாகிறது—என்றார்.

உடனே குமாரசாமிபிள்ளையின் முகம் அபாரமான சந்தோஷத்தினால் மலரத் தொடங்கியது; அபாரமான இன்ப உணர்ச்சியைத் தாங்கமாட்டாதவராய், உடனே விவரங்களை அவரிடம் தெரிவிக்கலானார். முதலில் தாம் மாத்திரம் திருவையாற்றிற்குச் சென்று, அங்கிருந்து தஞ்சை வரையில் அலைந்து நான்கு தினங்கள் வரையில் வீண்பாடு பட்டு ஐந்தா நாள் வந்தது, வந்து கண்ணப்பாவோடு சம்பாஷித்திருந்த காலத்தில் சர்வே ஆபீஸரும், அவருடைய பரிவாரங்களும் வந்தது, அவர்களைப் பார்த்தபின் தமக்கு ஒரு யுக்தி தோன்றியது, தாம் அவர்களுடன் தஞ்சைக்குச் சென்றது முதலிய வரலாறு முழுதையும் கூறி, தாம் சேகரித்து வந்த பங்களாவின் பிளானையும், உள் பக்கத்தில் எடுக்கப்பட்ட படங்களையும் எடுத்து திகம்பரசாமியாரிடம் வைத்தார்.

சாமியார் மிகுந்த மகிழ்ச்சி கொண்டவராய்ப் படங்களை எடுத்துப் பிரித்துப் பார்த்துவிட்டு, "அச்சா! குமாரசாமீ, நீ எவ்வளவு அபாரமான காரியத்தை மிக சுலபத்தில்



சாதித்துக்கொண்டு வந்து, ஒன்றையு மறியாத பூனைபோல் மௌனமாக நிற்கிறாயே!" என்று பெரிதும் ஆச்சரியமும் பிரமிப்பும் தோற்றுவித்தவராய் மொழிந்தார்.

அப்போது மீனாட்சிசுந்தரம்பிள்ளை தமது கையிலிருந்த புஸ்தகத்தை சரேலென்று மடக்கி வைத்துவிட்டு, "எங்கே, எங்கே, குமாரசாமிபிள்ளை புஷ்பாங்கியைக் கண்டு பிடித்துவிட்டாரா!" என்று வியப்போடு கேட்டபடி விரைவாக வந்து படங்களை எடுத்துப் பார்த்தார்.

அப்போது கண்ணப்பாவும் அவைகளைப் பார்த்துவிட்டு குமாரசாமிபிள்ளையைப் பார்த்து, "ஆகாகா! நேற்று அந்த சர்வே ஆபீஸர் வந்துவிட்டுப் போனபோது, அவர்களிடம் கூலியாளாய் அமர்ந்து அவர்களுடன் போய்ப்பார்க்கலாமென்று நீங்கள் சொன்ன காலத்தில் அது பலிக்கவா போகிறதென்றல்லவா நான் அலட்சியமாக எண்ணினேன். அடாடா! எவ்வளவு சுலபத்தில் நீங்கள் போய் அபாரமான காரியத்தை சாதித்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள்! உங்களுக்கு இந்த உலகத்தையே சன்மானம் வழங்கினாலும், அது ஈடாகாதுபோலிருக்கிறதே!" என்று கூறி மூக்கின் மேல் விரலை வைத்தபடியே ஆநந்த சாகரத்தில் ஆழ்ந்தவராய் அப்படியே ஸ்தம்பித்து நின்றார்.

உடனே திகம்பரசாமியார் சந்தோஷ முகமலர்ச்சியோடு, "அப்படியானால் இவைகளை கோபாலசாமிக்குக் காட்டும் பொருட்டு, வக்கீலிடம் போனாய்போலிருக்கிறது?" என்றார்.

குமாரசாமிபிள்ளை :—போனேனா? ஓடினேன் என்று சொல்லுங்கள். அவர் கண்களைக் கட்டிக்கொண்டு போன இடத்தை நான் கண்டுபிடிப்பதென்றால், அது அவருக்கு

எப்பேர்ப்பட்ட சந்தோஷத்தை உண்டாக்கக்கூடிய சங்கதி! இதிலெல்லாம் தாமதம் உதவுமா! அதுவுமன்றி, இதுதான் என்ற நிச்சயம் ஏற்பட்ட பிறகே இவைகளை உங்களிடம் கொண்டுவர எண்ணினேன். இவைகளைப் பார்த்து வக்கீல் சந்தோஷத்தினால் பொங்கிப்போய் என்னைப் பிடித்து அப்படியே கட்டிக்கொண்டார்.

திகம்பரசாமியார் :— (வேடிக்கையாகப் புன்னகை செய்து) ஐயோ! அவர் வைதிகமாக இருக்கும் ஸ்ரீவைஷ்ணவராயிற்றே. அவர் அப்படியா செய்தார்! அப்படியானால், இந்தக் காரியம் எவ்வளவு அபாரமானதென்பதற்கு அதைவிட வேறே சாட்சியம்கூட வேண்டுமா! உயிர் போவதானாலும் பிறரைத் தொடாத வைதிகப் பிராம்மணர் தம்மையும், தமது பிடிவாத மதாசாரத்தையும் மறந்து போம்படியான அவ்வளவு ஆநந்தத்தை உன் செய்கை உண்டாக்கியிருக்கிறதே! அவர் உன்னை மாத்திரமல்லவா ஆலிங்கனம் செய்தார். எனக்கு உன்னையும், அந்த சர்வே சேவகன் ராமராஜுவையும் சேர்த்துக் கட்டிக்கொண்டு முத்தமிடவேண்டுமென்ற ஆவல் துடிக்கிறது. நீங்கள் இருவரும் ஒன்றாயிருக்கும்போது, அதை நான் செய்தே தீருகிறேன். நீ வாக்களித்தபடி பாக்கி லஞ்சப் பணத்தையும் அவனுக்குக் கொடுக்க மறந்துவிடாதே குமாரசாமீ.

குமாரசாமிபிள்ளை ;—ஆம், வாஸ்தவம் தான். முக்கியமாய் அவனால்தான் எனக்கு சுலபத்தில் இவை கிடைத்தன. நான் மாத்திரம் தனியாகப் போய் நான்கு நாட்கள் திண்டாடிய அலுப்பு எனக்கு இன்னம் தீரவில்லையே!

திகம்பரசாமியார் :—இவைகளை கோபாலசாமி பார்த்தானா? என்ன சொன்னான்?



குமாரசாமிபிள்ளை :—கோபாலசாமிபிள்ளையைப் பார்க்க அநுமதி வேண்டுமென்று நேற்றே வக்கீல் மனுப்போட உத்தேசித்தார். அதற்குள் கோர்ட் கலைந்துவிட்டது. இன்று காலையில் உத்தரவு கிடைத்தது. இருவரும் போய் கோபாலசாமிபிள்ளையைப் பார்த்து இவைகளைக் காட்டினோம். அவர் பார்த்து பிரமித்துப் போனதோடு, அந்த பங்களாவைக் கண்டுபிடித்ததைப் பற்றி என்னை அபாரமாகப் புகழ்ந்து கொண்டாடினார். இதே பங்களாவுக்குள் தான் அவர் போனாராம்; படத்தில் இருக்கும் மனிதர்களில் சிலரை அன்றிரவு உள்ளே பார்த்தாராம். பெண்ணின் தாய் தகப்பனார் இன்னின்னார் என்று அவர் காட்டினார்; இவைகளைப் போலீஸாரிடம் கொடுத்து, அந்த பங்களாவை உடனே சோதனை போடவேண்டுமென்று அவர்களிடம் கேட்டுக் கொள்ளும்படி கோபாலசாமிபிள்ளை வக்கீலிடம் சொன்னார்.

திசம்டரசாமியார் :—ஓ! அப்படியா சொன்னார்! இது ஆச்சரியமாயிருக்கிறதே! அவர் ஒரு நியாயஸ்தல நடவடிக்கைகளை நடத்தும் நீதிபதியாயிருந்து அப்படிச் சொன்னது வேடிக்கையாயிருக்கிறதே! என்ன குற்றத்திற்காகப் போலீஸார் அந்த பங்களாவை சோதனை போடுகிறது? அவருடைய கண்களைக் கட்டி அழைத்துக் கொண்டுபோன குற்றத்திற்காக சோதனை போடுகிறதா? அவரை ஜில்லா ஜட்ஜியின் பங்களாவில் கொண்டுபோய் விட்ட குற்றத்திற்காக சோதனை போடுகிறதா?

கண்ணப்பா :—அப்படிச் செய்ததெல்லாம் குற்றமல்லவோ?

திகம்பரசாமியார்:—இவன் சம்மதித்துப்போனால், அவர்கள் அழைத்துக்கொண்டு போனார்கள். அப்படியெல்லாம்

செய்ததாக அவர்கள் இப்போது ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள்; ஒப்புக்கொண்டாலும், அது குற்றமாகாது; அதுவுமன்றி, ஜட்ஜ் சுடப்பட்ட சம்பவத்தில் அவர்களை சம்பந்தப்படுத்த நம்மிடத்தில் எவ்வித ஆதாரமு மில்லை. குற்றவாளியின் கட்சிக்கு அநுகூலமான சாட்சியங்களை சேகரித்து நீதிபதியிடம் மெய்ப்பிப்பது குற்றவாளி செய்யவேண்டிய காரியம். குற்றவாளிக்கு அநுகூலமான சாட்சியங்களைப் போலீஸாரே சம்பாதித்துக் கொடுப்பார்களா? அதற்காக எவ்வித சம்சயமுமின்றி ஒரு பெரிய மனிதருடைய பங்களாவை அவர்கள் சோதனை போடுவார்களா? இப்படிச் செய்வது அவர்களுடைய கடமைக்குப் புறம்பான காரியம். அந்த பங்களாவில் உள்ளவர்கள் தந்திரம் செய்து, கோபாலசாமியை சிக்க வைத்திருக்கிறார்கள் என்று நாம் சம்சயிக்கிறோமென்பதைக் கருதி போலீஸார் அவர்கள்மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்ப்பது சரியல்ல. புஷ்பாங்கி கந்தசாமிக்குக் கடிதங்கள் அனுப்பியதையெல்லாம் ருஜுப்படுத்துவதனால் என்ன உபயோகம்? புஷ்பாங்கியின் ஆள்கள் மோட்டார் வண்டியில் வந்து அவரை ஜட்ஜ் துரையின் பங்களாவில் கொண்டுவந்து விட்டார்கள் என்பதற்கு, இவருடைய வார்த்தைதானே சாட்சி. துரை சுடப்பட்டதனால் உண்டான ஓசையைக் கேட்டு சேவகர்கள் ஓடி வந்தபோது, பின் புறத்திலிருந்த ஒரு மோட்டார் வண்டியை யாரோ விசையாக ஓட்டிக்கொண்டு போனதாகச் சொல்லுகிறார்களே யன்றி, அதன் அடையாளத்தையோ, நம்பரையோ சொல்ல அவர்களால் இயலவில்லை. கோபாலசாமியோடுகூட வந்த கூட்டாளிகள் சேவகர்கள் வந்ததைக் கண்டு ஓடியிருக்கலாமென்ற அபிப்பிராயத்தை நீதிபதி கொள்ளலாமல்லவா! ஆகையால், போலீஸார் அந்த



பங்களாவை சோதனைபோட அவசியம் மறுப்பார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

குமாரசாமிபிள்ளை:—சரிதான். கோபாலசாமிபிள்ளை சொன்னதற்கு, வக்கீலும் இதே மாதிரிதான் உத்தரம் சொன்னார்.

திகம்பரசாமியார்:—இந்த விஷயத்தை நாம் இப்போது போலீஸாரிடம் சொல்வதே கூடாது. புஷ்பாங்கியின் கோஷ்டியாருக்கு அது எட்டினாலும் எட்டலாம். உடனே அவர்கள் எச்சரிப்படைந்து விடுவார்கள். உண்மையான குற்றவாளியை நாம் கண்டுபிடிப்பதற்கு அது இடையூறாய் முடிந்தாலும் முடியலாம்.

குமாரசாமிபிள்ளை:—அதையும் வக்கீல் அவரிடத்திலும், என்னிடத்திலும் சொன்னார். அதுவன்றி, உங்களிடம் சொல்லும்படி வக்கீல் என்னிடம் இன்னொரு செய்தியையும் சொன்னார். கோபாலசாமியை அழைத்துக் கொண்டு போன இடத்தையும், மனிதர்களையும், மோட்டார் வண்டியையும் கண்டுபிடிப்பது மாத்திரம் போதாதென்றும், ஜட்ஜ் துரையை சுட்டவர் அவர்களுடைய மனிதர் என்று மெய்ப்பிக்க வேண்டுமென்றும், அப்போதுதான் கோபாலசாமி பிள்ளை நிர்பராதி என்று கருதப்படுவார் என்றும் வக்கீல் உங்களிடம் சொல்லச்சொன்னார்.

திகம்பரசாமியார்:—அதை யெல்லாம் என்னிடம் ஏன் சொல்லுகிறாய்? இந்தப் புஷ்பாங்கி சப்பந்தப்பட்ட விஷயங்களின் உண்மைகளை யெல்லாம் கண்டுபிடிப்பதை நான் பூர்த்தியாய் உன் பொறுப்பிலேயே விட்டு விட்டேன். இதில் நான் தலையிடப்போவதே இல்லை. இப்போது நீ அவர்களுடைய இருப்பிடத்தைக் கண்டுபிடித்ததுபோல

இன்னம் அவசியமான விஷயங்களை யெல்லாம் கண்டுபிடிக்க வேண்டும். ஜட்ஜ் துரையை சுட்டது புஷ்பாங்கியின் ஆள் என்பதற்கு நீ ருஜு சம்பாதிக்க வேண்டும். அது வல்லாமல் அந்தப் புஷ்பாங்கியைப் பற்றி இன்னம் சில முக்கியமான விஷயங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அவள் உண்மையிலேயே கந்தசாமியை விவாகம் செய்து கொள்ளும் கருத்துடன் முதலில் கடிதம் எழுதினாளா, அப்படியானால், ஏன் அவள் தன் தகப்பனாரைத் தூண்டி நேர்ப்பாதையில் கந்தசாமியிடம் கலியாணப் பிரஸ்தாபம் செய்யச் சொல்லவில்லை, அப்படி விவாகம் செய்துகொள்ளும் எண்ணத்துடன் அவள் கந்தசாமிக்குக் கடிதம் எழுதி இருந்தால், அவருடைய ஆப்த நண்பரை ஜட்ஜியின் பங்களாவில் கொண்டுபோய் விடச் செய்திருப்பாளா, உண்மையில் அவளுக்கு சிறிய தாயாரும், அவளுக்கு ஒரு பெண்ணும் தஞ்சாவூரில் இன்னொரு பங்களாவில் இருக்கிறார்களா, கோபாலசாமியை மோட்டார் வண்டியில் அழைத்துவந்த ஆள்கள் பங்களாவின் அடையாளம் தெரியாமையால், இட மாறாட்டமாக ஜட்ஜ் துரையின் பங்களாவில் விட்டிருப்பார்களா, ஜட்ஜ் துரையின் மனைவிக்குக் காதல் கடிதம் அனுப்பிய மனிதருடைய பெயரும், பெயருக்கு முன்னுள்ள எழுத்துக்களும், கோபால சாமியின் பெயரும், அதற்கு முன்னுள்ள எழுத்துக்களும் அதாவது, ம. வே. கோ. என்னும் எழுத்துக்கள் எப்படி ஒன்றாயிருந்தன, உண்மையிலேயே அந்த ஜட்ஜியின் மனைவிக்கு ஒரு காதலன், அல்லது, பல காதலர் இருக்கிறார்களா, அவர் அல்லது அவர்கள் யார், புஷ்பாங்கியின் உளவாள் எவனாகிலும் கந்தசாமியின் மாளிகையில், அல்லது, ஜட்ஜியின் பங்களாவில் இருக்கிறானா, கந்தசாமியின் மாளிகையிலிருந்த கடிதங்களும் படமும் எங்கே போயின என்னும்



தகவல்களை யெல்லாம் நீ கண்டுபிடிக்க வேண்டும். இவையன்றி, சென்னைப் பட்டணத்தில் புதிதாய் நிச்சயிக்கப் பட்டிருக்கும் கலியாணப் பெண்களில் ஒருத்தி யிடத்திலிருந்து வந்ததாகச் சொல்லப்படும் கடிதத்திற்கும், புஷ்பாங்கிக்கும் ஏதாவது சம்பந்த முண்டா, அல்லது, [illegible] பெண்கள் உண்மையில் வேறு புருஷர்களை விரும்புகிறார்களா என்னும் தகவல்களை நீ அறிய வேண்டும். அதோடு கந்தசாமி இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். இவைகளன்றி, புஷ்பாங்கி இப்போது எங்கே இருக்கிறாள் என்பது தெரியவேண்டும். அவளுடைய குடும்ப வரலாறு தெரிய வேண்டும். அவள் கந்தசாமிக்கு ஏதேனும் கெடுதல் செய்ய நினைத்து முதன் முதலில் கடிதம் எழுதியிருந்தால், அவளுடைய குடும்பத்திற்கும், கந்தசாமியின் குடும்பத்திற்கும் பழைய சம்பந்தம் ஏதாகிலும் உண்டா, அல்லது, வேறு பகைவர் எவருடைய தூண்டுதலினாலேனும் அவள் வேலை செய்கிறாளோ என்பது தெரிய வேண்டும். இத்தனை சங்கதிகளையும் நாம் திருப்திகரமாகத் தெரிந்து கொண்டாலன்றி, இப்போது ஏற்பட்டுள்ள குளறுபடையான சிக்கல்கள் அறுபட வகையில்லை இவைகளை யெல்லாம் நீதான் கண்டுபிடிக்க வேண்டும். உன்னுடைய விருப்பப்படி நானும் மீனாட்சி சுந்தரமும் நடந்துகொள்ளத் தடையில்லை.

குமாரசாமி பிள்ளை:—இத்தனை விஷயங்களும் அவசியம் தெரிய வேண்டியவைகள் தாம். இவைகளை யெல்லாம் நானே கண்டுபிடிக்க வேண்டுமென்று நீங்கள் உத்தர விடும் பட்சத்தில் நான் என்னாலான வரையில் முயன்று பார்க்கிறேன். எல்லாவற்றிற்கும், அந்தப் புஷ்பாங்கியையோ, அவளுடைய படத்தையோ நான் ஒருமுறை பார்த்தால், அதற்கு மேல் வேலை செய்வது சுலபமாயிருக்கும். நேற்று அவ

ளுடைய பங்களா முழுதிலும் புகுந்து பார்த்தோம். அவள் எங்கள் கண்ணில் படவே இல்லை. அநேகமாய் அவள் வேறு எங்கேயாவது போயிருப்பாளென்று நினைக்கிறேன். இருக்கட்டும். நான் இப்போதே புறப்பட்டு தஞ்சைக்குப் போய் எப்படியாவது முயற்சிசெய்கிறேன்—என்றார்.

அதுவரையில் மற்றவர்களுடைய சம்பாஷணையை வியப்போடு கேட்டுக் கொண்டிருந்த கண்ணப்பா குமாரசாமிபிள்ளையை நோக்கி, "உங்கள் சிரமத்தை நான்கொஞ்சம் குறைக்கிறேன். இப்போது புஷ்பாங்கி சென்னைப்பட்டணத்தில் இருக்கிறாள். அவளுடைய படம் ஒன்று என்னிடமிருக்கிறது" என்று கூறியபடி தமது சட்டைப் பையிலிருந்த உறையை எடுக்க முயல, அவர் பேசி வாய்மூடுவதற்கு முன் திகம்பர சாமியார், "என்ன தம்பி, நீகூடத் துப்பறிய ஆரம்பித்து விட்டாய்போலிருக்கிறதே! எங்கள் காற்றுவாடை உன்மேலும் வீசியதா? நீ ஏதேதோ தகவல்களை சேகரித்திருக்கிறாய்; இதுவரையில் சொல்லாமல் கம்மென்று நிற்கிறாயே" என்று வியப்பொடு புன்னகை செய்தபடி கூறினார்.

கண்ணப்பா விகாரமாகப் புன்னகை செய்தபடி, திருநடன வைபவம் பிள்ளையிடத்திலிருந்து வந்த உறையை எடுத்து, "இது தேனாம்பேட்டைத் திருநடன வைபவம் பிள்ளையிடத்திலிருந்து கொஞ்ச நேரத்திற்குமுன் தபாலில் எனக்கு வந்தது. இதை உங்களிடம் கொடுப்பதற்காகவே நான் வந்தேன். நீங்கள் வேறு முக்கியமான விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தபடியால், கொஞ்சம் பொறுத்திருந்தேன்" என்று கூறியபடி உறைக்குள்ளிருந்த படத்தையும், மூன்று கடிதங்களையும் வெளியில் இழுத்து திகம்பரசாமியாருக்கெதிரில் வைத்தார். உடனே சாமியார் படத்தை ஆவலோடு எடுத்துப் பார்க்கத் தொடங்கினார். அப்போது சற்று



தூரத்தில் நின்ற மீனாட்சிசுந்தரம்பிள்ளையும், குமாரசாமி பிள்ளையும் சரேலென்று சாமியாருக்குப் பின்புறத்தில் வந்து நின்றுகொண்டு படத்தைப் பார்த்தனர். உடனே மீனாட்சிசுந்தரம்பிள்ளை வியப்போடு, "அடேயப்பா! அழகு கண்ணைப் பறிக்கிறதே! உலகைத் துறந்த சந்நியாசியான என் மனதே இதைப் பார்த்து பிரமிக்கிறதே!

குமாரசாமிபிள்ளை," நான் நேற்று பார்த்த அந்த பங்களாவில் இருந்தவர்கள் தக்க தனவந்தர்களாகத்தான் காணப்பட்டனர். பெண்ணும் அதற்குத் தகுந்தபடியே இருக்கிறாள். உண்மையில் கந்தசாமியை விவாகம் செய்து கொள்ளும் நோக்கத்துடனேயே இவர்கள் அவருக்குக் கடிதமெழுதி யிருக்கலாமென்ற எண்ணமே எனக்கு உண்டாகிறது. இவ்வளவு சிலாக்கியமான தோற்றமுடைய பெண், கொலை, மோசம், முதலிய பயங்கரமான விஷயங்களில் சம்பந்தப்படுவாளா என்பதுதான் எனக்கு சந்தேகமா யிருக்கிறது." என்றார்.

அதுவரையில் மௌனமாகவும், வியப்போடும் அந்தப் படத்தை உற்றுப் பார்த்த திகம்பரசாமியார், "எங்கேயோ இதற்குமுன் நான் பார்த்த முகமாகத் தெரிகிறதே! எப்போது எங்கே பார்த்தேனென்பது நினைவிற்கு வரவில்லையே!" என்றார்.

குமாரசாமிபிள்ளை, "இவர்கள் இதுவரையில் அக்கரைச் சீமையான கிள்ளானில் இருந்தவர்கள் என்றல்லவா சொன்னாராம். இவர்களை நீங்கள் எங்கே பார்த்திருக்கப் போகிறீர்கள்! கிட்டத்தட்ட இவளைப்போலிருக்கும் வேறே யாரையாவது நீங்கள் பார்த்திருக்கலாம்" என்றார்.

திகம்பரசாமியார், "இந்தப் படத்தைப் பார்த்தபின், இவர்கள் கெட்ட எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு

கந்தசாமிக்குக் கடிதம் எழுதியிருப்பார்களா என்ற ஒரு பெரிய மலைப்பு என் மனதில் உண்டாகிறது. சரி; குமாரசாமீ, புஷ்பாங்கியின் படத்தைப் பார்க்க வேண்டுமென்றாயே; அதுவும் கிடைத்துவிட்டது. இனி நீ வேலைசெய்யலாம்" என்றார்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை, "இதோடு வந்துள்ள கடிதங்களைப் படிக்கவில்லையே?" என்றார். உடனே திகம்பரசாமியார், கடிதங்கள் மூன்றையும் ஒன்றன்பின் னொன்றாகப் படித்தபின் அவைகளை மற்றவர்களிடம் கொடுக்க, அவர்களும் அவைகளை ஆவலோடும் ஆச்சரியத்தோடும் படித்துவிட்டு மனக்குழப்பத்தைக் காட்டிய முகத்தோடு அவைகளைக் கீழே வைத்துவிட்டனர்.

திகம்பரசாமியார்:—என்ன குமாரசாமீ, கடிதங்களைப் படித்தாயே! இப்போது புஷ்பாங்கியைப் பற்றி உன்மனதில் எவ்விதமான அபிப்பிராயம் உண்டாகிறது?

குமாரசாமிபிள்ளை:—கோபாலசாமிபிள்ளை அந்த பங்களாவிற்குப் போன அன்றையதினம் இவள் தஞ்சாவூரில் இருந்திருக்கிறாள். கந்தசாமிபிள்ளை பட்டணத்திற்குப் போயிருப்பதைத் தெரிந்துகொண்டு, அவளும் உடனே அங்கேபோய், அவருடைய இருப்பிடத்தைக் கண்டுபிடித்து, அவரோடு பரிச்சயம் செய்துகொண்டு பயாஸ்கோப் வேடிக்கைபார்க்க அவருடன் வந்திருக்கிறாளே! இவள் அசாத்திய சாமர்த்தியசாலியாகத்தான் இருக்கிறாள். கந்தசாமிபிள்ளையின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க, கண்ணப்பாபிள்ளையால் முடியவில்லையே! தஞ்சாவூரில் அவருடைய மாளிகையில் இருந்த எவருக்கும் அவர் சென்னையில் எங்கே தங்கப் போகிறார் என்பது தெரியாதென்று, கோபாலசாமிபிள்ளையே



சொன்னாரே! அப்படி இருக்க, அது புஷ்பாங்கிக்கு மாத்திரம் எப்படித் தெரிந்திருக்கும்?

மீனாட்சிசுந்தரம்பிள்ளை:—அவர் சென்னைக்குப் போன பின் கோபாலசாமிபிள்ளைக்குக் கடிதம் எழுதியிருக்கலாம். வீட்டிலிருந்த சேவகர்களில் ஒருவனை புஷ்பாங்கியின் உள்ளாள், அதை அபகரித்துப் படித்து கந்தசாமிபிள்ளையின் இருப்பிடத்தைத் தெரிந்துகொண் டிருக்கலாம்.

திகம்பரசாமியார்:—அப்படியும் இருக்கலாம்; இல்லாவிட்டால், அவர் சென்னைக்குப் போனபோது அவருக்குத் தெரியாமல் அதே வண்டியில் புஷ்பாங்கியின் ஆள்கள் போயிருக்கலாம்; அவர்கள் கந்தசாமியைத் தொடர்ந்து சென்று, அவர் தங்குமிடத்தைத் தெரிந்து கொண்டிருக்கலாம்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை:—இதில் இன்னொரு முக்கியமான விஷயம் இருக்கிறது. கந்தசாமி என்று கையெழுத்திட்டு, கோபாலசாமி புஷ்பாங்கிக்கு எழுதியனுப்பிய கடிதம் புஷ்பாங்கி யிடத்தில் போய்ச் சேர்ந்தபிறகு தானே அவள் முடிவான ஒரு கடிதத்தையும் ஒரு படத்தையும் கந்தசாமி பிள்ளையின் வீட்டிற்கு அனுப்பினாள். புஷ்பாங்கிக்குப் போய்ச்சேர்ந்த கடிதம் திருநடன வைபவம் பிள்ளைக்கு வருவதென்றால், அவளாலோ, அவளைச் சேர்ந்தவர்களாலோ தான் அது தேனாம்பேட்டைக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.

குமாரசாமிபிள்ளை:—கந்தசாமிபிள்ளை சென்னைக்குப் போன பிறகல்லவா கோபாலசாமிபிள்ளை அந்தக் கடிதத்தை புஷ்பாங்கிக்கு எழுதி மதில் சுவரில்வைத்தார். கந்தசாமி பிள்ளையோடுகூட அந்த வண்டியில் போனமனிதர் அந்தக் கடிதத்தையும் அப்போதே கொண்டுபோயிருக்கமுடியாது.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை :—இந்தக் கடிதமும் படமும் பிற்பாடு தபால் மூலமாய் அந்த மனிதருக்குப் போயிருக்கலாம். அவர் இவைகளைத் திருநடன வைபவம் பிள்ளைக்கு அனுப்பி இருக்கலாம்.

குமாரசாமிபிள்ளை :—அதே மனிதன் தானே நாரதருக்கு அண்ணனுக்குத் தம்பி என்று கையெழுத்துச் செய்து திருநடன வைபவம்பிள்ளைக்கு அநாமதேயக் கடிதம் எழுதியிருக்கிறான். அவன் புஷ்பாங்கியால் அனுப்பப்பட்ட உள்ளாளா யிருந்தால், புஷ்பாங்கியும், கந்தசாமிபிள்ளையும், பயாஸ்கோப்பிற்கு ஒன்றாக வந்ததை திருநடன வைபவம் பிள்ளைக்கு எழுதியிருப்பானா? புஷ்பாங்கியின் மனிதனே அவளுக்கு விரோதமான காரியத்தைச் செய்திருப்பானா?

மீனாட்சிசுந்தரம்பிள்ளை :—இது புஷ்பாங்கிக்கு எப்படி விரோதமான காரியம் ஆகும்? புஷ்பாங்கிக்கும் கந்தசாமி பிள்ளைக்கும் சிநேகமாய்விட்டதுபோலக் காட்டி, திருநடன வைபவம்பிள்ளை தம் பெண்ணை அவருக்குக் கொடுக்காதபடி செய்துவிட வேண்டுமென்ற கருத்தோடு அவர்கள் தந்திரமாக வேலை செய்திருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறதே! இந்தப் படமும், 'கந்தசாமி' என்று கையெழுத்திடப்பெற்ற கடிதமும் முதலில் அனுப்பப்பட்டதும் அதே கருத்தோடு தான். கோபாலசாமிபிள்ளையை ஜட்ஜியின் பங்களாவில் கொண்டுபோய் விட்டு, எக்கச் செக்கத்தில் மாட்டி வைத்து, அதனால் அவருக்கு ஏற்படும் இழிவைக் கண்டு திருநடன வைபவம்பிள்ளை இந்த விவாக ஏற்பாட்டை ரத்து செய்து விடவேண்டுமென்ற கருத்தோடு தான் இருக்குமென்ற அபிப்பிராயம் எனக்கு இப்போது உண்டாகிறது.

குமாரசாமிபிள்ளை:—அப்படியானால், தேனாம்பேட்டைப் பெண்களை இவர்கள் விவாகம் செய்துகொள்ளாமல் தடுத்து,



தானும், தனது ஒன்றுவிட்ட சகோதரியும் இவர்கள் இருவரையும் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்பது இவளுடைய உள்கருத்தா யிருக்கலா மென்கிறீர்களா?

மீனாட்சிசுந்தரம்பிள்ளை :—அது இவளுடைய கருத்தாயிருந்தால், அது ஒரு விதத்தில் மன்னிக்கக்கூடிய விஷயமல்லவா. அது இவளுடைய கருத்தாயிருந்தால், கோபாலசாமிபிள்ளையை ஒரு கொலைக் குற்றத்தில் மாட்டவைத்து மீளாதபடி அவரைப் படுகுழியில் ஆழ்த்த எண்ணுவாளா? அல்லது, கந்தசாமிபிள்ளையை விவாகம் செய்து கொள்ள விரும்பும் புஷ்பாங்கி விவாகத்திற்குமுன் அவரோடு சிநேகம் செய்துகொண்டு, தாசி வேசைபோல அவருடன் கூட வேடிக்கை பார்க்கப் போயிருப்பாளா?

குமாரசாமிபிள்ளை :— அப்படியானால் இவளுடைய கருத்து உண்மையில் இவரைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்பதல்ல, இவருக்கும், இவரைச் சேர்ந்தவருக்கும் தீங்கு செய்ய வேண்டுமென்பதுதான் என்று எண்ண வேண்டியதாகிறது. அப்படியானால், அவள் இவர்களுடைய குடும்பத்தாரிடம் ஏதோ பகைமை பாராட்டுகிறவளாயிருக்கவேண்டும்; அல்லது, அப்படிப் பகைவளர்க்கும் ஒரு மனிதரால் ஏவப்பட்டவளாகவாவது இருக்கவேண்டும்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை :—அப்படித்தான் என் மனதிற்கும் படுகிறது.

குமாரசாமிபிள்ளை :—அதிருக்கட்டும். கந்தசாமிபிள்ளை அன்னிய ஸ்திரீயை ஏறெடுத்துக்கூடப் பார்க்கமாட்டாரே. அவர் எப்படி புஷ்பாங்கியோடு பழகி, அவளுடன் பயாஸ்கோப்புக்கு வந்தார்? துறவியான நீங்களே இந்தப் படத்தைக் கண்டு மயங்குவதாகச் சொன்னீர்களே! இதே காரணத்

னால், அவரும் மோகித்து இவளுடைய வலையில் விழுந்திருப்பாரென்று நீங்கள் கருதுகிறீர்களா?

மீனாட்சிசுந்தரம்பிள்ளை:—இதைக் கண்டு நான் மலைத்துப் போனதாக வெறும் பேச்சிற்குச் சொன்னால், அதை நீங்கள் உண்மையாகவே நினைத்துக்கொண்டு விட்டீர்களே! கந்தசாமிபிள்ளை அவளோடு கூட உட்கார்ந்து பயாஸ்கோப் பார்க்க இணங்கியது எதனால் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. ஆனால், கந்தசாமிபிள்ளை தமது கண்ணியத்திற்குக் குறைவான எந்தக் காரியத்திலும் இறங்கமாட்டார் என்பதை மாத்திரம் நான் உறுதியாகச் சொல்லுவேன். அவள் அவருக்குப் பின்னால் இருந்து முகத்தை அவருக்கருகில் வைத்துக்கொண்டு பேசியதுபோலல்லவா திருநடன வைபவம்பிள்ளை எழுதியிருக்கிறார். அதைத்தான் நீங்கள் கண்டுபிடித்து விளக்கவேண்டும்.

திகம்பரசாமியார்:— கந்தசாமி சென்னைக்குப் போன பிறகே புஷ்பாங்கியின் படம் தஞ்சையில் கோபாலசாமிக்கு அவளால் அனுப்பப்பட்டதென்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஆகையால், புஷ்பாங்கி எப்படி இருப்பாள் என்பது கந்தசாமி பட்டணம் போகிறவரையில் அவனுக்குத் தெரியாது. ஆகையால் அவன் தன்பாட்டில் பயாஸ்கோப்பிற்குப் போயிருக்கலாம். அவன் போகப்போகிறானென்பதைத் தெரிந்துகொண்டு, புஷ்பாங்கி அவனுடைய நாற்காலிக்குப் பின்னால் இருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருக்கலாம். அதை அவன் கவனிக்காமல் முன் பக்கத்தில் கவனத்தைச் செலுத்தியிருக்கலாம். அவளுடைய ஆளே திருநடன வைபவம்பிள்ளைக்கு அதைப்பற்றி எழுதி இருக்கலாம். திருநடன வைபவம்பிள்ளை வந்ததைக் கண்டு, அவள் வேண்டுமென்றே முகத்தை முன்னால் நீட்டிக்கொண்டிருக்கலாம். அதற்கு



மேல் அதிகமாய் எதுவும் நேர்ந்திருக்குமென்று நான் நினைக்கவில்லை.

குமாரசாமிபிள்ளை:—அப்படித்தான் இருக்கவேண்டும். பயாஸ்கோப் முதலிய வேடிக்கைகளுக்குப் போகாதவரான கந்தசாமிபிள்ளை அன்று என்ன காரணத்தினால் போனார் என்பது தெரியவேண்டும். அவருடைய ஜாகையில் அவரோடு இருந்தவர்களில் புஷ்பாங்கியின் உள்ளாள், எவன் என்பதை நாம் கண்டுபிடிக்கவேண்டும். கந்தசாமியிடத்திலிருந்து இவைகளையெல்லாம் நாம் மிக சுலபத்தில் கண்டுபிடித்துவிடலாம்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை:—கந்தசாமி இருக்கும் இடம் நமக்குத் தெரியவேண்டும். புஷ்பாங்கியிருக்குமிடம் தெரியவேண்டும்.

திகம்பரசாமியார்:—என்ன, குமாரசாமீ, பட்டணத்திற்கு எப்போது புறப்படப் போகிறாய்? இன்றைய மெயில்தானே?

குமாரசாமிபிள்ளை:—நீங்கள் வராமலா?

திகம்பரசாமியார்:—எனக்கு அதில் என்ன வேலை இருக்கிறது. உனக்குத் துணைவேண்டுமானால், மீனாட்சிசுந்தரத்தையும்கூட அழைத்துக்கொண்டு போ—என்றார்.

அவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருந்த சமயத்தில், சமயலறையில் வேலை செய்யும் பையன் திகம்பரசாமியாருக்கருகில் வந்து, அன்றைய காலைத் தபாலில் வந்த தினசரிப் புளுகன் என்னும் பத்திரிகையில் ஒரு பத்திரிகையைக் காட்டி, "நீலப் பென்ஸிலால் அடையாளம் செய்திருக்கும் பாகத்தை எஜமானியம்மாள் பார்க்கச் சொன்னார்கள்" என்று சொல்லிக் கொடுத்துவிட்டு வெளியில் போய்விட்டான்.

சாமியார் அதை வாங்கி உரத்த குரலில் படிக்க, மற்றவர்கள் வியப்போடு அதைக் கவனிக்கலாயினர்:—

பட்டப்பகலில் பங்களாவில் திருட்டு.
கைதி தம் பெயரைச் சொல்ல மறுத்துவிட்டார்
கைதி வைஷ்ணவப் பிராம்மணர் என்று எல்லோரும்
அபிப்பிராயப்படுகின்றனர்.

இராயப்பேட்டைப் போலீஸார் இன்று பகலில் ஒரு கைதியைப் போலீஸ் கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தினார்கள். கைதிக்கு சுமார் 20 வயதிருக்கலாம். அவருடைய தோற்றத்திலிருந்து அவர் வைஷ்ணவப் பிராம்மணர் என்பது சந்தேகமறத் தெரிந்தது. இராயப்பேட்டையில் மதன பாலேஸ் என்னும் பங்களாவில், அதன் சொந்தக்காரரான ஆண்பிள்ளை ஒருவர் மாத்திரம் இருந்து வருகிறார். அவர் கீழே இறங்கி ஏதோ காரியமாய்ப் போயிருந்த காலத்தில் கைதி பங்களாவின் மேன்மாடத்தில் ஏறி, இரும்புப் பெட்டி யிருந்த அறைக்குள் நுழைந்து, அங்கு படுக்கையில் தலையணையின் கீழ் இருந்த சாவிக்கொத்தை எடுத்து இரும்புப்பெட்டியைத் திறந்து, உள்ளே இருந்த நகைகள் முதலியவற்றை எடுக்க முயன்ற சமயத்தில் அதன் சொந்தக்காரர் அதைத் தெரிந்துகொண்டு டெலிபோன் மூலம் பக்கத்திலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குத் தந்தி யனுப்ப, ஸப்-இன்ஸ்பெக்டர் முதலியோர் உடனே வந்து உள்ளே இருந்த ஆளைப் பிடித்துக் கொண்டனர்.

கைதி, தாம் திருடவரவில்லை யென்றும், முதல் மந்திரி திருநடனவைபவம் பிள்ளையின் இளைய குமாரியான மோகனாம்பாளுக்கு ஒருவர் கொடுத்த கடிதத்தைக் கொணர்ந்தது



யும், வெளியில் இருந்த ஒரு டலாயத்திடம் அதைக் கொடுத்தனுப்பியதாகவும், பிறகு டலாயத் வந்து தம்மை மேன்மாடத்திற்கு அழைத்துப்போய், அங்கே இருக்கச் செய்துவிட்டு, அம்மாள் வருவாளென்று சொல்லிவிட்டுப் போனதாகவும், தாம் அந்த அம்மாளின் வருகையை எதிர்பார்த்திருந்த சமயத்தில் போலீஸார் தம்மைப் பிடித்துக்கொண்டதாகவும் அவர் சொல்லுகிறார். அவருடைய பெயரையோ, கடிதம் கொடுத்தவருடைய பெயரையோ, தேனாம்பேட்டையில் ஒருபங்களாவில் உள்ள மோகனாம்பாளை இராயப்பேட்டையிலுள்ள ஒரு பங்களாவில் அவர் தேடியகாரணமென்ன வென்பதையோ அவர் சொல்ல மறுத்துவிட்டார்.

மாஜிஸ்டிரேட், எவ்வளவோ நயமாகக் கேட்டுப் பார்த்தார்; அவர் உண்மையைச் சொல்லாவிட்டால், அவர் அன்னியருடைய கட்டிடத்திற்குள் அநுமதியின்றி நுழைந்து, திருட எத்தனித்ததற்காக தாம் அவருக்கு மூன்றுமாதக் காவல் தண்டனை விதிக்கப் போவதாகச் சொல்லி வெருட்டிப் பார்த்தார். கைதி ஒரே உறுதியாக மௌனம் சாதித்தார். அப்போது அங்கிருந்த வக்கீல்களில் ஒருவரும், மன்னார்குடியில் பூர்விக மிராசுதாரருமான ஐயர் ஒருவர், "என்னப்பா, உன் பெயர் துரைஸாமி இல்லையா? நீ தஞ்சாவூர் ஸப்-ஜட்ஜ் கந்தசாமிபிள்ளையின் சிநேகிதனல்லவா? அவருக்குத் திருநடன வைபவம்பிள்ளையின் பெண்ணை விவாகம் செய்து கொடுக்க ஏற்பாடாயிருக்கிறதாகப் பிரஸ்தாப மாயிருக்கிறதே! நிஜத்தைச் சொல்லிவிடேன்" என்றார்.

அப்போதும் கைதி தமது பெயர் அதுவல்லவென்றும், வக்கீல் குறிப்பிடுவது தமக்கு விளங்கவில்லை யென்றும் பிடிவாதமாகச் சொல்லிவிட்டார்.

மாஜிஸ்டிரேட் அவசரப்பட்டு தண்டனை விதிக்கக் கூடாதென்னும் கருத்துடன் அந்த வழக்கை பதினைந்து தினங்களுக்கு ஒத்திவைத்து கைதியை அதுவரையில் ரிமாண்டில் வைக்க உத்தரவிட் டிருக்கிறார்.

(கம்ப மில்லாத் தந்தி)

என்று திகம்பரசாமியார் படிக்கவே, அவருடைய முகமும், மற்றவர்களுடைய முகங்களும் சரேலென்று விகாரமாக மாறிப்போயின. திகம்பரசாமியார், "ஆகா! கந்தசாமியும், துரைஸாமியும் பட்டணத்தில் பெரிய வஞ்சக வலையில் சிக்கிக்கொண் டிருக்கிறார்கள்போ லிருக்கிறதே! கந்தசாமி என்னவானானோ தெரியவில்லையே! திருநடன வைபவம் பிள்ளையினுடைய பங்களா தேனாம்பேட்டையில் அல்லவா இருக்கிறது. துரைஸாமி இராயப்பேட்டையில் உள்ள ஒரு பங்களாவிற்குப் போய் அவருடைய இளைய குமாரத்திக்குக் கடிதம் கொடுக்க முயலவேண்டிய காரணமென்ன வென்பது தெரியவில்லையே!" என்றார்.

கண்ணப்பா, தமது கோபாவேசத்தை அடக்க மாட்டாதவராய், "இது பெரிய குருட்டு சங்கதியா யிருக்கிறதே! போலீஸார் நல்ல திருடனைக் கண்டுபிடித்தார்கள்! இந்த வரையிருக்க வேண்டும். இந்நேரம் அந்தப் போலீஸார் படும்பாடு தெரிந்திருக்கும். என்ன அநியாயம் இது! நினைக்கும் போது பகீரென்று பற்றுகிறதே! ஐயோ! பாவம்! துரைஸாமிக்கு இந்த அவமானம் நேர்ந்ததுதான் என்றால் சகிக்கவே முடியாத பெருத்த இடியா யிருக்கிறது. இந்தச் செய்தியை என் தாயார், தகப்பனார் படித்தால் அப்படியே பதறிப்போய் கோவென்று கதறி யழுதுவிடுவார்களே!" என்று பெரிதும் கலங்கிப்போனவராய் வியப்போடு கூறி ஆரம்பித்தார்.



மீனாட்சிசுந்தரம்பிள்ளை:—தஞ்சாவூரில் கோபாலசாமி பிள்ளையைக் கொலையில் மாட்டவைத்தார்கள்; அங்கே துரைஸாமியைத் திருட்டில் மாட்டவைத்திருக்கிறார்கள். கந்தசாமிபிள்ளையை என்ன நிலைமையில் வைத்திருக்கிறார்களோ தெரியவில்லையே! யாரோ பகைவர்கள் கூடி, பரம ரகசியமான சதியாலோசனை செய்திருக்கிறார்கள்போ லிருக்கிறதே! இவர்கள் மூவரும் நல்ல புத்திசாலிகள். இவர்களுக்கே இப்படிப்பட்ட படுகுழி வெட்டி யிருக்கிறார்களே! அவர்கள் அசாத்தியமான சாமர்த்தியம் வாய்ந்த பகைவர்களா யிருக்கிறார்களே! மதன பாலேஸ் என்னும் இடத்தில் யாரோ ஒரு டலாயத் இருந்ததாகவும், அவன் துரைஸாமி கொடுத்த கடிதத்தை மோகனாம்பாளிடம் கொடுப்பதாய்ச் சொல்லி வாங்கிக்கொண்டு போனதாகவும் துரைஸாமி சொல்வது நிஜமான சங்கதியாகவே இருக்கும். அப்படியானால், இதில் திருநடன வைபவம் பிள்ளையின் பங்களாவிலுள்ள ஒரு டலாயத்கூட சம்பந்தப்பட்டிருக்கலா மென்ற சம்சயமல்லவா உண்டாகிறது! இங்கே ஜில்லா ஜட்ஜ் தம் மனையாளின் கற்பைப்பற்றி அடிக்கடி சந்தேகப்படுகிறார் என்பதை வெளியில் போய்ச் சொல்ல, ஒரு சேவகன் ஏற்பட்டான்; கந்தசாமி பிள்ளையின் வீட்டில் கடிதங்கள் படம் முதலியவற்றைத் திருட ஒருவன் ஏற்பட்டான். கந்தசாமிபிள்ளை சென்னைக்குப் போய்த் தங்கின இடத்தில் அவர் பயாஸ்கோப்பிற்கு வரப்போகிறார் என்பதைச் சொல்லி, அது திருநடன வைபவம் பிள்ளைக்கு எட்டும்படி செய்ய ஒருவன் ஏற்பட்டான். ஏதேது! வேலியே பயிரை அழிப்பதுபோல, வேலைக்காரர்களே எஜமானருக்கு துரோகம் செய்ய ஆரம்பித்தால், எஜமானருக்கு வெகு சீக்கிரத்தில் அநர்த்தம் உண்டாகிவிடுவது நிச்சயம்.

குமாரசாமிபிள்ளை :—இதில் ஓர் அதிசயம் என்னவென்றால், வெவ்வேறு இடத்தில் உள்ள இத்தனை எஜமானத் துரோகிகளும் எங்கேயோ உள்ள ஒரு புஷ்பாங்கிக்கு பவ்யமானவர்களாய் அவளிடம் போய்த் தங்கள் பொதி மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டி யிருக்கிறார்களே! அதுவல்லவா அசாத்தியமான விஷயமா யிருக்கிறது!

திகம்பரசாமியார் :—அதை நாம் அப்படிக் கருதக் கூடாது. புஷ்பாங்கி தனது சதியாலோசனையை நிறைவேற்ற இத்தனை இடங்களில் உள்ளாள்களைப் பிடித்துத் தன் வலையில் சிக்க வைத்துக்கொண்டிருக்கிறாள் என்று நாம் கருதினால், அது சாத்தியமானதாகிவிடும்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை :—இதற்கு அத்தாட்சியாக நாம் நேற்று இந்த சர்வே ஆபீஸருடைய சேவகன் செய்த காரியத்தைக்கூடக் குறிப்பிடலாம். குமாரசாமிபிள்ளையினுடைய பணம் அந்த சேவகனை அவருக்கு குலாம் ஆக்கி வைத்து விட்டதே. அதேபோலத்தான் புஷ்பாங்கியும் பணம் முதலிய பலவகையான கவர்ச்சிகளால் எஜமானத் துரோகிகளை சம்பாதித்துக் கொண்டிருப்பாள்—என்றார்.

அதைக்கேட்டு குமாரசாமிபிள்ளை முதலியோர் கலக்கென்று நகைத்தனர். அப்போது கண்ணப்பா, திகம்பரசாமியாரை நோக்கி, "பட்டணத்தில் துரைஸாமி நிராதரவாக விசாரணைக் கைதியா யிருக்கிறாரே. நான் இப்போதே புறப்பட்டு மோட்டார் வண்டியிலேயே போய், அவருக்கு தைரியம் சொல்லி, அவருடைய போஜனம் முதலிய சௌகரியங்களைக் கவனிக்கிறேன். ஸ்வாமிகள் எப்படியாவது முயன்று மூன்று சிநேகிதர்களையும், அந்தப் பெண் பேயின் வஞ்சக வலையிலிருந்து தப்பவைத்து மீட்கவேண்டும். ஏற்கனவே ஸ்வாமிகள் எங்கள் வேண்டுகோள் இல்லாமல் சுதாவாகவே



பல தடவைகளில் எங்கள் குடும்ப விளக்கை ஏற்றி வைத்தவர்கள். ஆகையால், இதைப்பற்றி நான் ஸ்வாமிகளிடம் கேட்டுக்கொள்வதே அநாவசியமான காரியம்" என்றார்.

உடனே திகம்பரசாமியார், "எங்கும் நிறைந்துள்ளவர் கடவுள். அவர்மீதே பாரத்தைப் போட்டு அவரையே புகலிடமாய் நம்பி யிருந்தால் அவர் தோன்றாத் துணைவரா யிருந்து அவர்களை எப்படியும் காப்பாற்றியே தீருவார்; அவர் எப்படித்தான் வேலை செய்கிறார் என்பதையோ, இன்ன காரியத்தை இன்னவிதமாகத்தான் நிறைவேற்றுவார் என்பதையோ முன்னதாக அறிவதென்பது எந்த மேதாவிக்கும் பலியாத காரியம். ஆகையால், நடக்க நடக்கப் பார்த்துக் கொள்வோம். நீ போய் உன் தகப்பனார் தாயார் முதலியோர் இவ் விஷயங்களைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கும்படி சொல்லி தைரியப்படுத்திவிட்டு, உடனே பட்டணம் போய் துரைஸாமியின் விஷயத்தை கவனி. நீ போகும் போது உன் எஜமானி வடிவாம்பாளையும் அழைத்துக் கொண்டுபோய் தேனாம்பேட்டையில் அவர்களுடைய பங்களாவில் இரு. வடிவாம்பாள் மோகனாம்பாளிடம் பேசி உண்மையைத் தெரிந்து கொள்வாள்—என்றார். அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை முடிவுற்றது. உடனே கண்ணப்பா அங்கிருந்த மூவரிடத்திலும் செலவு பெற்றுக் கொண்டு போய்விட்டார்.

அதன்பிறகு திகம்பரசாமியாரும், மற்ற இருவர்களும் மேலும் நெடுநேரம் வரையில் சம்பாஷித்திருந்தனர். முடிவாக திகம்பரசாமியார், "குமாரசாமீ, நீயும், மீனாட்சிசுந்தரமும் இன்றைய இரவு வண்டியில் போகப்போகிறீர்களே. நீங்கள் பட்டணத்திலிருந்து திரும்பிவர எத்தனை நாட்கள் பிடிக்குமோ என்னவோ, உன் சிநேகிதன் ராம

ராஜா-விடம் பிளான்களைக் கொடுக்கவேண்டாமா?" என்று புன்னகையோடு மொழிந்தார்.

குமாரசாமி, "ஆம். அதை நான் அடியோடு மறந்துவிட்டேன். இவைகளில் முனிஸிபாலிட்டி பிளான் நிரம்பவும் முக்கியமானதென்று அவன் சொன்னான். எல்லாவற்றிற்கும் நான் இப்போதே மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு தஞ்சைக்குப் போய் அவனுடைய வீட்டையடைந்து, அவனிருந்தால் அவனிடம் கொடுத்துவிட்டு வருகிறேன்; இல்லாவிட்டால், அவனுடைய சம்சாரம் முதலிய சொந்த மனிதர்களிடம் கொடுத்துவிட்டு வருகிறேன். அவனுக்குக் கொடுப்பதாக வாக்களித்த மிகுதிப் பணத்தையும் கொண்டுபோகிறேன்" என்றார்.

திகம்பரசாமியார், "அதை மறக்காதே. திருடருக்குள்ளும் நாணயம் இருப்பதுதான் நல்லது" என்று வேடிக்கையாக மொழிந்தார்.

உடனே குமாரசாமிபிள்ளை தமக்குத் தேவையான பணத்தையும் படங்களையும் எடுத்துக்கொண்டு, மோட்டார் வண்டியிலேறித் தஞ்சையை நோக்கிச்சென்றார். சென்றவர் அதன் பிறகு சுமார் மூன்று மணி காலத்திற்குப் பின்னர் திரும்பிவந்து சேர்ந்தார். அவருடைய முகம் அதீதமான விசனத்தையும், வாட்டத்தையும், ஆச்சரியத்தையும் தோற்றுவித்தது. அவரைக் கண்டவுடன் மீனாட்சிசுந்தரம்பிள்ளை தமது இயற்கைப்படி சந்தோஷமுகமலர்ச்சி காட்டி "என்ன சேதி? ஏன் உங்கள் முகம் ஒரு மாதிரியாயிருக்கிறது! படங்களையும் பணத்தையும் கொடுத்துவிட்டீர்களா?" என்றார்.

அதைக் கேட்ட குமாரசாமிபிள்ளை, "இது பெரிய விநோதமாக இருக்கிறது! அந்த சேவகன் தான் ராணிவாய்க்



கால் சந்தில் 5003-ம் நம்பர் வீட்டில் இருப்பதாகச் சொன்னான். நான் போய்ப் பார்த்ததில், அந்தத்தெருவில் 500 வீடுகள் கூட இல்லை. அந்தச்சந்தின் கடைசி நம்பர் 235. எனக்கு இது பெரிய ஏமாற்றமாய்விட்டது" என்றார்.

அதைக் கேட்டு திகம்பரசாமியாரும், மீனாட்சிசுந்தரம்பிள்ளையும் ஆச்சரியத்தோடு கூடிய சந்தோஷ முகமலர்ச்சி காட்டி குமாரசாமிபிள்ளையின் முகத்தை உற்று கவனித்தனர்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை:-ஒரு வேளை அவன் 53 என்று சொன்னானோ என்னவோ. நீங்கள் 5003 என்று தப்பாக எண்ணிக் கொண்டீர்களோ என்னவோ!

குமாரசாமிபிள்ளை:—நான் உடனே அதை ஒரு காகிதத்தில் குறித்துக்கொண்டேன். அந்தக் காகிதம் இதோ இருக்கிறது; பாருங்கள்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை:-(காகிதத்தை வாங்கிப்பார்த்துவிட்டு) ஆம். 5003 என்றுதான் எழுதியிருக்கிறீர்கள்.

திகம்பரசாமியார்:—இந்த நம்பரைக் குமாரசாமி காட்டியபோதே எனக்குள் சந்தேக முதித்தது. சென்னைப் பட்டணத்தில் எல்லாவற்றையும் விட தங்கசாலைத்தெருவு அதிக நீளமானது. அது சுமார் 2 மயில் தூரம் இருக்கும். அதில் உள்ள வீடுகளின் மொத்தம் 500-ம் சொச்சமும். தஞ்சாவூர்ப் பட்டணத்தில் எந்தத்தெருவும் இரண்டு மயில் நீளமில்லை. அப்படி இருக்க ஒரு சிறிய சந்தில் 5003 வீடுகள் இருப்பதென்றால், அது கட்டுக்கதைபோல் என் மனதிற்குப் பட்டது.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை:—சென்னையில் எல்லாம் பெரிய மாடி வீடுகள். தஞ்சையில் உள்ள ஒரு சந்தில் எல்லாம் ஓட்டன் குடிசைகளாயிருந்தாலும் இருக்கலாமல்லவா.

திகம்பரசாமியார்:—நன்றாகச் சொல்லுகிறாய். வீட்டிற்கு பதிலாக ஜாதிக்காய்ப் பெட்டிகளை வரிசையாய் வைத்திருக்கிறார்கள், என்றும் அதில் மனிதர்கள் வசிக்கிறார்கள் என்றும் சொல்லாமல் இதோடு விட்டாயே!

மீனாட்சிசுந்தரம்பிள்ளை:—(குமாரசாமிபிள்ளையை நோக்கி) நம்பரில் தவறு இருந்தால், அவனுடைய பெயரைச்சொல்லி விசாரித்துப் பார்த்திருக்கலாமே.

குமாரசாமிபிள்ளை:—விசாரிக்காமலா வந்தேன். முதலாவது நம்பர் வீட்டிலிருந்து ஒவ்வொரு வீடாய் நுழைந்து, 235 வீடுகளுக்கும் போய் விசாரித்துப் பார்த்துவிட்டேன்; சர்வே ஆபீஸ் சேவகன் ராமராஜு என்று எவனும் அந்த சந்தில் குடியில்லை என்று தெரிந்துகொண்டேன்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை:—அப்படியானால் சர்வே ஆபீஸில் போய் விசாரிக்கிறதுதானே?

குமாரசாமிபிள்ளை:—அதையும் விசாரித்து விட்டேன். தேவாசீர்வாதம்பிள்ளை என்ற பெயருடைய சர்வே ஆபீஸரும் இல்லையாம்; ராமராஜு என்னும் சேவகனுமில்லையாம். இந்த ஜில்லாவின் சர்வே வேலை முழுதும் மூன்றுமாத காலத்திற்கு முன்னமே தீர்ந்து பூர்த்தியடைந்து விட்டதாம். இப்போது மேல் தனிக்கை முதலிய எதுவும் நடக்கவில்லையாம்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை:— அப்படியானால், நீங்கள் சொன்னதெல்லாம் பொய்யா? யாரோ ஒரு சர்வே ஆபீஸரும், அவருடைய சேவகனும், கூலியாட்களும் வந்து அளந்து பார்த்து மேல் தனிக்கை செய்ததாக நீங்கள் தானே சொன்னீர்கள். இப்போது எல்லாம் கனவாய்ப் போய்விட்



டதா! நீங்கள் எங்களிடம் உண்மையை மறைத்து ஒரு கட்டுக் கதையைச் சொன்னீர்கள் என்று நினைக்கிறதா?

குமாரசாமிபிள்ளை:—அவர்கள் இங்கே வந்து இந்த பங்களாவை அளந்தார்களே. கண்ணப்பா, சிவகாமி எல்லோரும் அவர்களைப் பார்த்தார்களே. நான் மாத்திரம் பார்த்திருந்தால், அது கனவென்று சொல்லலாம். மற்றவர்களும் பார்த்திருக்கிறார்கள், நான் பிளான்களை யெல்லாம் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். அப்படி இருக்க, இது எப்படிப் பொய்யாகும். அவர்கள் வந்தது நிஜமான விஷயம். ஆனால் அவர்கள் சர்வே இலாகாவைச் சேர்ந்தவர்கள் அல்லவென் பதும், யாரோ வேஷதாரிகள் என்பதும் இப்போது நிச்சயமாகத் தெரிகின்றன.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை:—போகட்டும். நீங்கள் திருவையாறு முதல் ஒவ்வொரு பங்களாவாய்ப் போய் அலைந்து தவித்ததைக் கண்டு சகியாமல் அந்த வேஷக்காரர்கள் வந்து உங்களுக்குக் குறுக்கு வழியைக் காட்டி உதவி செய்தார்கள் போலிருக்கிறது.

குமாரசாமிபிள்ளை:—வாஸ்தவந்தான். அவர்களை நான் வேஷதாரிகள் என்று சொன்னது தவறுதான். என்னுடைய அவஸ்தையைக் கண்டு பொறாமல் கடவுள்தான் அப்படி வந்து உதவி செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள் என்று நான் இப்போது எண்ணுகிறேன். இதிலிருந்து எனக்கு இன்னொரு திடமான நம்பிக்கையும் ஏற்படுகிறது. நாம் செய்யவேண்டிய அபார வேலைகள் இனிதான் பாக்கியிருக்கின்றன. இப்போது வந்து சுலபத்தில் உண்மையைக்காட்டிய தோன்றாத் துணைவர்கள் இனியும் இதேபோல வந்து உதவிபுரிந்து விஷயங்களை விளக்குவார்கள் என்ற நம்பிக்கை

எனக்குள் உண்டாகிறது. அவனின்றி ஓரணுவும் அசையாது என்கிறபடியே காரியம் நிறைவேறிக்கொண்டு போகிறது— என்றார்.

அதோடு அவர்களுடைய சம்பாஷணை முடிவடைந்தது. எல்லோரும் எழுந்து தம் தம் அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந்தனர். பகற்பொழுது கழிய, மாலை நேரம் வந்தது.

அப்போது திகம்பரசாமியாருக்கு சென்னையிலிருந்து ஓர் அவசரத்தந்தி வந்தது. அதில் அடியில் வருமாறு விஷயம் காணப்பட்டது :—

திகம்பரசுவாமிகள்
மன்னார்குடி

இன்று காலையில் நான் தங்களிடம் செலவு பெற்று வீட்டிற்குப் போய், எல்லோரையும் தைரியப்படுத்திவிட்டு சென்னைக்குப் புறப்பட்டேன். அப்போது, உங்கள் உத்தரவின்படி என் மனைவி வடிவாம்பாளையும் அழைத்துக்கொண்டு போய், தேனாம்பேட்டையில் திருநடனவைபவம்பிள்ளையின் பங்களாவில் தங்கினேன். உடனே என் மனைவி மோகனாம்பாளுடன் தனிமையில் பேசி, அவள் கந்தசாமிக்கு ஏதேனும் கடிதம் எழுதிய துண்டாவென்று தந்திரமாக விசாரிக்க, அந்தப் பெண் அடியில் வருமாறு ஒரு கடிதம் எழுதியதாகவும், அதைத் தவிர தான் எதையும் எழுதவில்லையென்றும் அவள் சொல்லி, பிரமாணம் செய்தாளாம்.

அந்தக் கடிதத்தின் விஷயம் அவசியம் உங்களுக்குத் தெரியவேண்டிய தாகையால், செலவைப் பொருட்படுத்தாமல், அதைப் பூர்த்தியாய்த் தந்தியின் மூலம் உங்களுக்கு இதோடு அனுப்பியிருக்கிறேன். இதை வைத்துக்கொண்டு உண்மையைக் கண்டுபிடிப்பது சுலபமா யிருக்குமென்று நம்புகிறேன்.



மோகனம்பாளுடைய கடிதம்

மகா-ள-ள-ஸ்ரீ மகாகனம் பொருந்திய நீதிபதியவர்கள் திவ்ய சமுகத்திற்கு அடியாளான தங்கள் எதிர்கால மைத்துனி மோகனம்பாள் அநேக தெண்டனிட்டு மிக வணக்கமாய் எழுதிக்கொள்ளும் விக்ஞாபனம்.

அடியாள் தங்களுக்குக் கடிதம் எழுதுவது ஸ்திரீ தர்மத்திற்கு சிறிதும் ஒவ்வாத விஷயமென்பதை நான் நன்றாக உணர்கிறேனாலும், முக்கியமான இரண்டு காரணங்களைக் கருதி ஆபத்தில் பாபமில்லையென்ற நீதியைக் கடைப்பிடித்து நான் இதை எழுதத்துணிகிறேன்.

தாங்கள் இரண்டாவதாகச் செய்துள்ள விவாக ஏற்பாடு இரண்டு பதிவிரதைகளின் கற்பிற்குக் களங்கமுண்டாக்குவதா யிருப்பதால், அதனால் இரண்டு உயிர்கள் நாசமாகும் பெருத்த அபாய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட துக்ககரமான சம்பவம் நேருமானால், நிஷ்காரணமாய் இரண்டு பெண்களைக் கொன்றதான பெரும்பாவம் தங்களை வந்தடைவதும் நிச்சயம்.

உலகத்துக்கு நீதி வழங்கும் தாங்கள் தங்கள் சொந்த விஷயத்தில் வித்தியாசமாக நடக்கவே மாட்டீர்களென்பது நிச்சயம். தங்கள் முதல் ஏற்பாட்டை தங்கள் தந்தையார் எங்களுக்குத் தெரிவிக்க, அதை எங்கள் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர். அதன்படி என் அக்காள் தங்களுக்கும், நான் தங்கள் நண்பரவர்களுக்கும் வாழ்க்கைப்பட வேண்டுமென்ற செய்தியை எங்கள் பெற்றோர் எங்களுக்குத் தெரிவிக்க, நாங்கள் அதை வேதவாக்கியமாய் ஏற்றுக்கொண்டோம். அது முதல் எங்கள் மனதில் எங்களெங்களுடைய எதிர்கால பர்த்தாவின் வடிவமும், எண்ணமும் பதிந்து போயின. எங்களுடைய ஆசாபாசங்களும் எங்களெங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பர்த்தாவின்மேல் உடனே உண்டாகிவிட்டன.

தங்களுடைய இரண்டாவது ஏற்பாட்டினுல், இந்த நிலைமை அடியோடு மாறவேண்டியதாயிருப்பதால், அது எங்களுடைய மனப்பரிசுத்தத்திற்குப் பெருத்த களங்கத்தை யுண்டாக்குவதாயிருக்கிறது. அப்படி எங்கள் மனத்தைக் களங்கப்படுத்திக் கொள்வதைவிட நாங்கள் எங்கள் உயிரை விடுவதே சிறந்ததென்று கருதக்கூடியவர்கள்.

நாங்கள் எங்கள் பெற்ரேருடைய விருப்பத்திற்கு மாருக எதையும் பேசத் துணியாதவர்கள். அவர்கள் தங்களுடைய இரண்டாவது ஏற்பாட்டை அங்கீகரித்துத் தங்களுக்கு முடிவாக எழுதிவிட்டார்களாதலால், இனி அவர்கள் சூரிய சந்திரர் வடக்கு தெற்காகப் போவதா யிருந்தால்கூட தங்கள் சொல்லுக்கு மாறுன விஷயத்தை மறுபடி பிரஸ்தாபிக்கவே மாட்டார்கள்.

ஆகவே, உலகத்தாருக்கு நீதியை வழங்கும் மகாப் பிரபுவான தாங்கள், யாதொரு குற்றமும் மனதால்கூட செய்ய அறியாத பேதைப்பெண்களாகிய எங்களுக்கு மாத்திரம் நீதி வழங்க மறுப்பீர்களென்று நினைக்க ஏது வில்லை யாகையால், தாங்களே புகலாகக்கருதி இதை நான் தங்களுக்கே விக்ஞாபனம் செய்து கொள்ளுகிறேன். நான் இவ்விதம் தங்களுக்கு எழுதியது எங்கள் பெற்ரேருக்குத் தெரிந்தால், அப்போதும் எங்களுக்கு மரணம் நேருவது நிச்சயம்.

ஆகையால், தங்கள் சித்தத்திற்கு எது யுக்தமாகப் படுகிறதோ அதைச் செய்து, எங்கள் கற்பிற்குக் களங்கமோ, உயிருக்கு ஹானியோ, ஏற்படாமல் காத்து ரக்ஷிக்கவேண்டும். இங்ஙனம்,

*தங்கள் ஆப்த நண்பரின் எதிர்கால அடியாள்,*

மோகனம்பாள்.

*—என்று எழுதப்பட்டிருந்த தந்தியைப் படித்த திகம்பர சாமியார் அதை மற்ற இருவருக்கும் காட்டவே, அவர்கள் திடுக்கிட்டுத் திகைத்துப்போயினர்.*


தமிழ் நாட்டில் இதுவரையிலும் கண்டும் கேட்டும் அறியாத ஒரு புதுமை! பிரதி மாதமும் ஒரு நாவல்!!

# நவரசமாலிகா

என்னும் மகா புதுமையான மாதாந்த நாவல் சஞ்சிகை ஆரம்பமாய் விட்டது. உங்களை என்றும் சந்தோஷசாகரத்தில் அமிழ்த்த—உங்கள் கவலைகளை முற்றும் ஒழிக்க—ஒவ்வொரு மாதமும், கற்கண்டுத் துண்டுகளைப் போல் தித்திக்கும் வெகு ருசிகரமான நாவல்கள் குண்டு குண்டாய் இனி உங்கள் வீடு வந்து சேரும். இந் நாவல்களில் பல சந்தர்ப்பங்களில் தோன்றும் கௌரவ இன்ஸ்பெக்டர் ஜெனரல் திகம்பர சாமியார் அவர்களின் அற்புதத் திருவிளையாடல்கள் உங்களை அளவு மீறிய குதூகலத்தில் ஈடுபடச் செய்யும். இதன் உண்மையை ஒவ்வொருவரும் அனுபவத்தில் பரீட்சித்துப் பார்த்துக்கொள்ளலாம். இந் நாவல்களைப் படித்து இவைகளின் இன்பச் சுவையை அநுபவிக்காவிடில் நீங்கள் உலகத்தில் முக்கியமாய் அனுபவிக்க வேண்டிய இன்பங்களில் ஒன்றை இழந்தவர்களாவீர்கள் என்பது நிச்சயம்.

உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் !!!

குறிப்பு:—இப்போது நீலலோசனி, முத்துலக்ஷ்மி, கலியாணசுந்தரம் என்னும் 3 நாவல்கள் வெளி வந்து விட்டன. நான்காவது நாவல் 1935-ஆ பிப்ரவரி-மீ கடைசியில் வெளிவரும்.


[முழு விவரம் மறு பக்கம்]

625

621

# நவரசமாலிகா

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் B. A., இதன் ஆசிரியர். 1934-ம் ளு நவம்பர் மீ முதல் பிரதி மாதமும் நவ ரசங்கள் பொருந்திய ஒரு முழு நாவல் வெளிவரும். ஒவ்வொரு நாவலும் ரூ. 1—2—0 விலை யுள்ளதாயும் டெமிகிரவுன் அளவில் சுமார் 200 பக்கங்களுக்கு மேற் கொண்டதாயு மிருக்கும்.

இதன் வருட (அதாவது 12 முழு நாவல்களின்) சந்தா ரூ. 8—0—0. ஆறு மாத (அதாவது 6 முழு நாவல்களின்) சந்தா ரூ. 4—8—0. சந்தாத்தொகை முன் பணமாக மணி ஆர்டர் செய்யவேண்டும். வி. பி. யில் அனுப்பப்படுவதில்லை. சிலோன், சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளி நாட்டிற்கு ஒரு வருட சந்தா ரூ. 10-0-0. பிரதி மாதமும் வெளிவரும் ஒவ்வொரு நாவலும் தபால் பார்சல் மூலமாய் அனுப்பப்படும்.

நமது நாவல் வல்லரசு துரைசாமி ஐயங்கார் B. A. அவர்களால் தமது நிகரற்றதும், ஒப்புயர் வற்றதுமான அபூர்வ கற்பனா சக்தியால் தேன் ஒழுகும் நடையில் எழுதப்படும் நாவல்களை, பிரதி மாதமும் படித்து இன்புற இவ்வரிய சந்தர்ப்பத்தைக் கைவிடாமல் உடனே சந்தாதாரராய்ச் சேரக் கோருகின்றனம்.

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், மதருஸ்.

தமிழ்நாடு ... நூலகம்
99432

இதுவன்றி, மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திரங்கள், யந்திர தந்திர கலைகள், சரித்திர சமய ஆராய்ச்சிகள், செய்யுள்களைப்பற்றிய ஆராய்ச்சிகள், உலக விசித்திரங்கள் முதலிய புதுமை புதுமையான விஷயங்கள் சித்திரப் படங்களுடன் வெளியாகும். இதில், பண்டிதர் முதல் பாமரர் வரையில் சகலமானவர்களும் படித்து ஆநந்தமடையும்படியாக விஷயங்கள் மிக தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கும்.

இதன் வருஷ சந்தா, உள்நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 3-8-0, தனிப் பிரதியின் விலை, உள்நாடு 3 அணா, வெளிநாடு 6 அணா. சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் தங்கள் சந்தாப் பணத்தை மணியார்டராகவே அனுப்பவேண்டும். வி. பி.யில் பத்திரிகை அனுப்பப் படுவதில்லை.

ஒரு வருஷத்தில் எப்போது சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும், அந்த வருஷத்தின் முதல் சஞ்சிகையிலிருந்து சந்தாதாரராய்ச் சேர்த்துக் கொள்ளுவோம்.

கீழே உள்ள சரியான விலாசத்தைக் கவனித்து, சந்தாதாரர்கள் எழுதவேண்டும்; அல்லது, பணம் அனுப்பவேண்டும். எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைகளுக்கு எழுதுக.

விளம்பரங்களின் பண விகிதங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், கடிதம் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

வடுவூர். கே. துரைஸாமி ஐயங்கார், பி.ஏ.
ஓரியன்டல் ஹோம் யூனிவர்ஸிட்டி ஆபீஸ்
102, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

Regd No. M. 3028 TAMIL PERUMATTI

PRINTERS: RAMULU PRESS, 58, MANNARSAWMY KOIL ST., RAYAPURAM, MADRAS.
PUBLISHERS: THE ORIENTAL HOME UNIVERSITY OFFICE, TRIPLICANE, MADRAS.